Volume : 6 Issue - 10
Volume : 7 Issue - 1
ஜனவரி 2014

# வைகறை வெளிச்சம்

விலை ரூ.20
ஆசிரியர் மு. குலாம் முஹம்மது
ரபியுல் அவ்வல் 1435








# நான் ஏன் முஸ்லிம் ஆனேன்?

தொடர் – 6

மௌலவி அபுல் ஹஸன் ஆலிம் ஃபாஸி M.A.,

**சுதந்திரமடைந்ததில்** இருந்து பல கலவரங்களைக் கண்ட நாடு நமது இந்தியா. கலவரம் நடக்காத மாநிலம் எதுவும் இந்தியாவில் இல்லை எனும் அளவுக்கு எல்லா மாநிலங்களிலும் கலவரங்கள் நடந்துள்ளன. அனைத்தும் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்கள்.

இக்கலவரங்கள் அனைத்தையும் முழு மூச்சுடன் முன்னின்று நடத்துபவை இந்துத்துவ இயக்கங்கள். பல்வேறு பெயர்களில் செயல்பட்டு வரும் இவை அனைத்தும் இந்திய முஸ்லிம்களின் முழுநேர எதிரிகளாக இருப்பவை.

இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும் அழிப்பதை கொள்கை இலட்சியமாக கொண்டு இயங்கிடும் இத்தகைய இந்துத்துவ இயக்கங்களை தொடங்கியவர்களும், இப்போது வரை இவற்றை நடத்திக் கொண்டு இருப்பவர்களும் உயர்சாதியினரான பிரமாணர்களே..

இத்தகைய பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்தான் ராவ். பிராமணர்களில் நடுத்தர குடும்பத்தைச் சார்ந்த இவர் பள்ளிக் கல்வியுடன் இந்து வேதங்களையும் கற்றிருந்தார்.

அவர் சார்ந்த சமூக சூழலின் காரணமாக ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் சேர்ந்தார். விளைவு முஸ்லிம்களை வெறுக்கும் குணம் இயல்பாக அவரிடம் வந்து சேர்ந்தது.

திருக்குர்ஆனில் முரண்பாடுகள் இருப்பதாக ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் அவருக்கு கூறப்பட்ட கருத்தை நம்பிய அவர், அவற்றை கண்டுபிடிக்கும் முயற்சிகளில் இறங்கினார்.

திருக்குர்ஆன் ஆங்கில மொழிபெயர்ப்பு பிரதியினை வாங்கினார். படித்தார். முரண்பாடு எதனையும் காண இயலாத அவர், கடைசியில் இஸ்லாத்தை தனது வாழ்க்கை நெறியாக ஏற்றார்.

**நான் ஏன் முஸ்லிமானேன்?**

இஸ்லாத்தை ஏற்றது குறித்து ராவ் கூறியதாவது: நான் நடுத்தர வகுப்பு வைதீக பிரமாண குடும்பத்தைச் சேர்ந்தவன். எனது தந்தை டெக்ஸ்டைல் என்ஜினியர். தாய் தனியார் பள்ளி ஆசிரியை.

பள்ளிக் கல்வியுடன் எனது தாய் மாமாவிடம் வைதீக கல்வி கற்றேன். எனது குடும்பத்தவர்கள் எல்லோரும் வைதீக கல்வி கற்றவர்களே. இதனால் முஸ்லிம்கள் மீதான வெறுப்பு சிறு வயதிலேயே உள்ளத்தில் ஆணி அடித்தது போன்று பதிந்திருந்தது. கொஞ்சம் பெரியவனானதும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் சேர்ந்தேன். முஸ்லிம்கள் மீதான வெறுப்பு இன்னும் அதிகமானது.

பள்ளிவாசல்களில் கூறப்படும் பாங்கொலி எனக்கு அதிக எரிச்சலைத் தந்தது. மசூதிக்கு அருகில் ஏதேனும் விழா நடந்தால், வாய்ப்பை பயன்படுத்தி பாங்கு சப்தம் கேட்காதவாறு மியூசிக் சப்தத்தை அதிகமாக்குவேன். இந்நிலையில் பள்ளி விடுமுறை காலம் வந்தது. இரண்டு மாதம் விடுமுறை. எனது தாயாரும், சகோதரியும் அருகில் இருந்த முஸ்லிம் வணிக நிறுவனத்தில் கோடை கால வேலையில் சேர்ந்தனர். என்னையும் சேருமாறு கட்டாயப்படுத்தினர். ஏற்கனவே என்னுள் ஊறிப் போயிருந்த வெறுப்பால் முஸ்லிம் வணிக நிறுவனத்தில் வேலைக்கு சேர துளியும் எனக்கு விருப்பமில்லை.

எனது தாயார் என்னை திட்டினார். என்னால் குடும்பத்திற்கு எந்த பலனும் இல்லை என்றார். இதனால் வேதனையடைந்த நான் வேறு வழியின்றி அந்நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தேன்.

அந்நிறுவனத்தின் முஸ்லிம் நிறுவனர் அங்கு வேலை செய்த பணியாளர்கள் அனைவரையும் நன்கு கவர்ந்திருந்தார். எனது தாயாருக்கும், சகோதரிக்கும் கூட அவரை பிடித்துப் போயிற்று. எனினும் நான் அவரை வெறுக்கவே செய்தேன். யாராவது அவரை புகழ்ந்து ஏதேனும் கூறினால் அதனைக் காது கொடுத்துக் கேட்க மாட்டேன். இந்நிலையில், அந்நிறுவனத்தில் வேலை செய்த முஸ்லிமல்லா தவர்களில் சிலர் இஸ்லாத்தை ஏற்றனர். இது எனக்கு இன்னும் வெறுப்பையும், அவர் மீதான கோபத்தையும் அதிகப்படுத்தியது.

அத்துடன் இன்னொன்றையும் சவாலாக எடுத்துக் கொண்டேன். அஃது நான் பின்பற்றும் இந்து மதம்தான் உண்மை மதம் என்பதை அம்முஸ்லிம் முதலாளிக்கு உணர்த்த வேண்டும். இதற்காக உழைத்தேன். எனது பொது அறிவை அதிகப்படுத்திட நிறைய படித்தேன்.

எனது இம்முயற்சியில் இஸ்லாம் குறித்தும் தெரிந்து கொள்ள முடிவு செய்தேன். அப்போதுதான் அவரிடம் இஸ்லாத்தின் குறைகளை சுட்டிக் காட்டி இந்து மதத்தை உயர்த்தி பேச முடியும்.

அதற்காக அப்துல்லாஹ் யூசுப் அலி என்பவரால் மொழிபெயர்க்கப்பட்ட திருக் குர்ஆன் ஆங்கில மொழிபெயர்ப்பு பிரதி ஒன்றினை வாங்கினேன். படித்தேன்.

திருக்குர்ஆனை படிக்க படிக்க எனது முந்தைய மதத்தின் மீது பல சந்தேகங்கள் உரு வாயின. நான் ஏதோ தவறான கொள்கையில் இருக்கின்றேன் என எனக்கு புரிந்து போனது.

கடைசியில் நான் பின்பற்றும் மதம் வெறும் கதை, கற்பனைகளை அடிப்படையாக கொண்டது என்ற முடிவுக்கு வந்தேன்.

பள்ளிக் கல்வியை முடித்திராத எனக்கு இப்போது பல கேள்விகள் முன் நின்றன. இப்போது நான் என்ன செய்வது? எங்கு செல்வது? இந்த உண்மை எனக்கு ஏன் இவ்வளவு நாள் தெரியாமல் போனது? எனது பொறுப்பு என்ன?

**அல்லாஹ் அருள் வாசல்களை திறக்கவே செய்தான். எனக்கு நிறைய வாய்ப்புகள் வரவே செய்தன. ஆனால் நேர்முகத் தேர்வில் பணி நேரங்களில் ஐந்து நேர தொழுகை தொழுதிட வாய்ப்பு குறித்து கேட்பேன். முடியாது என கூறப்பட்டால் அப்பணியில் சேர்வதை தவிர்த்து விடுவேன்.**

இவ்வாறு பல கேள்விகள் எனது சிந்த னையில் ஓடின. எனது மாணவர் பருவத்தில் இதற்கான விடைகளை தேட முடிவெடுத்தேன்.

எனது குடும்பத்தார்களிடமும், எனக்கு தெரிந்தவர்களிடமும் கேட்டேன். இறைவனை சிலையாக செதுக்கி வைக்கிறோம். பெயிண்ட் மூலம் வரைகிறோம். அவனை பார்த்தவர் யார்? குடும்பத்தார்கள் என்னிடம் சொன்னார்கள். இறைவனை யாரும் பார்க்கவில்லை. கற்பனை செய்து தான் வரையப்படுகின்றது என்று.

உடனே எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. திருக்குர்ஆனில் நான் படித்திருக்கின்றேன். இறைவனை யாரும் காண இயலாது. (அல் குர்ஆன் 6:103)

கொஞ்சம் மிச்சம் மீதி இருந்த நம்பிக் கையும் இப்போது அறுந்து போனது. விநாயகர், சாமுண்டேஸ்வரி, ராமன், சீதா என அனைத்து உருவங்களும் வெறும் கற்பனைகள் என எனக்கு புரிந்தது.

இத்தனை நாளும் இக்கற்பனைகளையா நான் இறைவன் என எண்ணி ஏமாந்தேன்.? என்னையே நான் நொந்து கொண்டேன்.

பின்பு ஒரு முறை எனது குடும்பத்தாரிடம் கேட்டேன். நமது வேதங்கள் சிலை வழி பாட்டை ஆதரிக்கவில்லை. நாம் ஏன் சிலை வைத்து வணங்க வேண்டும்?

உடனே எனது தாயார் என்னை திட்டி னார். பின்பு சொன்னார். நமது முன்னோர்கள் அவ்வாறே செய்தனர். நாமும் அதனை செய் கிறோம் என்றார்.

மறுநாள் திருக்குர்ஆன் படித்தேன். எதார்த்தமாக இரண்டாவது அத்தியாயமான பகறா அத்தியாயத்தின் 134 மற்றும் 170-வது வசனங்கள் எனது கண்களில் பளிச்சிட்டன. அவ்விரு வசனங்களும் பின்வருமாறு,

அல்லாஹ் இறக்கி வைத்த (இவ் வேதத்)தை பின்பற்றுங்கள் என அவர்களுக்கு கூறப் பட்டால் (அவர்கள்) அவ்வாறன்று, எவற்றின் மீது எங்களின் முன்னோர்கள் இருக்க நாங்கள் கண்டோமோ அவற்றையே நாங்கள் பின்பற்று வோம் என கூறுகின்றனர். அவர்களின் முன் னோர்கள் ஒன்றையும் அறியாதவர்களாகவும், நேர்வழி பெறாதவர்களாகவும் இருந்தாலுமா? (அவர்களை பின்பற்று வார்கள்). (அல்குர்ஆன் 2:170)

(மேற்கூறிய நபிமார்களாகிய) அந்தக் கூட்டத் தினர் சென்று விட்டனர். அவர்கள் செய்த (நற்) செயல் அவர்களுக்கே (பலனளிக்கும்) அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்று உங்களிடம் கேட்கப்பட மாட்டாது.

(அல்குர்ஆன் 2:134)

இது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நேற்றிரவு எதைப் பற்றி எனது தாயாரிடம் கேட்டேனோ அதற்கான பதில்கள் இப்போது நான் படித்த மேற்கண்ட வசனங்களில் இருந்தன. உண்மையில் நான் திகைத்துப் போனேன்.

அவ்வசனங்கள் எனது உள்ளத்தில் ஆழமாக பதிந்தன. சிலைகளை வணங்குவதை நிறுத்தினேன். பல தெய்வ வணக்கத்தை (Polytheism) பாவமாக பார்க்கத் தொடங் கினேன்.

இஸ்லாம் குறித்து இன்னும் தெரிந்து கொள்ள முடிவு செய்த நான், சூரா பகரா அத்தியாயத்தை படித்து முடித்தேன். அதில் சிலர் பற்றி குறிப்பிட்டிருந்தது. அவர்கள் உலக இலாப நோக்குடன் முழு மனது இன்றி இஸ் லாத்தை ஏற்றவர்கள். அவர்களை முனா ஃபிக்குகள் (நயவஞ்சகர்கள்) என்று திருக் குர்ஆன் குறிப்பிட்டது.

மேலும் திருக்குர்ஆனின் இன்னொரு வசனத்தையும் நான் படித்தேன். அவ்வசனம் பின்வருமாறு,

இன்றைய தினம் உங்களின் மார்க்கத்தை நிறைவு செய்து விட்டேன். உங்களின் மீது எனது அருளை முழுமைப்படுத்தி விட்டேன். இஸ்லாத்தை உங்களின் மார்க்கமாக அங்கீ கரித்து விட்டேன். (அல் குர்ஆன் 5:3)

இப்போது எனக்கு புரிந்தது. எனது மனதில் உள்ள எல்லா சந்தேகங்களுக்கும் திருக்குர்ஆனில் விடை உள்ளது.

தொடர்ந்து திருக்குர்ஆனை நான் படித் தேன். மனதளவில் இஸ்லாத்தை எனது வாழ்க்கை நெறியாக ஏற்றேன். அப்போது எனது படிப்பைக் கூட நான் நிறைவு செய்திருக்க வில்லை. எனவே .. படிப்பை நிறைவு செய்ய விரும்பினேன். இதற்கிடையில் இஸ்லாம் குறித்து எனக்குத் தெரிந்தவற்றை எனது குடும்பத்தார்களிடம் எடுத்துச் சொல்லவே செய்தேன்.

அல்லாஹ்வின் மகத்தான அருளால் எனது சகோதரி இஸ்லாத்தை வாழ்க்கை நெறியாக ஏற்றாள். படிப்பை முடித்த பின்பு நானும் எனது சகோதரியும் குடும்பத்தை விட்டு வேலை தேடி தனியாக தங்கியிருந்தோம். கையில் பணமோ, வேலையோ இன்றி தவித்த அந்நாட்களை அல்லாஹ் தான் கழியச் செய்தான். பின்வரும் திருக்குர்ஆன் வசனத்தை அப்பொழுது நான் நினைத்து பார்ப்பேன்.

மனிதர், நாங்கள் நம்பிக்கை கொண்டோம் என்று கூறினால் (மட்டும் போது மானது, அதனைப் பற்றி) அவர்கள் சோதிக்கப் படாமல் விட்டு விடப்படுவார்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்களா? (அல்குர்ஆன் 29:2)

பின்னர் அல்லாஹ் அருள் வாசல்களை திறக்கவே செய்தான். எனக்கு நிறைய வாய்ப்புகள் வரவே செய்தன. ஆனால் நேர்முகத் தேர்வில் பணி நேரங்களில் ஐந்து நேர தொழுகை தொழுதிட வாய்ப்பு குறித்து கேட்பேன். முடியாது என கூறப்பட்டால் அப்பணியில் சேர்வதை தவிர்த்து விடுவேன்.

கடைசியில் படிப்பு சம்மந்தப்பட்ட வேலை கிடைக்காததால், .. படிப்பை முடித்த நான் வெறும் 2000 ரூபாய் சம்பளத்துக்கு வேலை செய்தேன்.

சுமார் ஒரு வருடம் இவ்வாறே கழிந்தது. அல்லாஹ்வின் மகத்தான அருளால் நல்ல வேலை கிடைத்தது. முஹம்மது உமர் ராவ் எனும் அழகிய பெயரில் வாழ்ந்து வருகிறேன்.

☐

# இரண்டாவது இஸ்ரேல் நாடு இந்தியாவில் உதயம்

**இஸ்ரேலின்** இரண்டாவது நாடு விரைவில் இந்தியாவில் உதயமாவதற்கான வேலைகள் முழு மூச்சாக நடந்து வருகின்றது. இது உலகில் அதிகமான போதைப் பொருள் உற்பத்தி செய்யும் பர்மாவின் தங்க முக்கோணம் (Golden TRIANGLE) மற்றும் நாகாலாந்து போன்ற 3 மாநிலங்களை இணைத்து நாட்டை உரு வாக்கும் முயற்சியில் யூதர்கள் ஈடுபடுகின்றனர். இஸ்ரேல் என்கிற நாடு 1948ல் தோற்று விக்கப்பட்டது. பின்னர் முஸ்லிம்களை இனப் படுகொலை செய்து இந்நாடு அகலப்படுத்தப் பட்டது. இதே போன்று இன்னொரு இஸ்ரேல் நாட்டை தீவிரமாக உருவாக்கும் முயற்சி கடந்த 30 ஆண்டு காலமாக நடந்து வருகிறது. மணிப்பூர், மிசோராம் மற்றும் நாகாலாந்து மாநிலங்களில் உள்ள ஏழை இந்துக்கள் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களை யூத குருமார்கள் (rabbis) மதம் மாற்றி அவர்களை இஸ்ரேல் நாட்டிற்கு அழைத்துச் சென்று மூளைச் சலவை செய்கின்றனர். மேலும், அவர்களுக்கு வேலை வாங்கித் தருகின்றனர். இந்த ஏழை விவசாயக் குடும்பங்கள் தங்கள் பேச்சைக் கேட்கும்படி செய்கின்றனர்.

இந்த நாட்டை உருவாக்கும் திட்டம் உலகில் அதிகம் போதைப் பொருள் உற்பத்தி யாகும் மியான்மர் நாட்டில் இருந்து செயல் படுத்தப்படுகிறது. புதிய இஸ்ரேல் நாடு, சீனா, இந்தியா மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளை இணைத்து உருவாக்கப்படுகிறது. பல ஆண்டு களாக உலகில் பழமையான எண்ணெய்க் கிணறு கேஸ் எடுக்கும் இடமான திரிபுரா மாநிலம் மீது அமெரிக்காவிற்கு ஒரு கண் உள்ளது. அது இதன் அருகில் வருகிறது.

இரண்டாவது உலக யுத்தத்தில் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆளும் வர்க்கம் சீனாவிற்கு பல விதமான பொருள்களை கப்பலில் கொண்டு சென்று வரும்போது பர்மாவில் இருந்து வாகனம் வழியாக இந்த போதைப் பொருட்களை வங்காள விரிகுடா விற்குக் கொண்டுவந்து கப்பல் மூலம் தங்கள் நாட்டிற்குத் திரும்பி வந்து பணம் பார்த்தனர். தற்போது இமாச்சல பிரதேசம் உலகில் வளர்ச்சி அடையும் நகரங்களில் ஒன்றாக இருக்கிறது. இதற்கு முக்கியக் காரணம் யூதர்கள் இங்கு இருப்பதாகும். கிட்டத்தட்ட 20,000 யூதர்கள் உள்ளனர். இவர்களுக்கு இங்கு என்ன வேலை? இவர்கள் இங்கு தங்கி மறைமுகமாக இன்னொரு இஸ்ரேல் நாட்டை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இங்குதான் புத்த மத தலைவர் தலாய்லாமாவின் தர்மசாலா உள்ளது. உலகின் பல தலைவர்கள் மற்றும் மணாலி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் ஹிப்ரு மொழி பேசப்படுகின்றது. தர்ம சாலாவைச் சுற்றியுள்ள 10 கிராமங்கள் யூதர் களின் கட்டுப்பாட்டில் உள்ளது. தலாய்லாமா அமெரிக்காவின் CIA இடமிருந்து பல கோடி பணம் பெறுகிறார். இவருடைய நோக்கம் இமயமலையைச் சுற்றியுள்ள பகுதியான காஷ்மீரின் லடாக் மற்றும் அருணாச்சல பிரதேசத்தை இணைத்து புத்த நாடு ஒன்றை ஏற்படுத்துவதுதான். CIA மற்றும் யூத உளவுப் பிரிவான மொசாத், இங்கு இருந்து செயல்பட்டு புதிய இஸ்ரேல் உருவாக்குவதற்கான வேலையைச் செய்கிறது.

கிட்டத்தட்ட 20,000 யூதர்கள் உள்ளனர். இவர்களுக்கு இங்கு என்ன வேலை? இவர்கள் இங்கு தங்கி மறைமுகமாக இன்னொரு இஸ்ரேல் நாட்டை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இங்குதான் புத்த மத தலைவர் தலாய்லாமாவின் தர்மசாலா உள்ளது. உலகின் பல தலைவர்கள் மற்றும் மணாலி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் ஹிப்ரு மொழி பேசப்படுகின்றது. தர்மசாலாவைச்

சுற்றியுள்ள 10 கிராமங்கள் யூதர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. தலாய்லாமா அமெரிக்காவின் CIA இடமிருந்து பல கோடி பணம் பெறுகிறார். இவருடைய நோக்கம் இமய மலையைச் சுற்றியுள்ள காஷ்மீரின் லடாக் மற்றும் அருணாச்சல பிரதேசத்தை இணைத்து புத்த நாடு ஒன்றை ஏற்படுத்துவது தான். CIA மற்றும் யூத உளவுப் பிரிவான மொசாத், இங்கு இருந்து செயல்பட்டு புதிய இஸ்ரேல் உருவாக்குவதற்கான வேலையைச் செய்கிறது.

புதிய இஸ்ரேல் நாடு கிழக்கு ஆசிய நாடான பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தானுக்கு அருகில் அமையவுள்ளது. தீவிரவாதத்துக்கு எதிரான போர் என்ற போர்வையில் முஸ்லிம்களுக்கு எதிராக அமெரிக்கா யுத்தம் செய்து தனது .இராணுவப் படையை இங்கு நிறுவியுள்ளது. இதற்கு அருகில்தான் இந்தப் புதிய நாடு உதயமாக உள்ளது. மில்லி கெஸட் ஆன்லைன் தகவல்படி நாகலாந்து அஸ்ஸாம் குண்டுவெடிப்பு 2005-ல் நடந்தது. மத்திய அரசிடம் கூட சொல்லாமல் அஸ்ஸாம் மாநிலத்திற்கு உதவ அமெரிக்கா முன்வந்தது. இதற்குப் பின்னாலும் இஸ்ரேலின் இரண்டாவது நாடு திட்டமே உள்ளது. அமெரிக்க 'அங்கில் சாம்' இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்கள் உலக பூகோள அரசியலில் முக்கியமானதாக நினைக்கிறது.

மேலும், இந்த மாநிலங்களில் கிறிஸ்துவ போராளிகள் அமைப்பு இயங்கி வருகிறது. இவர்கள் தங்கள் அமெரிக்க இஸ்ரேல் எஜமானர்களுக்குத் தகுந்த சூழ்நிலையை உருவாக்கி வருகின்றனர். இவர்களுக்குப் பின் கிறிஸ்துவ மிஷனரிகள் செயல்படுகிறது. இந்த மிஷனரியில் உள்ளவர்கள் பெரும்பாலும் அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள். மிசோராமில் உள்ள அய்ஸ்வால் மாவட்டத்தில் வசிக்கும் 25 இலட்சம் மக்களை யூதர்களாக மதம் மாற்றி அவர்களை ஒரு கொடியின் கீழ் கொண்டு வந்து விட்டால் புதிய இஸ்ரேலை உருவாக்க முடியும் என்று யூத குருமார்கள் நினைக்கின்றனர். இதற்கான வேலையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், கிழக்கிலும் மேற்கிலும் புனித பூமி தங்களுக்கு உருவாகும் என்று பழைய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ளதை உண்மைப் படுத்துவதற்கான வேலையில் ஈடுபட்டு வருகின்றனர்.

நெல்லி படுகொலை 1983-ல் நடந்தது.

**கிட்டத்தட்ட 200 ஆண்டுகள் உளவு வேலையை இந்துக்கள் போர்வையில் பார்த்துள்ளனர். இவர்கள் பிரிட்டிசாரின் இராணுவ அதிகாரி களாகவும், உயரதிகாரிகளாகவும் பணியாற்றி, இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கியுள்ளனர்.**

இதில் 1500 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இங்கு உள்ள மலைவாழ் மக்களை யூதர்கள் இந்துத்துவ அமைப்பினரைத் தூண்டி விட்டு இப்படுகொலையை அரங்கேற்றினர். மேலும், தங்களைக் கொன்று குவித்த அப்போதைய காங்கிரஸ் ஆட்சியை முஸ்லிம்கள் நம்பினர் 2008 மும்பை தாக்குதலையும் இந்த யூத இந்துத்துவ அமைப்பு ஒன்றிணைந்து அரங்கேற்றியது. நாம் ஏற்கனவே சொல்லியது போன்று 'கர்கரேயைக் கொன்றது யார்?' புத்தகத்தில் சொன்ன தகவலின்படி யூத இந்துத்துவ அமைப்பான அபினவ் பாரத்தைச் சேர்ந்த புரோகித் மற்றும் மத்திய உள்துறையில் உள்ள அதிகாரிகள் இணைந்து மும்பை தாக்குதலை அரங்கேற்றியது. இந்த ஆளும் காங்கிரஸ் அரசு இதுவரை யூதர்களின் சாபாத் ஹவுஸ் தாக்குதலின்போது உள்ளிருந்த தீவிரவாதிகள் நன்கு பயிற்சி பெற்றவர்கள். இவர்கள் 60 கமோண்டாக்களை சுட்டுள்ளனர். சிலரைக் கொன்றுள்ளனர். இத்தாக்குதல் இஸ்ரேலில் உள்ள டெல் அவிலில் முடிவானது. இத்தாக்குதலில் அமெரிக்காவின் CIA கையும் உள்ளது. அமெரிக்க CIA யூதர்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. புரோபசர் மைக்கேல் சொடோஸ்கி கூறும் போது இந்தியாவின் தொடர்ச்சியான குண்டுவெடிப்புகள் 1. இந்து - முஸ்லிம் இடையே மோதலை ஏற்படுத்தவும் 2. இந்தியா - பாகிஸ்தான் இடையே பதற்றத்தை உருவாக்கவும் 3. இதன் மூலம் அமெரிக்கா தனது இராணுவ நடவடிக்கையை தெற்கு மற்றும் கிழக்கு ஆசியாவில் விரிவுபடுத்தவும் நடத்தப்பட்டது என்றார்.

16-ம் நூற்றாண்டிலேயே இந்தியாவில் யூதர்கள்

இந்தியாவில் யூதர்கள் 16ம் நூற்றாண்டிலே நுழைந்துவிட்டனர். இவர்கள் இங்கு இந்துக்கள் போல வாழ்ந்து, இங்கிருந்து உளவுத்தகவல்களை தங்கள் எஜமானர் இங்கிலாந்துக்கு அளித்தனர். இதனாலே பிரிட்டிசாரால் இந்தியாவை எளிதாகப் பிடிக்க முடிந்தது. இது 18ம் நூற்றாண்டில் நடந்தது. கிட்டத்தட்ட 200 ஆண்டுகள் உளவு வேலையை இந்துக்கள் போர்வையில் பார்த்துள்ளனர். இவர்கள் பிரிட்டிசாரின் இராணுவ அதிகாரிகளாகவும், உயரதிகாரிகளாகவும் பணியாற்றி, இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கியுள்ளனர். இதற்கு இவர்கள் இந்துக்களைப் போன்று நடந்து, உளவு பார்த்து, நம்மை திட்டம் போட்டு ஏமாற்றியுள்ளனர். இதனை தாங்கள் எவ்வாறு விசுவாசமாக இங்கிலாந்துக்கு இருந்தோம் என்பதை ஹம் S.கெமாக்கர் இஸ்ரேல் ஸ்கூல் கமிட்டி தலைவர் பாம்பே, எழுதிய பெனி இஸ்ரேல் - இந்தியா வரலாறு என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். இதனாலே இங்கிலாந்து இந்தியாவைப் பிடிக்க முடிந்தது என்றும் கூறியுள்ளார். மேலும், இந்திய விடுதலைப் போராட்டத்தை சாமர்த்தியமாக ஒடுக்கினோம் என்று கூறியுள்ளார். இவர்கள் தற்போது இந்துத்துவவாதிகளோடு இணைந்து இந்தியாவில் ஒரு இந்து ராஷ்டிரா ஏற்படுத்த உதவி செய்கின்றனர். இதன் காரணமே சம்ஜோதா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பு, மாலேகான், அஜ்மீர், ஐதராபாத், டெல்லி போன்ற இடங்களில் குண்டுவெடிப்பு நடத்தினர். யூதர்கள் இந்துத்துவவாதிகளுக்கு தனி இந்து ராஷ்டிராவை ஏற்படுத்தித் தந்து, அதன் மூலம் தனி இஸ்ரேலை இந்தியாவில் ஏற்படுத்த திட்டம் போட்டுள்ளனர். புரோகித் திடம் இருந்து கைப்பற்றப்பட்ட 18 லேப்டாப்களைத் திறந்து பார்த்தால் இந்த பிராஜக்ட்டின் முழு விவரத்தை நாம் அறியலாம். மத்திய அரசு இதனைச் செய்ய முன்வருமா? காஷ்மீரைப் பற்றிப் பேசும்போது நாட்டுப்பற்றைக் கூறும் இந்துத்துவவாதிகள், தங்களுக்கு ஒரு தனி இந்து ராஷ்டிரா வரும்போது, அதற்காக நாட்டின் ஒரு பகுதியை இஸ்ரேலுக்குத் தர முன்வந்துள்ளனர். என்னே நாட்டுப்பற்று? இனியாவது இந்திய அரசு செயல்பட்டு இந்த முயற்சியை முறியடிக்குமா?


# இப்போது விற்பனையில்...



## மால்கம் - X

அமெரிக்காவில் 2 லட்சம்
அமெரிக்கர்கள் இஸ்லாத்தை
ஏற்றுக் கொள்ளக் காரணமாக
அமைந்த ஷஹீத் மாலிகுல் ஷாபாஸ்
மால்கம் - x அவர்களின்
முழு வாழ்க்கை வரலாறு.

**விலை ரூ.80**

## சிறையில் எனது நாட்கள்

எகிப்தை இன்று ஆட்சி செய்து
கொண்டிருக்கும் இஹ்வானுல்
முஸ்லிமூன் இயக்கத்தைச் சார்ந்த
**ஜெய்னப் அல் கஸ்ஸாலி**
அவர்களின் சிறைக் கொடுமைகளை
சித்தரிக்கும் நூல்.

**ஆசிரியர் : ஜெய்னப் அல் கஸ்ஸாலி** **விலை ரூ.90**

## நாம் பிரிந்துவிட வேண்டாம்

**ஆசிரியர் : யூசுப் அல் கர்ளாவி**


நாம் 72 கூட்டங்களாகப்
பிரிய மாட்டோம் என்பதை
குர்ஆன் - ஹதீஸ் அடிப்படையில்
நிலைநிறுத்தும் அரிய நூல்

**விலை ரூ.175**

வெளியீடு : **வேர்கள் பதிப்பகம், 52/1, மண்ணடி, 4வது தளம், சென்னை-1. போன் : 81481 29887**

ஓரினச் சேர்க்கை

# மத்திய அரசா? மானங்கெட்ட அரசா?



**ஓரினச்சேர்க்கையில்** ஈடுபடுவது சட்டப் படி குற்றம் என்று 11-12-13 அன்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்திய தண்டனைச் சட்டம் 377வது பிரிவின்படி ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவோருக்கு அதிகபட்ச தண்டனையாக ஆயுள் தண்டனை விதிக்க முடியும் என்ற உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை நாம் முழு மனதுடன் வரவேற்கிறோம்.

**இந்த தண்டனை ஏன்?**

ஆணுக்குப் பெண், பெண்ணுக்கு ஆண் என்பதுதான் இறைவன் வகுத்த நியதி. இதற்கு எதிரான எந்தச் செயலும் தீமையில் தான் முடியும்.

ஒரு பாலினர் இணைவதை மருத்துவ விஞ்ஞானமும் எதிர்க்கிறது. 1980-ம் ஆண்டு நடத்தப்பட்ட ஒரு ஆய்வில் ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவோருக்கு அவர்களுடைய மொத்த ஆயுளின் அளவு குறைந்தபட்சம் இருபதிலிருந்து அதிகபட்சம் ஐம்பது வயது வரை மட்டும்தான் எனக் கண்டறியப் பட்டுள்ளது.

ஓரினச் சேர்க்கையை சட்டப்பூர்வமாக அனுமதித்து விட்ட நாடுகளான டென்மார்க், ஸ்வீடன், நார்வே உள்ளிட்ட நாடுகளில் 2000-வது ஆண்டில் அமெரிக்காவும் பிரிட்டனும் நடத்திய ஆய்வில் 50 ஆண்டு வரை ஆயுள் இழப்பு ஏற்படும் என்று உறுதி செய்யப் பட்டுள்ளது.

ஓரினச் சேர்க்கையில்லாமல் வேறு தவறுகளால் எய்ட்ஸ் நோய்க்கு பலியாவோர் எண்ணிக்கை பத்தில் ஒருவர் என்றால் ஓரினச் சேர்க்கையால் எய்ட்ஸ்-ஐ வரவழைத்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை பத்தில் எட்டு பேர் என்கிறது NACO என்கிற அமைப்பு நடத்திய ஆய்வு.

டில்லியைச் சார்ந்த டாக்டர். வீரேந்திர ஜெயின் ஓரினச் சேர்க்கையாளர்கள் Hepatitis-B என்ற மஞ்சள்காமாலை வியாதியின் ஆட் கொல்லி வகைக்கு ஆளாகின்றனர். மேலும், இவர்கள் தலைவலி, காய்ச்சல் போன்ற சிறு வியாதிகளுக்கு மருந்து உட்கொண்டால் கூட மருந்துகள் பலன் தராது என்கிறார்.

என் பெற்றோர் ஓரினச் சேர்க்கையாளர்களாக இருந்திருந்தால் நான் பிறந்திருக்க மாட்டேன் என்கிறார் யோகி ராம் தேவ். விஞ்ஞானிகள், சமூக சீர்திருத்தவாதிகள், அரசியல் தலைவர்கள் ஆகியோரின் பெற்றோர் ஓரினச் சேர்க்கையாளர்களாக இருந்திருந்தால் இவர்கள் நமக்குக் கிடைத்திருக்க மாட்டார்கள். ஏன் இன்று ஓரினச் சேர்க்கையை ஆதரிப்போர் கூடப் பிறந்திருக்க மாட்டார்களே.

**ஆதரிப்போர் சொல்வதென்ன?**

இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 377ன் கீழ் இதுவரை ஒருவர் கூட தண்டிக்கப் படவில்லை. எனவே, ஓரினச் சேர்க்கையை எதிர்க்கும் இச்சட்டம் செயல்படவில்லை என்பதால் இதை நீக்க வேண்டும்.

1860-ல் ஆங்கிலேயர் ஆட்சியின்போது வந்த சட்டம்தான் இந்திய தண்டனைச் சட்டம். ஆங்கிலேயனை விரட்டி விட்டு அவனது சட்டத்தை மட்டும் வைத்துக் கொண்டு அதற்கு அடிபணியலாமா? எனவே அச்சட்டத்தை நீக்க வேண்டும். அது பழைய சட்டம்.

*நூற்று இருபத்து ஆறு (126) நாடுகள் ஓரினச் சேர்க்கையை அனுமதித்து விட்டன. ஆனால், இன்னும் நாம் இது போன்ற விஷயங்களில் எதிர்ப்பதால் சர்வதேச சமூகத்துடன் கலந்திடாமல் தனித்தும், பின் தங்கியும் நிற்கிறோம். எனவே, ஓரினச் சேர்க்கையை ஆதரிக்க வேண்டும்.*

*இந்திய நாட்டின் அரசியல் சட்டம் பிரிவு 14-ன் படி ஒருவர் தன் மன விருப்பத்தின்படி சுயமாக சுதந்திரமாக வாழ்ந்திட அனுமதிக்கிறது. ஆகவே, இந்திய தண்டனைச் சட்டத்தை விட அரசியல் சட்டமே மேலானது. எனவே,* IPC 377 *பிரிவை நீக்க வேண்டும்.*

*ஓரினச் சேர்க்கையாளர்கள் சமீப காலத்தில் இந்தியாவில் இருபத்து ஐந்து லட்சம் பேர் இருக்கிறோம். கடந்த காலங் களில் நாங்கள் இவ்வளவு எண்ணிக்கையில் இல்லை என்பதாலும், ஓரினச் சேர்க்கையை விரும்புவோர்கள் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போவதாலும் இதை ஒரு மனப் பிறழ்வு என ஏற்க முடியாது. எனவே, எங்களையும் அங்கீகரிக்க வேண்டும். அதற்கு* IPC 377 *பிரிவு சட்டம் தடையாக இருக்கிறது. எனவே, அதை நீக்க வேண்டும்.*

*இந்தியாவில் மதவழிச் சிறுபான்மை யினர் என்று (முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள்) இருப்பது போல் மொழி வழி சிறு பான்மையினர் என்று (உருது பேசுவோர், சமஸ்கிருதம் பேசுவோர்) இருப்பது போல் எங்களை பாலியல் சிறுபான்மையினர் என்று அங்கீகரித்து எங்களை இழிவுபடுத்து வோரிடமிருந்து எங்களைக் காப்பாற்ற வேண்டும்.* இதுவே அவர்களின் விருப்பம், வேண்டுகோள் கேட்பதற்கு நியாயம் போலத் தோன்றும் இந்த மாய வார்த்தைகளைச் சொல்லித்தான் தமக்கு ஆதரவு திரட்டி வருகின்றனர்.

**நாம் சொல்வதென்ன?**

*ஒரு அடுக்கு மாடிக் குடியிருப்பில் அல்லது பணப் புழக்கம் அதிகமுள்ள ஒரு வியாபார நிறுவனத்தில் ஒரு காவலர் வேலை செய்கிறார். இதுவரை ஒரு திருடனைக் கூட அவர் பிடிக்கவில்லை என்பதால் அவரை வேலை நீக்கம் செய்துவிட முடியுமா? அல்லது அவர் இருப்பதனால் தான் திருடன் வராமலிருக்கிறான் என்று எடுத்துக் கொள் ளலாமா?*

ஓரினச் சேர்க்கை என்பது ஒரு மனப் பிறழ்வு என்கிறது மனோவியல். எய்ட்ஸ் என்ற ஆட்கொல்லி வியாதி வரும். பரவும் என்கிறது மருத்துவ விஞ்ஞானம். மனித இனப் பெருக்கம் பாதிக்கும். கவுரவமான குடும்ப அமைப்பு சீர்குலையும் என்கிறது சமூக விஞ்ஞானம்

*அது போல* IPC 377 *இருப்பதால் குற்றம் நடப்பதில்லை அல்லது குற்றம் குறைவாக நடக்கிறது. வழக்கறிஞர் வாதத் திறமையால் தண்டனையிலிருந்து தப்பி விட்டு தண் டனைச் சட்டத்தையே அகற்ற வேண்டும் என்பது நியாயமா?*

*ஐ.பி.சி.யின் எல்லாச் சட்டங்களுமே நூற்று ஐம்பதாண்டு காலப் பழமை மிக்கது தான். எனவே, திருட்டு, விபச்சாரம் முதலிய பாவங்களுக்கான தண்டனை சட்டங் களையும் அகற்றி விட முடியுமா? அப்படி அகற்றி விட்டால் அது நாடா? அல்லது மிருகங்களின் காடா?*

*126 நாடுகள் கெட்டுப் போய்விட்டன. இன்னும் ஏன் நாம் கெடாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று கேட்பது போலிருக்கிறது.* ஓரினச் சேர்க்கையை எதிர்ப் பதால் இந்தியா உலக அரங்களில் தனிமைப் படாது. ஐம்பதுக்கும் மேற்பட்ட முஸ்லிம் நாடுகள் இந்த மாபாவச் செயலை எதிர்க் கின்றன. எனவே, தீமைக்கு எதிரான அணியில் நிற்பதால் இந்தியாவுக்குப் பெருமையே வந்து சேரும்.

*இந்திய அரசியல் பிரிவு சட்டம் பிரிவு 14 வழங்கும் அடிப்படை உரிமை என்பது ஒழுங்கீனங்களையும், அநீதிகளையும் ஆதரிப்பதற்காகக் கொண்டு வரவில்லை.*

நோய்களை உருவாக்குவதும், பரப்புவதும் அடிப்படை உரிமை என எவனாவது சொன்னால் அதை எந்த மூடனும் ஏற்க மாட்டான்.

இந்திய மக்கள் தொகையில் இருபத்து ஐந்து லட்சம் பேர் என்பது (0.03%) தான். பிறருக்காக சட்டங்களைத் திருத்துவதும் புதிய சட்டங்களை உருவாக்குவதும் ஏற்க முடியாதது என்கிறார் முஸ்லிம் தனியார் சட்ட வாரியத்தின் வழக்கறிஞர் ஐஃபர்யாப் ஜிலானி அவர்கள். 0.03 சதவீதம் இருக்கும் கும்பலொன்று சட்டத்தின் போக்கை தீர்மானிப்பது அவர்கள் ஏற்றுக் கொண்ட ஜனநாயகத்திற்கு எதிரானது. சிறுபான்மையினராக உங்களை அங்கீகரித்தால் உங்களை இழிவாக எண்ணுவோரை சட்டரீதியாக தண்டிக்க வழி கிடைத்து விடும் என நினைக்கிறீர்கள்.

ஆக, 'குற்றம் செய்பவன் குற்றவாளி அல்ல; அது குற்றம் என்று சொல்பவனே குற்றவாளி' என்றொரு விதியை உருவாக்க முயல்வதுதான் உங்கள் நாகரிகமா? நியாயவான்களே, கேளுங்கள்... இச்சையைத் தணித்திட மிருகத்திடம் செல்பவனும் நாளை உரிமை கேட்பானே... அதையும் தந்து விட முடியுமா என்ன, அவனுக்கு அந்த உரிமையை?

மத்திய அரசே! ஓரினச் சேர்க்கை என்பது ஒரு மனப் பிறழ்வு, மன வியாதி என்கிறது மனோவியல். இதனால் எய்ட்ஸ் என்ற ஆட்கொல்லி வியாதி வரும். பரவும் என்கிறது மருத்துவ விஞ்ஞானம். இதனால் பல தீய விளைவுகள் ஏற்படும். மனித இனப் பெருக்கம் பாதிக்கும். கவுரவமான குடும்ப அமைப்பு சீர்குலையும் என்கிறது சமூக விஞ்ஞானம் எனவே, மத்திய அரசே! இந்த அசிங்கத்தை ஆதரிக்காதே! இந்த ஈனச் செயலில் ஈடுபடுவோரை தண்டிக்கத் தயங்காதே! இந்த ஈனச் செயலிலிருந்து விடுபட முடியாமல் தவிப்போரை மீட்க சிறப்பு மனநல மீட்பு மையங்களை ஆரம்பித்து அவர்களுக்கு சிகிச்சை கொடு.

**இறைவனும் இறைத்தூதரும் சொல்வதைக் கேளுங்கள்**

நிச்சயமாக நீங்கள் பெண்களை விட்டு விட்டு ஆண்களிடம் காம இச்சைக்காக அதைத் தணித்துக் கொள்ள வருகிறீர்கள்.

உலகம் அழிவை நெருங்கிக்
கொண்டிருக்கும் காலத்தில்
பெண்களைத் திருமணம்
செய்வது போல் ஆண்களை
திருமணம் செய்திடும்
ஆண்கள் தோன்றுவார்கள்.

மாறாக, நீங்கள் மிக்க வரம்பு மீறிய சமூகத் தவராகவே இருக்கின்றீர்கள் என்று கூறினார். (அல்குர்ஆன் 7:81)

தீய காரியத்திற்காக அகிலத்தாரில் ஆடவர்களிடம் வருகிறீர்களா? உங்கள் இரட்சகன் உங்களிடம் மனைவியரிலிருந்து உங்களுக்கென படைத்ததையும் நீங்கள் விட்டு விடுகிறீர்கள். இல்லை நீங்கள் அல்லாஹ்வின் வரம்பை கடந்த சமூகத்தவர்கள் என்றும் கூறினார். (அல்குர்ஆன் 26:165,166)

நிச்சயமாக நீங்கள் பெண்களைத் தவிர்த்து (விட்டு) ஆண்களிடம் மோகம் கொண்டு வருகின்றீர்களா? மாறாக, நீங்கள் முற்றிலும் அறிவில்லாத கூட்டத்தினராக இருக்கின்றீர்கள் என்றும் கூறினார். (அல்குர்ஆன் 27:55)

நீங்கள் சேர்ந்து வாழக் கூடிய உங்கள் மனைவிகளை நீங்கள் அவர்களிடம் மன நிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே உங்களுக்காக அவன் படைத்து உங்களுக்கிடையில் அன்பையும் கிருபையையும் ஆக்கியிருப்பதும் அவனுடைய பல அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக் கூடிய சமூகத்தாருக்கு இதில் நிச்சயமாக பல அத்தாட்சிகள் இருக்கின்றன. (அல்குர்ஆன் 30:21)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: கடைசிக் காலத்தில் பெண்களைத் திருமணம் செய்வது போல் ஆண்களை திருமணம் செய்திடும் ஆண்கள் தோன்றுவார்கள். அப்படி திருமணம் செய்பவனையும் செய்யப் படுபவனையும் கொல்லுங்கள்.(நூல்: தப்ரானி)

☐

# கடினமானதை விட இலகுவானதற்கே முதலிடம்

தொடர் – 16



டாக்டர் யூசுப் அல் கர்ழாவி

ஃபத்வா : மக்களிடையே எழும் புதிய பிரச்னைகளுக்கு இஸ்லாமிய அடிப்படையில் கூறப்படும் மார்க்கத் தீர்ப்பு.

தஃவா : இஸ்லாத்தை நோக்கி இதர சமுதாயத்தினரை அழைத்திடும் பணி.

**இந்தக் காலத்தில்** மிக அவசியத் தேவை என்னவென்றால் மேற்கண்ட இரு தளங்களிலும் உழைத்துக் கொண்டிருப்பவர்கள் தாம் எதிர்நோக்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறும் போது, 'கடினமான, கடுமையான மார்க்கமே இஸ்லாம்' என்று காட்டுவதற்குப் பதிலாக 'எளிமையான, இலகுவான மார்க்கமே இஸ்லாம்' என்று காட்டும் வழிமுறைகளுக்கே முன்னுரிமை தர வேண்டும்.


இதுவே அல்லாஹ்வுக்கும் அவனுடைய திருத்தூதருக்கும் பிடித்தமானது என்பதைத்தான் திருக்குர்ஆனும் சுன்னா எனும் நபிவழியும் கூறிக் கொண்டிருக்கின்றன.

அல்லாஹ் கூறுகிறான்: அல்லாஹ் உங்களுக்கு இலகுவைத்தான் விரும்புகிறான். கடினத்தைத் தர விரும்பவில்லை. (2:185)

உங்களை விட்டும் சிரமங்களைக் குறைக்கவே அல்லாஹ் விரும்புகின்றான். மேலும், மனிதன் பலவீனமானவனாகவே படைக்கப்பட்டுள்ளான். (4:28)

உங்கள் மீது சிரமங்களை வைத்திட அல்லாஹ் விரும்பவில்லை. (5:6)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மனிதர்களாகிய உங்களுக்கு வழங்கப்பட்ட மார்க்கங்களில் மிகச் சிறந்தது அவற்றுள் மிக எளிய மார்க்கமான இஸ்லாம்தான். (நூல்: தப்ரானி, அஹ்மது, அல்அதபுல் முஃப்ரத்)



நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நேரான நெகிழ்வான (இஸ்லாம்) மார்க்கமே அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமான மார்க்கம். (நூல்: தப்ரானி, அஹ்மது, அல்அதபுல் முஃப்ரத்)

அன்னை ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இரு செயல்களில் ஒன்றைச் செய்திட நபி (ஸல்) அவர்களுக்கு விருப்பம் தரப்பட்டால் அவ்விரண்டில் எளிதானதையே தேர்ந்தெடுப்பார்கள், அது பாவமாக இல்லாதிருந்தால். அது பாவமாக இருந்தால் எல்லோரையும் விட அவர்களே அதை விட்டு விலகி வெகு தூரத்தில் நிற்பார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மனிதர்கள் தனக்கு மாறு செய்வதை அல்லாஹ் வெறுப்பது போலவே தான் வழங்கியுள்ள சலுகைகளைப் பயன்படுத்துவதை விரும்புகின்றான். (நூல்: பைஹகீ, இப்னு ஹிப்பான், அஹ்மது)

எனவே, நோய், பலவீனம், முதுமை, கடும் சிரமம் முதலிய காரணங்களால் தேவைக்கேற்ப அல்லாஹ் வழங்கிய சலுகைகள் சிரமமற்ற வழிகள் இவற்றுக்கே முன்னுரிமை தரப்பட வேண்டும். இது அவசியம்.

ஒரு பயணத்தில் மக்கள் கூட்டமொன்றை நபி (ஸல்) அவர்கள் கண்டார்கள். அவர்களனைவரும் ஒரு மனிதர் மீது நிழல் காட்டிக் கொண்டிருந்தனர். உடனே "இது

என்ன?" என்று நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். அதற்கு, "இவர் நோன்பாளி" (இவர் மீது வெயில் பட்டால் சோர்ந்து விடுவார் என்பதற்காக நிழல் காட்டிக் கொண்டிருக்கிறோம்) என்றார்கள் மக்கள். அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "பயணத்தில் நோன்பு வைப்பது நல்லதல்ல." (நூல்: புஹாரி, முஸ்லிம்)

அதாவது, இது போன்ற சிரமமான பயணத்தில் நோன்பு வைப்பதை விட விடுவதே சிறந்தது.

பயணத்தில் இது போல் பெரிய சிரமம் இல்லையென்றால் நோன்பு வைத்துக் கொள்ளலாம். இதற்கு ஆயிஷா (ரலி)வின் அறிவிப்பு ஆதாரமாக உள்ளது.

ஹம்சா பின் அம்ருல் அஸ்லமீ (ரலி) என்ற நபித் தோழர் "அல்லாஹ்வின் தூதரே! பயணத்திலிருக்கும் போது நான் நோன்பு வைத்திடலாமா?" என்று கேட்டார். அவர் அதிகமாக நோன்பு வைத்திருந்த நபர். அவரிடம் நபி (ஸல்) அவர்கள் நோன்பு வைக்க விரும்பினால் வைத்துக் கொள்; விட்டு விட விரும்பினால் விட்டுக் கொள்" என்று கூறினார்கள். (நூல்: புஹாரி, முஸ்லிம்)

நேர்வழியில் ஆட்சி நடத்திய கலீஃபா உமர் பின் அப்துல் அஜீஸ் (ரஹ்) அவர்கள், பயணத்திலிருப்பவர் நோன்பு நோற்க வேண்டுமா? வேண்டாமா? என்பதைப் பற்றி அறிஞர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்து விட்டு இப்படிக் கூறினார்கள்: "பிரயாணிக்கு நோன்பு நோற்பது விடுவது இவ்விரண்டில் எது இலகுவானதோ அதை அவர் செய்திட வேண்டும்."

ஆம்! இதுவே ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து. சிலருக்கு கூட்டத்தோடு கூட்டமாக நோன்பு வைப்பது எளிதாக இருக்கும். நோன்பை விட்டு விட்டு பிறகு யாருமே நோன்பு வைக்காத (ரமழான் அல்லாத) நாட்களில் இவர் மட்டும் நோன்பு வைப்பது சிரமமம். வேறு சிலருக்கு இதற்கு நேரெதிரான நடைமுறையே எளிதாக இருக்கும். ஒவ்வொருவரும் தனக்கு எது எளிதானதோ அதைச் செய்யட்டும். அதுவே அவருக்குச் சிறந்தது.

நோன்பு துறக்கும் நேரம் வந்துவிட்டால் தாமதிக்காமல் விரைவாக நோன்பு துறந்திட வேண்டும். ஸஹரின் கடைசி நேரத்தில் உணவு சாப்பிட வேண்டும் என்று நபி (ஸல்) அவர்கள் பிரகடனப்படுத்தினார்கள். இது எதற்காக? நோன்பாளிக்கு இலகுவாக இருக்கட்டும் என்பதற்காகத்தான்.

> வெறுப்பூட்டுவதற்குப் பதிலாக நன்மாராயம் கூறுதல் சிரமப்படுத்துவதற்குப் பதிலாக எளிதாக்குதல் இவற்றை முன்னெடுத்துச் செல்வதே முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இன்றைய காலத்தின் தேவை. குறிப்பாக, புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கு இதுவே ஏற்றது.

பல முடிவுகளுக்கு இடமளிக்கும் சட்டப் பிரச்னைகளில் குறிப்பாக கொடுக்கல் - வாங்கல் சட்டங்களில் மக்கள் பின்பற்றிட எளிதான முடிவுகளுக்கே சட்ட மேதைகள் முன்னுரிமை தந்துள்ளனர். "இதுவே மக்களுக்கு ஏற்ற வழி" என்ற வாசகம் சட்ட மேதைகளின் நூல்களில் அடிக்கடி காணப்படும் பிரபலமான வாசகம் ஆகும்.

நானும் அப்படித்தான் என் 'ஃபத்வா'க்களில் சிரமங்களைக் குறைக்கும் வழிமுறைகளைக் கடைப்பிடிக்கிறேன். நன்மாராயமும் நற்செய்தியும் கூறும் பாணியில்தான் 'தஅவா' செய்கிறேன். இது அல்லாஹ் வழங்கிய பெரும் பாக்கியம். இதற்காக அல்லாஹ்வைப் புகழ்ந்தேற்றுகிறேன்.

நபி (ஸல்) அவர்கள் எமன் நாட்டிற்கு முஆத் பின் ஜபல் (ரலி) அபூமூஸா (ரலி) இருவரையும் 'தஅவா'வுக்காக அனுப்பி வைத்தபோது இப்படி உபதேசம் செய்தார்கள்: 'எளிமைப்படுத்துங்கள். கடுமையாக்காதீர்கள். நற்செய்தி கூறும். விரட்டாதீர்கள். இருவரும் கருத்தொருமித்துச் செயல்படுங்கள்." (நூல்: புஹாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எளிமையாக்குங்கள். கடுமையாக்காதீர்கள். நல்வாழ்த்து கூறுங்கள். விரட்டாதீர்கள." (நூல்: புஹாரி, முஸ்லிம்)

நபி (ஸல்) அவர்கள் கூறிய இந்த பாணியைத்தான் என் 'ஃபத்வா'விலும் 'தஅவா'விலும் கடைப்பிடிக்கிறேன்.

ஒரு முறை கேள்வி - பதில் நிகழ்ச்சியொன்றில் நான் கலந்து கொண்டேன். அங்கு என்னிடம் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு நான் பதிலளித்த போது இப்படிக் கூறினேன்: "ஒரு சட்டப் பிரச்னையில் என் முன்னால் இரு முடிவுகள் கிடைத்தால் அவ்விரண்டில் கிட்டத் தட்ட ஒரே விதமான முடிவுகளாகவோ அல்லது ஒன்றுக்கொன்று ஒப்பான முடிவுகளாகவோ இருக்கும் பட்சத்தில் அவ்விரு முடிவுகளையும் நுணுக்கமாகப் பார்த்தால் ஒன்றைச் செயல்படத்துவது எளிதாகவும் மற்றொன்று பேணுதலுள்ள முடிவாகவும் இருந்தால் நான் பேணுதலான முடிவை விட எளிதான முடிவுக்கே முன்னுரிமை தருவேன். ஏனெனில், நான் பொதுமக்களுக்குக் கூறும் 'ஃபத்வா' அவர்கள் செயல்பட எளிதாக இருக்க வேண்டும் என்றே நினைக்கிறேன்.

இவ்வாறு நான் கூறியபோது பார்வையாளர் பகுதியிலிருந்து ஒருவர் எழுந்து, "பேணுதலான முடிவை விட செயல்பட எளிதான முடிவுக்கு முன்னுரிமை தரும் உங்கள் பாணிக்கு ஏதேனும் ஆதாரங்கள் உண்டா?" என்று கேட்டார்.

அந்த சகோதரருக்கு நான் கூறினேன்: "நபிவழிதான் எனக்கு ஆதாரம். தன் முன்னுள்ள இருவழிகளில் எளிதான பாவமற்ற வழியை நபி (ஸல்) தேர்ந்தெடுப்பார்கள். இமாமாக நின்று தொழுகை நடத்துவோர் தம்மைப் பின்பற்றித் தொழுவோருக்கு சிரமம் தரக் கூடாது. ஏனெனில், அவர்களில் பலவீனமானவர்கள், நோயாளிகள், முதியவர்கள், தேவையுள்ளவர்கள் இருப்பார்கள் என்று கூறியுள்ளார்கள். இவைதான் என் ஆதாரம்."

மார்க்கப் பற்று மிக்கவர் பேணுதலானவர் மன உறுதி மிக்கவர்கள் 'ஃபத்வா' கேட்டால் அவர்களுக்குப் பேணுதலான வழிமுறைகளை தமது ஃபத்வாவாக சில அறிஞர்கள் கூறியுள்ளனர். ஆனால் பொது மக்களுக்கு ஏற்றது எளிமையான வழிமுறையே.

வெறுப்பூட்டுவதற்குப் பதிலாக நன்மாராயம் கூறுதல் சிரமப்படுத்துவதற்குப் பதிலாக எளிதாக்குதல் இவற்றை முன்னெடுத்துச் செல்வதே முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இன்றைய காலத்தின் தேவை. குறிப்பாக, புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்கள், பெரும்பாவங்களிலிருந்து அண்மையில் தவ்பா செய்து மீண்டவர்கள் ஆகியோருக்கு இதுவே ஏற்றது. அவசியமானது.


நபிவழியில் இதற்குத் தெள்ளத் தெளிவான சான்றுகள் உண்டு.

உங்களில் மக்களை
விரண்டோடச் செய்பவர்களும்
இருக்கிறீர்கள். உங்களில்
யாராவது இமாமாக நின்று
தொழுகை நடத்தினால்
இலகுவாக நடத்துங்கள்.
ஏனெனில்,
தொழுகையாளிகளில்
பலவீனமானவர்கள்,
முதியவர்கள்,
தேவையுள்ளவர்கள்
இருப்பார்கள்.

இஸ்லாத்தைத் தழுவிட விரும்பிய ஒருவர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து நின்றபோது அவருக்கு இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகளை மட்டுமே நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஏராளமான கடமைகளைக் கூறவில்லை. கட்டளைகளையும் தடைகளை நிறையச் சொல்லி அவர் மீது பாரத்தை ஏற்றவில்லை. நஃபில்களில் அவரை மூழ்கடிக்கவுமில்லை.

அந்த மனிதர் நபி (ஸல்) அவர்களிடம் இப்படிக் கூறினார். நான் இதை விடக் கூட்டவும் மாட்டேன். குறைக்கவும் மாட்டேன். (இதை மட்டும் செய்வேன்.)

...... தொடர்ச்சி 15ம் பக்கம்


அறிஞர் அபுல் ஹசன் அலீ நத்வீ

முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?

# மலர்ந்தது இஸ்லாமிய சமுதாயம்

24

மொழிபெயர்ப்பு
**அஹ்மது ஜலாலுதீன் நத்வி**

**ஏகத்துவம்,** மறுமை, நம்பிக்கை அல்லாஹ்வுக்கும் அவனின் மார்க்கத்திற்கும் கட்டுப்படுதல் இவையெல்லாம் கோணலாகிக் கிடந்த அம்மக்களின் வாழ்வை சீராக்கியது.

இஸ்லாமிய சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தனக்குத் தகுதியான இடத்தைப் பெற்றார். தகுதிக் குறைவோ மிகை மதிப்போ அவருக்கு அங்கு ஏற்படவில்லை. அந்த சமுதாய அமைப்பு முட்கள் ஏதுமற்ற மலர் மாலையாய்க் காட்சி தந்தது.

மனிதர்கள் அனைவரும் ஒரே குடும்பம். அதன் தந்தை ஆதம் (அலை) அவர்களோ மண்ணால் படைக்கப்பட்டவர்கள். அரபு மொழி பேசுபவரோ வேறு மொழி பேசுபவரோ யாரும் யாரை விடவும் உயர்ந்தவரல்லர். ஒருவரின் உயர்வுக்கு இறையச்சமே அளவுகோல்.

"நீங்கள் அனைவரும் ஆதம் நபியின் பிள்ளைகள். ஆதம் நபி மண்ணால் படைக்கப்பட்டவர்கள். தம் மூதாதையர்களைக் கொண்டு பெருமையடித்துக் கொண்டிருப்போர் இனி அதைச் செய்யாதீர்கள். இல்லையென்றால் அல்லாஹ்விடத்தில் மலம் உருட்டும் கரு வண்டுகளை விடவும் அவர்கள் இழிவானவர்களாகி விடுவார்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: திர்மிதி, அபுதாவூத்)

"மனிதர்களே... அஞ்ஞானத்தின் குறைபாடுகள் அனைத்தையும் அல்லாஹ் உங்களை விட்டு நீக்கி விட்டான். மூதாதையர்களைக் கொண்டு பெருமையடிப்பதையும் நீக்கி விட்டான். மனிதர்கள் இருவகைதான் உண்டு. நல்லவராக, இறையச்சமுள்ளவராக இருப்பவர் அல்லாஹ்விடத்தில் மரியாதைக்குரியவர். தீயவராகவும் பாவியாகவுமிருப்பவர் அல்லாஹ்விடத்தில் இழிவானவர்" என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: இப்னு அபீ ஹாத்தம்)

"குலப் பெருமையால் யாரும் யாரையும் விட உயர்ந்து விட முடியாது. நீங்கள் அனைவரும் ஆதம் நபியின் பிள்ளைகளே. மரக்கால் அளவு பொருள் அளந்து போட்டால் கூட எவருக்கும் பாரபட்சம் என்பது இனி இல்லை. மார்க்கப் பற்று, இறையச்சம் இவற்றைக் கொண்டல்லாமல் யாரும் யாரை விடவும் சிறந்தவரல்லர்" என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: அஹ்மது)

அபூதர் (ரலி) அவர்களிடம் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "கவனித்துக் கொள். கருப்பரை விடவோ வேறு எவரையும் விடவோ நீ சிறந்தவனாகி விடுவதில்லை. இறையச்சத்தைக் கொண்டு நீ உயர்வடைந்தால் தவிர."

இது மட்டுமல்ல, இரவின் இறுதிப் பகுதியில் அல்லாஹ்வுடன் உரையாடும் போது இப்படிக் கூறினார்கள்: "இறைவா!

அடியார்கள் அனைவரும் சகோதரர்கள் என்பதற்கு நானே சாட்சி." (நூல்: அபுதாவூத்)

**இனவெறி இனி இல்லை**

அஞ்ஞானக் கோட்பாட்டை வேரோடும் வேரடி மண்ணோடும் பிடுங்கி எறிந்தார்கள் பெருமானார் (ஸல்) அவர்கள். அதன் அடிச் சுவடுகளை அழித்தார்கள். இனி அது வருவதற்கு வாய்ப்புள்ள எல்லா வழி களையும் அடைத்தார்கள். சொன்னார்கள்: "இனவெறிக்காக ஆள் சேர்ப்பவன் நம்மைச் சார்ந்தவனல்லன். இனவெறிக்காக யுத்தம் செய்பவன் நம்மைச் சார்ந்தவனல்லன். இனவெறிக்காக இறப்பவன் நம்மைச் சார்ந்தவனல்லன்." (நூல்: அபுதாவூத்)

ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: 'நாங்கள் ஒரு யுத்தத்தில் கலந்து கொண்டோம். அங்கு மக்காவாசிகளில் ஒருவர் மதீனாவாசி (அன்சாரி) ஒருவரை மிதித்து விட்டார். பாதிக்கப்பட்ட அன்சாரித் தோழர் தமக்கு ஆதரவாக மதீனாவாசிகளை "அன்சாரி களே! வாருங்கள் இங்கே" என்று கூப்பிட் டார். அணிதிரட்டினார். இதைப் பார்த்த முஹாஜிர் (மக்காவாசிகள்) தமக்கு ஆதர வாக "முஹாஜிர்களே! அணி திரளுங்கள்" என்றார். இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள் "விடுங்கள் இந்த இனக் கூச்சலை. நிச்சயமாக இது நாற்றமெடுக்கும் கூப்பாடு" என்றார்கள். (நூல்: புஹாரி)

'ஜாஹிலிய்யா'வின் கோத்திர வெறி யையும் நிறுத்தினார்கள். ஒழித்தார்கள். "உன் சகோதரன் (குடும்பத்தவன்) அநீதி இழைத்தா லும் அநீதி இழைக்கப்பட்டாலும் அவனுக்கே நீ உதவி செய்திட வேண்டும்" என்பது அஞ்ஞான காலப் பழமொழி. வெறும் பழ மொழி மட்டுமல்ல, மக்கள் இதைக் கடைப் பிடித்தும் வந்தனர். ஒருவர் மற்றவருக்குச் செய்திடும் பரஸ்பர உதவி என்பதே தன் குடும்பத்தவனுக்குச் செய்வதுதான் என்பதே அன்றைய வழக்கம்.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அநியாயம் செய்திடும் தனது சமுதா யத்துக்கு உதவி செய்பவன் (கிணற்றில்) விழுந்து கொண்டிருக்கும் ஒட்டகத்தின் வாலை (விடாப்பிடியாக) பிடித்துக் கொண்டிருப்பவனைப் போன்றவனாவான். (நூல்: அபுதாவூத்)

பெருமானாரின் இந்த உபதேசம் அரேபிய இனவெறிக்கு முடிவு கட்டியது. இனவெறியை வளர்க்கும் பழமொழிகளைக் கூட அவர்கள் தாங்கிக் கொள்ளவில்லை. ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் (அந்தப் பழமொழிகளில் ஒன்றை) சொன்னார்கள்:

"உன் சகோதரன் அநீதி இழைத்தாலும் அநீதி இழைக்கப்பட்டாலும் அவனுக்கு நீ

> ஒரு காலத்தில் மன்னர்களும், இளவரசர்களும் நிலங்களை அபகரித்து வைத்துக் கொண்டு தாம் விரும்பியவர்களுக்கு தாராளமாகவும் வேறு சிலருக்கு சொற்ப அளவும் கொடுத்து வந்த நிலையெல்லாம் இஸ்லாமிய அரசில் இல்லை. துணியை வெட்டிக் கொடுப்பது போல் நிலத்தைக் கொடுக்கும் அநியாயம் இங்கு இல்லை.

உதவி செய்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறிய போது மனம் பொறுக்காத நபித் தோழர்கள் கேட்டே விட்டார்கள். "அல்லாஹ்வின் திருத் தூதரே! அநீதி இழைக்கப்பட்டவனுக்கு உதவுவோம். அநீதி இழைப்பவனுக்கு எப்படி நாங்கள் உதவ முடியும்?" என்று கேட்டனர். அதற்கு, "அநீதி செய்ய விடாமல் தடுப்பதே அவனுக்கு நீ செய்யும் உதவியாகும்" என்றார்கள் நபி (ஸல்) அவர்கள். (நூல்: புஹாரி, முஸ்லிம்)

இவ்வாறு இனவெறி இறுதி முடிவு கண்டது.

**பொறுப்புணர்வு**

இஸ்லாமிய சமுதாயத்தில் அங்கம் வகித்த பல்வேறு சமூகங்களும் இனங்களும் இன எல்லைகளைக் கடந்து பரஸ்பரம்

உதவிக் கொண்டனர். தோள் கொடுத்தனர். யாரும் யாருடைய உரிமைகளையும் மீறிடவில்லை.

சிலரை விட சிலரை (பெண்ணை விட ஆணை) அல்லாஹ் மேன்மைப்படுத்தியிருப்பதாலும் குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளை ஆண் நிறைவேற்றுவதாலும் பெண்களை ஆண்களே நிர்வகித்தனர்.

பெண்களோ ஆண்களோடு முரட்டுத் தனமாக முரண்பட்டு நிற்கவில்லை. கணவனுக்குக் கட்டுப்பட்டவர்களாக, கணவன் வீட்டில் இல்லாத நேரத்தில் எதையெல்லாம் பாதுகாத்திட வேண்டும் என்று அல்லாஹ் கூறியுள்ளானோ அவை அனைத்தையும் பாதுகாப்பவர்களாகவும் திகழ்ந்தனர்.

பெண்களுக்குக் கடமைகள் இருப்பது போல், உரிமைகள் இருந்தன. இப்படி ஆணும், பெண்ணும் தத்தமது பொறுப்பை அறிந்து செயல்பட்டனர்.

"நீங்கள் அனைவரும் பொறுப்பாளர்களே. நீங்கள் அனைவரும் உங்கள் பொறுப்பின் கீழ் இருப்போர் பற்றி விசாரிக்கப்படுவீர்கள். மக்கள் தலைவனும் பொறுப்பாளிதான். தன் பொறுப்பின் கீழிருந்தவர்கள் பற்றி அவன் விசாரிக்கப்படுவான். ஒரு ஆண் தன் குடும்பத்தினரின் பொறுப்பாளி. தன் பொறுப்பின் கீழிருந்தவர்கள் பற்றி அவன் விசாரிக்கப்படுவான்.

ஒரு பெண் தன் கணவனுடைய இல்லத்தின் பொறுப்பாளி. தன் பொறுப்பு பற்றி அவள் விசாரிக்கப்படுவாள். ஒரு வேலைக்காரன் தன் முதலாளியின் செல்வத்துக்குப் பொறுப்பாளி. தன் பொறுப்பு பற்றி அவனும் விசாரிக்கப்படுவான்" (நூல்: புஹாரி, முஸ்லிம்) என்று கூறியது போலவே முஸ்லிம் சமுதாயத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் தன் பொறுப்பிலிருந்து பிசகாமல் வாழ்ந்தனர். பொறுப்பை அறிந்து வாழ்ந்தனர்.

### பணிவு படைத்தவனுக்கே

அவர்கள் சக முஸ்லிம்களிடம் ஆலோசனை பெற்றுத் தான் முடிவுகளை எடுத்தார்கள். வாய்மைக்கு மட்டுமே உதவினார்கள். தங்களுக்கு தலைமை ஏற்றவர்கள் இறைவழிபாட்டுக்கு முரணில்லாத கட்டளைகளை இட்டால் மட்டுமே கட்டுப்பட்டுச் செயல்பட்டனர். இறைவழிபாட்டுக்கு முரணானதை தலைமை கட்டளையிட்டால் அதைத் தூக்கி எறிந்தனர்.

"படைத்தவனுக்கு மாறு புரியும் காரியத்தில் படைப்புகளுக்குக் கட்டுப்படக் கூடாது" என்ற நபிமொழிதான் (நூல்: புஹாரி, முஸ்லிம்) அவர்களின் தாரக மந்திரம்.

செல்வங்களும் களஞ்சியங்களும் ஒரு காலத்தில் மன்னர்கள் இளவரசர்களின் குலச் சொத்தாகவும் செல்வந்தர்களிடையே மட்டும் சுழன்று வருவதாகவும் இருந்த நிலை மாறியது. அவை அல்லாஹ்வின் செல்வங்களாயின. அவை அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றிடவும் அவன் காட்டிய வழியிலும் மட்டுமே செலவிடப்பட்டன. முஸ்லிம்கள் செல்வங்களின் பிரதிநிதிகளாக (மட்டுமே) இருந்தார்கள். அவற்றைச் சூறையாடுபவர்களாகவோ வேட்டையாடுபவர்களாகவோ இருக்கவில்லை.

இஸ்லாமிய அரசின் தலைவரான கலீஃபா அவர்கள் அரசுக் கருவூலத்தைச் சுரண்டவில்லை. தன்மானத்துடனும் சுய கட்டுப்பாட்டுடனும் அவற்றைப் பராமரித்தார். அநாதைகளின் சொத்துக்களைப் பராமரிப்பவர் எப்படி தன் தேவைக்காக மட்டும் குறைந்த அளவு (பராமரிப்புக் கூலியாக, சம்பளமாக) பணம் எடுப்பாரோ அது போல கொஞ்சம் மட்டுமே அதுவும் தேவையிருந்தால் மட்டுமே கலீஃபா பணம் பெற்றுக்கொண்டார் பொது நிதியிலிருந்து.

ஒரு காலத்தில் மன்னர்களும், இளவரசர்களும் நிலங்களை அபகரித்து வைத்துக் கொண்டு தாம் விரும்பியவர்களுக்கு தாராளமாகவும் வேறு சிலருக்கு சொற்ப அளவும் கொடுத்து வந்த நிலையெல்லாம் இஸ்லாமிய அரசில் இல்லை. துணியை வெட்டிக் கொடுப்பது போல் நிலத்தைக் கொடுக்கும் அநியாயம் இங்கு இல்லை.

இன்னொருவனின் நிலத்தை ஒரு ஜான் அபகரித்தால் கூட ஏழு பூமியிலுள்ள அது போன்ற இடம் அவன் கழுத்தில் மாலையாக (மறுமையில்) மாட்டப்படும் என்ற இஸ்லாத்தின் எச்சரிக்கையால் நிலங்கள்

எல்லாம் தனியொரு அரசனுக்குரியதல்ல. அவை அல்லாஹ்வுக்குரியவை என்றே முஸ்லிம்கள் நம்பினர்.

**ஆருயிர் அண்ணல் (ஸல்)**

முஹம்மது நபி (ஸல்) அவர்களின் வருகைக்கு முன்னர் மனித சமுதாயம் தன் சுறுசுறுப்பையும் மகிழ்ச்சியையும் இழந்திருந்தது. தம் வாழ்வில் எந்தச் செயலைச் செய்தாலும் அதை மகிழ்வுடன் செய்ய வில்லை. செய்யாமலிருப்பதைக் கூட விரும்பி விடவில்லை. சுய விருப்பத்தை இழந்த, அடக்கப்பட்ட சமுதாயமாகவே மனிதகுலம் இருந்தது. எவரும் சுயமாக எதையும் செய்ய வுமில்லை. சுயமாக எதையும் விடவுமில்லை.

ஆளும் வர்க்கத்தின் சுயநலனுக்காக போர் செய்திட நிர்ப்பந்திக்கப்பட்ட மக்களுக்கு போரில் உற்சாகமோ ஊக்கமோ இருக்கவில்லை. அதே நேரத்தில் போரிட்டு அடைய வேண்டிய லட்சியங்களை அடைந்திடாமல் அரைகுறை மனதுடன் சமாதானம் செயதிடும் நிர்ப்பந்தத்துக்கு ஆளாக்கப்பட்டனர்.

அக்காலத்தின் ஆட்சியாளர்கள் குடி மக்களை நிர்ப்பந்தமாக தியாகங்களை செய்யச் சொன்னார்கள். முரட்டுத்தனமான பாரமான வேலைகளை மக்கள் மீது சுமத்தி னார்கள். குடிமக்கள் மீது ஆட்சியாளர்கள் இரக்கப்படவில்லை. ஆட்சியாளர்களை குடிமக்களும் விரும்பவில்லை. தங்களுக்குப் பிடிக்காதவர்களுக்கெல்லாம் கட்டுப்பட வேண்டிய அவலத்திலும் தமது கோபத் துக்குரியவர்களுக்காக தம் செல்வத்தையும் உயிர்களையும் அர்ப்பணித்திட வேண்டிய இழிவிலும் குடிமக்கள் இருந்தனர்.

நெஞ்சுரம் எனும் நெருப்பு அணைந்து உணர்வுகள் மரத்து, தம்மைத் தாமே ஏமாற்றிக் கொண்டு, உள்ளொன்றும் புற மொன்றுமாக பிறர்க்கென இழிவைச் சுமந்து சிறுமைப்பட்டு சீரழிவே வாழ்வென வாழ்ந் தனர் குடிமக்கள்.

மனிதனிடமே ஒரு உணர்வு உண்டு. அது வலிமையான உணர்வு. மனிதன் பல அதிசயங்களை நிகழ்த்தி சிறப்பைப் பெற்ற தற்கு அந்த உணர்வே காரணம். வரலாற்றில் நிலைத்திருக்கும் பல தடங்களை மனிதன் பதித்திருப்பதற்கும் இந்த உணர்வே காரணம்.

தம் உயிரை விட,
குடும்பத்தை விட,
செல்வத்தை விட
பிள்ளைகளை விட நபியே
பெரிதெனப் போற்றிய
அம்மக்களின் அன்பு
அதிசயமானது. வரலாறு
கண்டிராதது. இனியும் காண
முடியாதது.

இதைக் காதல், அன்பு என்று மனிதன் கூறுகிறான். இந்த அழகிய உணர்வு அந்தக் காலத்தில் கவனிப்பாரற்று கைவிடப்பட்டு இருந்தது.

இந்த உணர்வுக்கு வேலை கொடுத்து அதைப் பயன்படுத்திக் கொள்ளும் (தலைவர்) ஒருவர் பல நூற்றாண்டுகளாகத் தோன்றவே இல்லை. இதனால் இந்த அழகிய உணர்வான காதல் காலங்காலமாக கவிஞர்களின் கருப் பொருளாக குறுகிப் போனது. பாசாங்கு, பசப்பு, அழகின் வகைகள் இவற்றில் கிடந்து பாழாய்ப் போனது.

இப்படி நிலை தடுமாறி அநீதிக்கு உள்ளாகி நின்ற சமுதாயத்தில் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வந்தார்கள். அந்தச் சமுதா யத்தை இறுக்கியிருந்த முடிச்சுகளை அவிழ்த் தார்கள். அதன் மீதிருந்த அடிமை விலங்கை உடைத்தார்கள். அந்தச் சமுதாயத்தின் ஜீவனாகவும் உயிராகவும் ஆனார்கள். அவர்களின் கண்களிலும் இதயங்களிலும் நிறைந்தார்கள்.

அந்த நபியிடம் அல்லாஹ் நிறைவான நற்பண்புகளைக் குவித்து வைத்திருந்தான். அழகின் மறுபெயராக சமூக சேவையின் உருவமாக நின்றிலங்கினார்கள் அந்த இறைத்தூதர்.

முதன் முறையாக அவர்களைக் காண்பவர் அவர்களின் கம்பீரத்தின் முன்னே கதிகலங்கி நிற்பார். பழகிப் பார்த்தால் நேசத்தைப் பொழிவார்.

ஒருவர் இப்படி வர்ணிக்கிறார்: அவர்களைப் போல் இன்னொருவரை முன்னோ பின்னோ கண்டதில்லை. பள்ளத்தை நோக்கி நீர் பாய்வது போல அவர்களை நோக்கி மெய்யன்பு பாயும். காந்தத்தை நோக்கி இரும்பு ஈர்க்கப்படுவது போல உயிர்களும் உள்ளங்களும் அவர்களை நோக்கி விரையும். ஏற்கனவே வாக்களிக்கப்பட்ட ஓரிடத்துக்குச் செல்வது போல உயிர்களும் உள்ளங்களும் அவர்களருகே சென்றன.

அவர்களுடைய சமுதாயத்து மனிதர்கள் அவர்கள் மீது வைத்திருந்த பாசத்துக்கு எல்லையே இல்லை. இந்த அன்புக்கு முன்னால் காதலர்களின் அன்பு எம்மாத்திரம்? என்னே அன்பு! என்னே கட்டுப்பாடு!

தம் உயிரை விட, குடும்பத்தை விட, செல்வத்தை விட பிள்ளைகளை விட நபியே பெரிதெனப் போற்றிய அம்மக்களின் அன்பு அதிசயமானது. வரலாறு கண்டிராதது. இனியும் காண முடியாதது.

**.... தொடரும்**

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி**

□

---

**10ஆம் பக்க தொடர்ச்சி .....**

அதற்கு நபி (ஸல்) அவர்கள் “இவர் சொன்னபடி நடந்து கொண்டால் வெற்றி பெற்று விடுவார் என்று அல்லது சொன்னபடி நடந்து கொண்டால் இவர் சுவனம் செல்வார்” என்று கூறினார்கள். (காண்க: புஹாரி)

பல்வேறு சூழ்நிலைகளில் தொழுகைக்கு வந்திருக்கும் பொது மக்களைக் கவனிக்காமல் நீண்ட நேரம் தொழுகை நடத்தும் இமாம்களை நபி (ஸல்) அவர்கள் கடுமையாகக் கண்டித்துள்ளார்கள்.

முஆத் பின் ஜபல் (ரலி) நீண்ட நேரம் தொழுகை நடத்துகிறார் என்றொரு புகார் வந்த போது “முஆதே...! நீ என்ன குழப்பவாதியா?” என்று மூன்று தடவை அவரைப் பார்த்து நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். (நூல்: புஹாரி)

ஒரு நபர் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, “சுபுஹ் தொழுகைக்கு நான் தாமதமாகவே செல்கிறேன். இமாமாக நின்று தொழுகை நடத்துபவர் நீண்ட நேரம் தொழுகை நடத்துவதே இதற்குக் காரணம்” என்றார். அப்பொழுது நபி (ஸல்) அவர்கள் கடும் கோபமடைந்தார்கள். இதற்கு முன் எப்போதும் இது போல் கோபப்பட்டதில்லை. பிறகு சொன்னார்கள்: “உங்களில் மக்களை விரண்டோடச் செய்பவர்களும் இருக்கிறீர்கள். உங்களில் யாராவது இமாமாக நின்று தொழுகை நடத்தினால் இலகுவாக நடத்துங்கள். ஏனெனில், தொழுகையாளிகளில் பலவீனமானவர்கள், முதியவர்கள், தேவையுள்ளவர்கள் இருப்பார்கள். (நூல்: புஹாரி, முஸ்லிம்)

இவ்வாறு நீண்ட நேரம் தொழுகை நடத்தி நபி (ஸல்) அவர்களின் கண்டிப்புக்கு ஆளானவர் உபை இப்னு கஅப் (ரலி) தான் என்று சில அறிவிப்புகள் கூறுகின்றன. இவர் சாதாரண நபர் அல்ல. நபியின் காலத்தில் குர்ஆன் வசனங்களை எழுதியவர்களுள் ஒருவர், கல்வியிலும் சிறப்பிலும் மேன்மை பெற்றவர். எனினும், நபி (ஸல்) அவர்களின் அன்புக்கும் பாராட்டுக்கும் உரிய முஆத் (ரலி) கண்டிக்கப்பட்டது போல் அதே தகுதியிலுள்ள கஅப் (ரலி) அவர்களும் கண்டிக்கப்பட்டார்கள்.

**..... ( தொடரும்)**

# தாய்ப்பாலே தன்னிகரற்ற சக்தி



**தாய்ப்பாலை** குழந்தைகளுக்கு தவறாமல் தாருங்கள் என வற்புறுத்திட வேண்டிய கால கட்டம் ஒன்று வந்து விட்டது.

காரணம், மேலை நாட்டு நாகரிகங்கள் எல்லோரையும் ஆட்கொண்டு விட்டன. இதில் ஜாதி, மத, நிற, நில வேறுபாடுள் இல்லை.

இந்த மேலைநாட்டு மோகத்தில் சிக்கி யவர்கள் பல சிக்கலான சிந்தனைகளுக்கு ஆட்பட்டு விட்டார்கள். இந்தச் சிந்தனை களுள் சில தாய் தன் பாலை குழந்தை களுக்குத் தருவதால் அவளது அழகும் வாளிப்பும் அழிந்து போகும், முதுமை ஓடி வந்துவிடும் என்பனவாகும்.

இதனால் குழந்தைகளுக்கு புட்டிப் பாலையே புகட்டும் பழக்கம் புழக்கத்தில் வந்தது.

இதற்குத் தகுந்தாற்போல் பல குழந்தை களுக்கான உணவுகளும் கண்டுபிடிக்கப் பட்டு அங்காடிக்கு வந்தன.

இந்த உணவுப் பொருள்களைத் தயாரிப்பவர்கள் விற்பனையை அதிகரிக்க அபார விளம்பரங்களை அள்ளிக் கொட்டி னார்கள்.

இந்த விளம்பரங்கள் வழி அந்த உணவுப் பொருட்களை ஊட்டவில்லையென்றால் குழந்தைகள் வாழவே முடியாது என்றொரு பிரம்மையை ஏற்படுத்தினார்கள்.

இவர்கள் செய்த இடைவிடாத பிரச் சாரத்தால் ஒரு தலைமுறையில் பிறந்த குழந்தைகளுக்கு தாய்ப்பால் பூரணமாகக் கிடைக்காமல் தடுத்தும் விட்டார்கள்.

ஒரு தலைமுறை இப்படித்தான் திசை மாறிப் போனபின், ஒரு பெரும் முயற்சி எடுக்கப்பட்டது. அதில் தாய்ப்பாலின் அருமை பெருமைகளைப் பற்றி மக்களிடையே பிரச்சாரம் செய்திட வேண்டிய நிலை வந்தது.

தாய்ப்பாலை ஊட்டித்தான் ஆக வேண்டும் என்று குழந்தையைப் பெற்றிடும் தாய்மார்களுக்கு உபதேசிக்க வேண்டிய அவலம் அவனியைத் தொற்றிக் கொண்டது.

இந்தப் பின்னணியில் தாய்ப்பாலைப் பற்றிய சில தகவல்களை இங்கே தருகின்றோம்.

குழந்தை பிறந்தவுடன் இறைவனின் ஏற்பாடாய் அதற்காக சுரப்பதே தாய்ப்பால்.

தாய்ப்பால் தான் குழந்தை பிறந்தவுடன், அருந்தும் முதல் உணவு. இதுவே அதன் முக்கிய மூல உணவாகவும் அமைகிறது.

விஞ்ஞான ஆராய்ச்சி என்ற முத்திரையோடு வந்தால்தான் மக்கள் இப்போதெல்லாம் ஏற்றுக் கொள்கிறார்கள்.

அந்த ஆராய்ச்சியாளர்களே குழந்தைக்கு சிறந்த உணவு தாய்ப்பால்தான் என ஊர்ஜிதம் செய்கின்றனர்.

**தாய்ப்பால் தூய்மையானது**

தாய்ப்பாலின் தூய்மை வேறு எந்த உணவுக்கும் கிடையாது. சுத்திகரிக்கப்பட்ட அல்லது தூய்மைப்படுத்தப்பட்ட தூய உணவு தாய்ப்பால்.

மிகவும் எளிதில் ஜீரணமாகும் உணவு இந்தத் தாய்ப்பால்.



> தாய் தான் வழக்கமாக பழக்கமாக்கிக் கொண்ட எல்லா உணவு வகைகளையும் உண்ணலாம்.
>
> அதிக அளவில் மருந்துகளை உட்கொள்ளாமலிருப்பது நல்லது. ஏனெனில், சில மருந்துகள் தாய்ப்பால் வழி ஊடுருவும். குழந்தைகளின் பல், இருதய பாகங்களில் பாதிப்புகளை உண்டாக்கலாம்.

நோய் எதிர்ப்பு சக்தியை நிரந்தரமாக குழந்தைகளுக்குத் தருவதும் தாய்ப்பால்தான். இது மழலைப் பருவத்தில் மட்டுமல்ல, ஆயுள் உள்ளளவும் குழந்தைகளுக்கு நோய் எதிர்ப்பு சக்தியைத் தருகிறது.

குழந்தை பிறப்பதற்கு உண்டாகும் பால் - சீம்பால் பல்வேறு தொற்று வியாதி களிலிருந்து குழந்தையைப் பாதுகாக்கின்றது என்கின்றனர் ஆய்வாளர்கள். கொலஸ்ட்ரம் என்ற இந்த சீம்பால் தாய் சாதாரணமாக ஊட்டும் பாலில் தாராளமாகக் கிடைக்கிறது. இப்படி கிடைக்கும் நோய் எதிர்ப்பு சக்திகள் பல்வேறு வகையான நோய்களையும் தடுத்திடும் என்கின்றனர் ஆராய்ச்சி யாளர்கள்.

தாய்ப்பால் அருந்தும் குழந்தைகளுக்கு குடல் புண் போன்றவை வர வாய்ப்பில்லை என்கின்றனர் மருத்துவர்கள்.

மேலை நாட்டு கலாச்சாரத்தில் மூழ்கிப் போன தாய் ஒருவர் இப்படிக் குறிப் பிடுகின்றாள்: "தாய்ப் பாலின் மகிமையை நான் பயணம் செய்து கொண்டிருக்கும் போது தான் உணர்கின்றேன். அங்கே புட்டிகளை சூடான தண்ணீரில் கழுவ வேண்டியதில்லை. எந்தெந்த பால் பவுடரை எந்தெந்த அளவில் கலந்திட வேண்டும் என்ற சிக்கல் இல்லை. குழந்தைகளும் தங்கள் சுண்டு விரலை சூப்பி தங்கள் இயல்பான உந்து தலைத் தணித்திட வேண்டியதில்லை." (டாக்டர் பென்ஜமின் ஸ்போக் In Baby & Child Care)

அமெரிக்காவில் ஏற்பட்ட சிந்தனைச் சிக்கலால் 20ஆம் நூற்றாண்டின் தொடக் கத்தில் அமெரிக்கப் பெண்கள் குழந்தை களுக்குப் பால் தருவதை நிறுத்தும் நிலைக்கு வந்து விட்டனர்.

இந்தக் குழப்பம் இப்போது தெளிந்து பால் கொடுப்பவர்களின் எண்ணிக்கை பெருகி வருகின்றதாம். ஆனந்தப்படு கிறார்கள் அமெரிக்கர்கள்.

அமெரிக்கர்களுக்குப் பித்தம் பிடிப்ப திலோ சித்தம் கலங்குவதிலோ எந்தப் பிரச்னையுமில்லை. ஆபத்து என்னவெனில், அவர்கள் தங்களுக்கேற்படும் குழப்பங்களை வெகு விரைவாக உலக மக்களுக்குப் பரப்பி விடுகிறார்கள்.

இவர்களுடைய முட்டாள்தனங்கள் சில ஆராய்ச்சி முடிவுகள் என்ற ஆதாரத் தோடு வருவதால் எல்லா நாட்டு மக்களும் ஏகமாய்ப் பலியாகி விடுகின்றார்கள்.

ஆனால், இப்போது அவர்களே தாய்ப்பாலின் அருமைகளையும் பெருமை களையும் உணர்ந்து தாய்ப்பாலூட்டத் தொடங்கியுள்ளதால் உலக மக்களும் சற்று கலக்கம் தெளிந்து காணப்படுகின்றார்கள்.

தாய்மார்கள் இந்தப் பாலூட்டும் காலத்தில் தாங்கள் உட்கொள்ளும் உணவில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். அவர்கள் போதிய அளவு உணவையும் உட்கொள்ள வேண்டும். இந்தக் காலத்தில் உண்ணும்

உணவின் அளவால் அவர்களின் எடை கூடுவதில்லை. அதனால் பருத்தும் கனத்தும் விடுவோம் எனக் கவலைப்பட வேண்டாம் என்று ஆர்வமூட்டுகின்றார்கள் மருத்துவர்கள்.

அந்தத் தாய் தான் வழக்கமாக பழக்கமாக்கிக் கொண்ட எல்லா உணவு வகைகளையும் உண்ணலாம்.

அதிக அளவில் மருந்துகளை உட்கொள்ளாமலிருப்பது நல்லது. ஏனெனில், சில மருந்துகள் தாய்ப்பால் வழி ஊடுருவும். குழந்தைகளின் பல், இருதய பாகங்களில் பாதிப்புகளை உண்டாக்கலாம்.

தாய்ப்பாலில் கால்சியம் என்ற சுண்ணாம்புச் சத்து மிகவும் அதிகமாக இருக்கின்றது. இஃது குழந்தையின் எலும்பு வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றது.

தாய் போதிய அளவு உணவை உட்கொள்ளவில்லை என்றால் சுரக்கும் பால் இந்தச் சுண்ணாம்புச் சத்தை அவளது எலும்புகளிலிருந்து எடுத்துக் கொள்ளும். இதனால் பாலூட்டும் தாய் போதிய அளவு உணவு உட்கொள்பவளாக இருக்க வேண்டும். இல்லையேல் பாலூட்டும் தாய் தனது பற்களிலுள்ள சுண்ணாம்புச் சத்தை இழக்க வேண்டியது வரும். பற்களில் பளபளப்பு பாழ்படும். தாய் நிறைய பால் அருந்துவதன் மூலம் அவள் தனக்கும் தன் குழந்தைக்கும் வேண்டிய சுண்ணாம்புச் சத்தைப் பெறலாம்.

குழந்தை பிறந்தவுடன், பால் அடிக்கடி ஊட்டினால் பால் அதிகமாகச் சுரக்க வழி வகுக்கும். பால் கட்டுவதையும் தடுக்கும்.

குழந்தைக்குத் தேவைப்படும் போதெல்லாம் பாலூட்டலாம். எனினும், மருத்துவர்கள் இப்படியொரு கால அளவைப் பரிந்துரைக்கின்றார்கள்: காலை 6 மணி, 9 மணி, 12 மணி, மாலை 3 மணி, 6 மணி, 10 மணி அதிகாலை 2 மணி.

ஆனால், எந்த மருத்துவரும் குழந்தையின் தேவைக்கேற்ப பாலூட்டுவதில் குறுக்கே நிற்கவில்லை.

ஆனால், மூன்று மணி நேரங்கள்தாம் அதிகபட்ச இடைவேளை என்பதில் பெரும்பாலும் ஒருமித்த கருத்து நிலவுகின்றது.

குழந்தை வளர்ப்பில் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்ட டாக்டர் பென்ஜமின் ஸ்பொக் அவர்கள், "என்னுடைய அனுபவத்தில் பால் எவ்வப்போது ஊட்டப்பட வேண்டும் என்பதை குழந்தையே முடிவு செய்யட்டும் என விட்டு விடுவதே சிறந்தது. அதாவது குழந்தை அழும்போது அல்லது இதர சமிக்ஞைகள் வழி தெரிவிக்கும் போது பாலூட்ட வேண்டும்" என்கிறார். குறைந்த அளவு இரண்டு மணி நேர இடைவேளைக்குள் பாலூட்டலாம்.

இறைவன் வழங்கிய அழகிய இயற்கையான உணவு தாய்ப்பால். அதனைத் தவறாமல் தகுந்த அளவில் குழந்தைகளுக்குத் தருவோம்.

இறைவன் இதில் இப்படி வழி காட்டுகின்றான்:

தாய்மார்கள், தங்களுடைய குழந்தைகளுக்கு (அவர்கள் பிறந்ததிலிருந்து) இரண்டு ஆண்டுகள் வரை பூரணமாகப் பாலூட்டவும். (அல்குர்ஆன் 2:233)

இதனடிப்படையில் தாய்ப் பாலைப் பெறுவது குழந்தைகளின் அடிப்படைக் கடமைகளில் ஒன்று என்கிறார் இஸ்லாமிய அறிஞர் ஹமூத் அப்துல் அத்தி (ரஹ்). ஏதேனும் காரணங்களால் ஈன்றெடுத்த தாயால் பாலூட்ட இயலவில்லையெனில் செவிலித் தாய்களைக் கொண்டு பாலூட்டலாம் என்கிறது இஸ்லாம்.

"....நீங்கள் உங்களுடைய குழந்தைகளுக்கு செவிலித் தாய்களைக் கொண்டு பாலூட்டக் கருதி நீங்கள் கொடுக்க வேண்டியதைக் கிரமமாகக் கொடுத்து விட்டால் (அவ்வாறு பாலூட்டுவது) உங்கள் மீது குற்றமாகாது. (அல்குர்ஆன் 2:233)

எப்படியேனும் குழந்தைக்கு தாய்ப்பால் கிடைக்க வேண்டும் என்பதே குறிக்கோள். மகப்பேற்றின் மகிழ்ச்சிகளுள் ஒன்று பாலூட்டுவது.

இப்படி தன் இரத்தத்தை பாலாய்த் தருவதால் அவளுக்கும், அவளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருவதால் தந்தைக்கும் நன்றியுடையவனாய் மனிதன் இருக்க வேண்டும் என்று பணிக்கின்றான் இறைவன்.

*இறைவன் தன் இறைமறையில் இப்படி கூறுகின்றான்:*

தமது தாய், தந்தைக்கு நன்றி செய்வது பற்றி மனிதனுக்கு நாம் நல்லுபதேசம் செய்தோம். அவனுடைய தாய் துன்பத்தின் மேல் துன்பத்தை அனுபவித்து (கர்ப்பத்தில்) அவனைச் சுமந்தாள். அவன் பிறந்த பிறகும், இரண்டு வருடங்களுக்குப் பின்னரே அவனுக்குப் பால் மறக்கடித்தாள். ஆகவே, மனிதனே நீ எனக்கும் (அல்லாஹ்வுக்கும்) உன்னுடைய தாய், தந்தையருக்கும் நன்றி செலுத்தி வா. முடிவில் நீ என்னிடம் வந்து சேர வேண்டியதிருக்கின்றது.(அல்குர்ஆன் 31:14)

குழந்தைகளின் இந்த அடிப்படை உரிமையை நிறைவேற்றிடுவதில் அரசுக்கும் பொறுப்புண்டு.

கலீஃபா உமர் (ரலி) அவர்கள் தங்களின் ஆட்சிக் காலத்தில் பால் குடிக்கும் குழந்தைகளுக்கும் பைத்துல் மாலில் உரிமை உண்டு என அறிவித்தது இங்கு நினைவுகூரத்தக்கது.

பாலூட்டும் காலங்களில் தாயை ஆவேசப்படுத்தும் அல்லது நரம்புத் தளர்ச்சிகளுக்கு ஆளாக்கும் நிலையை யாரும் உருவாக்கிடக் கூடாது. காரணம், இது தாய்ப்பாலை வற்றிடச் செய்யும். இது தந்தை கவனிக்க வேண்டிய விசயம்.

வல்ல அல்லாஹ் அனைவருக்கும் நல்வழி காட்டுவானாக!

*உதவிய நூல்கள்:*

*திருக்குர்ஆன்,* The Family Structure in Islam - By Hammudah Abdal Atti, Baby and Child care - by Dr. Benjamin Spoc

■


## இப்போது பரபரப்பான விற்பனையில்



**பாபரி மஸ்ஜித் :**
**அடிப்படை தகவல்கள்**

**விரிவாக்கப்பட்ட 3ஆம் பதிப்பு – அதிக தகவல்களுடன்**

பாபரி மஸ்ஜித் பற்றிய முழு விவரங்களுடன்

அலகாபத் நீதிமன்ற தீர்ப்பு பற்றி வழக்கறிஞர்களின் வாதங்களுடன்

**விலை ரூ. 90/-**

**இஸ்லாமிய நாகரிகம்**

விரிவாக்கப்பட்ட 3ஆம் பதிப்பு – அதிக தகவல்களுடன்

கொள்கை ரீதியாக இருந்த இஸ்லாம் எப்படி நடைமுறை வாழ்க்கை தத்துவமாகவும் ஆட்சி செய்தது என்பதை விளக்கும் நூல்!

சகோதரத்துவ சமுதாயத்தை சார்ந்தவர்களுக்கு தருவதற்குச் சிறந்த நூல்!

**விலை ரூ. 130/-**



**பாலஸ்தீன முஸ்லிம்கள்**
**அகதிகளான வரலாறு**

பாலஸ்தீனத்திலுள்ள பூர்வீகக் குடிகளான முஸ்லிம்கள் எப்படி அகதிகளாக்கப் பட்டார்கள்?

சர்வதேச தீவிரவாதத்தின் குறகிய வரலாறு

**விலை ரூ. 110/-**

வெளியீடு : **வேர்கள் பதிப்பகம், 52/1, மண்ணடி, 4வது தளம், சென்னை-1. போன் : 94442 39592**

## இஃவான்கள் இயக்கத்துக்குத் தடை

# பேரறிஞர் யூசுப் அல் கர்ளாவி கண்டனம்

**கடந்த** 2011-ம் ஆண்டு எகிப்தில் நடந்த மக்கள் எழுச்சிக்கு பின்பு நடந்த தேர்தலில் வெற்றி பெற்று அதிபரானார் இக்வானுல் முஸ்லிமீன் இயக்கத்தைச் சார்ந்த டாக்டர் முஹம்மது முர்சி.

நவீன காலத்திற்கு ஏற்ப வலுவான இஸ்லாமிய அரசியல் சாசனம் எகிப்தில் நிறைவேற்றப்படும் என்று உலக முஸ்லிம்கள் எதிர்பார்த்திருந்த நிலையில் இவ்வாண்டு (2013) எகிப்து ராணுவம் மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசைக் கலைத்ததோடு அதிபர் முர்சியையும் கைது செய்தது.

எதிர்த்து அறவழியில் போராடிய பொது மக்கள் எண்ணற்றோர் கொல்லப் பட்டனர். இவ்வருடம் ரமலானில் மட்டும் 1000-க்கும் மேற்பட்டோர் கொல்லப் பட்டனர்.

இக்வான் தலைவர்கள் 300 பேர் உட்பட பல்லாயிரக்கணக்கானவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் , கடந்த டிசம்பர் 24 ந்தேதி எகிப்தில் உள்ள மன்சூரா நகரில் நடந்த குண்டு வெடிப்பை காரணம் காட்டி டிசம்பர் 25-ந்தேதி இக்வானுல் முஸ்லிமீன் இயக்கத்தை எகிப்து அரசு பயங்கரவாத இயக்கமாக அறிவித்து தடை செய்தது.

**கர்ளாவி கண்டனம்**

இக்வான்கள் மீதான அரசின் அடக்கு முறைகளுக்கும், தடைக்கும் சர்வதேச இஸ்லாமிய அறிஞர்களின் அமைப்பின் தலைவர் டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி கடும் கண்டனம் தெரிவித்தார்.

கத்தார் நாட்டின் தலைநகர் தோஹாவில் உள்ள உமர் இப்னு கத்தாப் பள்ளிவாசலில் வெள்ளிக்கிழமை (27-12-2013) ஜும்ஆ உரையில் கர்ளாவி பேசியதாவது.

நிச்சயமாக திருக்குர்ஆன் பூமியில் குழப்பம் செய்வதையும், குழப்பத்தைத் தூண்டுவதையும் தடை செய்துள்ளது. பூமியை விவசாயப் பொருட்களை விளைவிப்பதற்கும், கட்டிடங்கள் கட்டு வதற்கும், மனிதன் பிரதிநிதியாக இருந்து செயல்படுவதற்கும் தகுதியானதாகவே அல்லாஹ் படைத்துள்ளான். அத்துடன் மனிதர்கள் அனைவரும் மணமான வாழ்க்கை வாழ தகுதியானதாகவும் படைத் துள்ளான்.

பூமியில் நீதி, நேர்மையை நிரப்பிடவே மனிதனை தனது பிரதிநிதியாக தேர்ந் தெடுத்துள்ளான். ஆதலால் தான் அல் குர்ஆனில் பூமியில் அமைதியும், சமா தானமும் ஏற்பட்டு சீரான பின்னர் குழப்பம் செய்யாதீர்கள். (அல்குர்ஆன் 7:85) என்கிறான்.

எகிப்து சிறிய நாடு அல்ல. 90 மில்லியன் மக்கள் வாழும் பெரிய நாடாகும். எகிப்தில் எழுச்சி ஏற்பட்டால் இஸ்லாமிய நாடுகள் எல்லாவற்றிலும் அவ்வெழுச்சி நிச்சயம் பரவும்.





மன்னர் ஃபாரூக் ஆட்சியை தூக்கி யெறிந்த சமயத்தில் எகிப்து இராணுவம் மக்களுக்கு வாக்களித்தது. மக்களிடம் எல்லா வற்றையும் தருவோம் என்று.

ஆனால் 60 ஆண்டுகளாக எகிப்தை ராணுவம்தான் ஆண்டு வருகிறது. என்னவெல்லாம் சந்திக்கக்கூடாதோ அவை அனைத்தையும் மக்கள் சந்தித்து விட்டனர்.

சுதந்திரம் கிடைக்கவில்லை என்பது மட்டுமல்ல. ஒரு பிடி உணவு கூட பாமர மக்களுக்குக் கிடைக்கவில்லை. அல்லாஹ் விசாலமானவன். அவன் உணவை விசால மாகவே படைத்திருக்கின்றான். ஆனால் இந்த மனிதன்தான் அட்டூழியம் செய்கிறான். அல்குர்ஆனில் அல்லாஹ் கூறுவான், நிச்சயமாக மனிதன் வரம்பு மீறுகிறான். (அல்குர்ஆன் 96:6)

எகிப்து இராணுவம் நாட்டின் வாழ்க் கையையே நாசமாக்கி விட்டது. சமூக, அரசியல், பொருளாதாரம் மற்றும் மதம் சார்ந்த அனைத்தையும் பாழாக்கி விட்டது.

கடந்த 2011 ஜனவரி 25 ந்தேதி எகிப்தில் மாபெரும் மக்கள் எழுச்சி நடந்தது. பெரிய வர்கள், வாலிபர்கள், சிறுவர்கள், தாய் மார்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என எகிப்து தேசமே தஹ்ரீர் சதுக்கத்தில் திரண்டது.

அச்சமயத்தில் தஹ்ரீர் சதுக்கம் சென்று 4 மில்லியன் மக்களுக்கு மத்தியில் நான் உரை யாற்றினேன்.

தேர்தலில் முர்சி போட்டியிட்ட சமயத்தில் இரண்டு தடவை நான் கேட்டேன். இந்த மக்களுக்கு உங்களால் அவர்களின் கோரிக் கையை நிறைவேற்ற முடியுமா?

என்னால் முடியும் என்று நம்பிக்கை யோடு சொன்னார் முர்சி. மேலும் மத நம்பிக்கையுள்ளவர்களை மத நம்பிக்கை யாளர்கள் தான் ஆட்சி செய்ய வேண்டும் என்றும் சொன்னார். அதனால் தான் இக்வான்கள் தேர்தலில் போட்டியிட்டனர்.

ஆனால் எகிப்து கிறிஸ்தவ தலைவர்கள் இஸ்லாமிய ஆட்சியை அஞ்சுகின்றனர். ஆனால் இஸ்லாம் அவர்களுக்கு எதிரானது அல்ல. மாறாக அவர்களை பாதுகாக்கும் மார்க்கம் அது. அதன் நிழலில்தான் பல் லாண்டுகள் அவர்கள் நிம்மதியாக வாழ்ந் துள்ளனர்.

மூர்சி உண்மையாளர். அவரை வழி நடத்திய அவரது மார்க்கம் உண்மையானது. ஆதலால்தான் சியோனிஸ்டுகளும், இஸ்லாத்தின் விரோதிகளும் அவருக் கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர்.

நான் கேட்கிறேன். ராணுவத்தை எதிர்த்துப் போராடும் முஸ்லிம்கள் துப்பாக்கி அல்லது வேறு ஏதேனும் ஆயுதம் கொண்டு வந்தார்களா?

நாகரிக உலகில் ராணுவம் மக்களை ஆட்சி செய்யப் பார்க்கிறது. அடிமை காலத்தை கொண்டு வர நினைக்கிறது.

**மன்சூரா குண்டுவெடிப்பை நாங்கள் கண்டிக்கிறோம். இது இஸ்லாத்தில் தடை செய்யப்பட்ட காரியம். ஒரு முஸ்லிமோ , ஒரு கிறிஸ்தவரோ எகிப்தில் கொல்லப்படுவதை நாங்கள் விரும்புவதில்லை.**

**பொய்க் குற்றச்சாட்டுகள் கூறி இக்வான்கள் கைது செய்யப்படுகிறார்கள்.**

மக்கள் கூட்டத்தை கலைக்க என்ன வெல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றை இராணுவமும், இராணுவத்தின் கைக்கூலி களும் செய்கின்றனர்.

கொலை செய்கின்றனர். தீயிட்டு கொளுத்துகின்றனர். துப்பாக்கி மற்றும் பீரங்கி டாங்கிகளால் சுடுகின்றனர்.

பலரை கொலை செய்துள்ளனர். பலரை நெருப்பிட்டு கொளுத்தியுள்ளனர். இறந்தவர் களின் பெயர்கள் பதிவு செய்யப் பட்டு வருகின்றன. இது இதற்கு முன்னர் ஜமால் அப்துன் நாசர், அன்வர் சாதாத், ஹுஸ்னி முபாரக் போன்ற கொடுங்கோலர்கள் செய் யாதது.

நிச்சயமாக அல்லாஹ் பிடிப்பான். அவர்கள் செய்பவற்றை விட்டும் அல்லாஹ் பாராமுகமாக இல்லை. (அல் குர்ஆன் 6:112)

மன்சூரா குண்டுவெடிப்பை நாங்கள் கண்டிக்கிறோம். இது இஸ்லாத்தில் தடை செய்யப்பட்ட காரியம். ஒரு முஸ்லிமோ , ஒரு கிறிஸ்தவரோ எகிப்தில் கொல்லப்படுவதை நாங்கள் விரும்புவதில்லை.

பொய்க்குற்றச்சாட்டுகள் கூறி இக்வான்கள் கைது செய்யப்படுகிறார்கள். இது அவர் களுக்கு ஒன்றும் புதிதல்ல. 60 ஆண்டுகளாக இதைத்தான் அவர்கள் அனுபவித்து வருகிறார்கள். ஷாதிர், பதீஃ என எண்ணற்ற தலைவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்? அவர்கள் ஏன் சிறையில் அடைக்கப்பட் டுள்ளனர்?

இப்போது இக்வான்கள் இயக்கம் பயங்கரவாத இயக்கமாம். யார் பயங்கரவாதி? ராணுவமா? இக்வான்களா?

இங்கு கொலைகளை செய்பவன் பயங்கரவாதியா? கொல்லப்படுபவன் பயங்கரவாதியா?

எகிப்து ராணுவமே நீங்கள் பயங்கர வாதிகள். அப்பாவிகளை நீங்கள்தான் கொல்கிறீர்கள்.

எங்களைப் பார்த்து பயங்கரவாதிகள் என்று சொல்வது ஒன்றும் புதிதல்ல. இதற்கு முன்பு சிரியாவின் பஷார் அசத் இவ்வாறு தான் சொன்னார். அவரது தந்தை ஹாஃபிள் அசத் இதைத்தான் சொன்னார். இக்வான் களுக்கு சொல்லொணாத் தொல்லைகளைத் தந்தார்.

இக்வான்களை பயங்கரவாதிகள் என்கிறீர்களே, பத்திரிகைகளைத் தவிர யாராவது உங்களுடன் உள்ளார்களா? பொது மக்கள் யாரும் உங்களுடன் இல்லை.

அநீதியாளர்களே! உங்களின் கூற்றை உங்களுக்கெதிராகவே அல்லாஹ் திருப்பு வான்.

1948 ம் ஆண்டு எகிப்து வக்கீல் கான்தார் கொல்லப்பட்ட பொழுது இமாம் ஹஸனுல் பன்னா அதனை கண்டித்தார்கள். அதனை ஹராம் என்று அறிவித்தார்கள்.

இப்போது ராணுவக் கைக்கூலியாக பிரதமராக உள்ள பப்லாவியை (Beblawi) பொருளாதார நிபுணர் என்றே நினைத் திருந்தோம். ஆனால் அவர் தன்னை இழிவான மனிதன் என்று நிரூபித்து வருகிறார்.

ஸீசி, மன்சூர், தர்தூர் ஆகியோர் அல்லாஹ்வை அஞ்ச வேண்டும். நிச்சயமாக அல்லாஹ் அநியாயமாக அப்பாவி மக்களை கொன்றொழித்தது குறித்து அவர்களிடம் கேட்பான்.

**தகவல் : ர.ஃயுல் யவ்ம் அரபி நாளிதழ்**
**மௌலவி அபுல் ஹஸன் ஆலிம் ஃபாஸி**





**கர்கரேயைக் கொலை செய்தது யார்?**

இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம்

**ஆசிரியர் : S.M.முஷ்ரிப்**

முன்னாள் DIG – மகாராஷ்டிரா.

**பக்கங்கள் 428 - விலை ரூ. 250**

**வெளியீடு: வேர்கள் பதிப்பகம், 52/1, மண்ணடி, கோனிகா பில்டிங் 4 வது தளம், சென்னை -1. செல்: 81481 29887**

இந்தியாவில் ஓர் இராணுவப் புரட்சி மூலம் இந்தியாவை இந்து ராஷ்டிரமாக அறிவித்திட வேண்டும். இந்திய அரசியல் நிர்ணய சட்டத்தையும் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய அரசையும் தூக்கிவிட வேண்டும் என்ற இந்துத்துவ தீவிரவாதிகளின் திட்டத்தைக் கண்டுபிடித்து உலகுக்கு அறிவித்தார். நேர்மையான மராட்டிய மாநில காவல்துறை அதிகாரி ஹேமந்த் கர்கரே! இதனால்தான் அவர் கொலை செய்யப்பட்டார். அது எப்படி? ஏன் என்பதை விளக்கும் நூல். ஒவ்வொரு குடிமகனும் அவசியம் படிக்க வேண்டிய நூல்.

# லண்டனில் 1001 கண்டுபிடிப்புகள் கண்காட்சி




**இன்றைய** உலகின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியவர்கள் முஸ்லிம்களே!

இப்படியொரு தலைப்பில் ஓர் தகவல் பேழையைத் தந்து உலகை அதிசயத்திற்குள் ஆழ்த்தி இருக்கின்றார் உலகப் புகழ் பெற்ற ஆய்வாளர், கட்டுரையாளர் ஒலிவியா ஸ்டென்ஸ் – OLIVIA STERNS.

அவருடைய கட்டுரையைச் சுருக்கமாக இங்கே தருகின்றோம்.

“நவீன உலகை வடிவமைத்த பெருமையை இத்தாலி நாட்டுக்குச் சூட்டி விடுவது எங்களது மேலை நாட்டவர்களின் வஞ்சகம் நிறைந்த வாடிக்கை.

காபியைக் கண்டுபிடித்தவர்களும், பல் துலக்கும் ‘பிரஷ்’ஷைக் கண்டுபிடித்ததும் கூட அவர்கள்தாம் (இத்தாலியர்) என நாங்கள் (மேலைநாட்டவர்) அடிக்கடி அவர்களுக்கு ஆலவட்டம் சுழற்றுகின்றோம்.

ஆனால், நேர்மையும் நேர்த்தியும் நிறைந்த ஓர் ஆய்வு எல்லாக் கண்டுபிடிப்புகளுக்கும் காரணகர்த்தர்களாக இருந்தவர்கள் முஸ்லிம்களே என்பதை நிரூபிக்கும்.

உலகில் முதல் பல்கலைக் கழகத்தை நிறுவியதிலிருந்து பல் துலக்கும் குச்சிகளைக் கண்டுபிடித்துத் தந்தது வரை உள்ள பெருமை முஸ்லிம்களையே சாரும்.

### 1001 கண்டுபிடிப்புகள்

‘1001 கண்டுபிடிப்புகள்’ என்ற தலைப்பின் கீழ் லண்டன் மாநகரில் (இது கிரேட் பிரிட்டன் என்ற ஆங்கிலேய நாட்டின் தலைநகர்) ஓர் விஞ்ஞான கண்காட்சியை சலிம் அல் ஹஸனி என்பவர் நடத்திக் கொண்டிருக்கின்றார். இவர், அங்குள்ள விஞ்ஞான கலைக் கூடத்தின் தலைவர் Chairman Foundation For Science & Technology and Civilization.

சலீம் அல் ஹுஸைன் அவர்களின் 1001 முக்கிய முஸ்லிம் கண்டுபிடிப்புகளின் பட்டியலை இங்கே தருகின்றோம்.

### அறுவை சிகிச்சை

கி.பி.ஆயிரமாவது ஆண்டில் முஸ்லிம் உலகின் மேதை டாக்டர் அல்ஸஹ்ராவி அவர்கள் ஓர் மருத்துவ கலைக்களஞ்சியத்தை வெளியிட்டார்கள். இது அழகிய வரைபடங்களோடு 1500 பக்கங்களைக் கொண்டதாக இருந்தது. அத்தனையும் அறுவை சிகிச்சையை எப்படி செய்ய வேண்டும் என்பதை விளக்கிச் சொல்பவையாக இருந்தன.

அல் ஸஹ்ராவி அவர்களின் இந்த அறுவை சிகிச்சை நூல்தான் அடுத்த 500 ஆண்டுகளுக்கு ஐரோப்பாவிற்கு அறுவை சிகிச்யில் வழிகாட்டும் ஒளி விளக்காக அமைந்தது.

மனித இனத்திற்கு இன்றளவும் அறுவை சிகிச்சைகள் தரும் நிவாரணங்களுக்கும், அறுவை சிகிச்சை பற்றிய நுண்மான் நுழைபுலத்திற்கும் (Techniques) இந்த நூலே அறுதியான வழிகாட்டி.

அல்ஸஹ்ராவி அவர்கள்தாம், அறுவை சிகிச்சையில் தையல் போடுவதற்கு பூனை குடலை நூலாகப் பயன்படுத்தும் முறையைக் கொண்டு வந்தார்கள். அறுவை சிகிச்சை முடிந்து புண் ஆறியவுடன் இந்த பூனைக் குடல் தானாகக் கரைந்து விடும். உடல் உறுப்புகளுக்கு உள்ளால் தையல்கள் போட்டால் புண் ஆறிய பின்பு அல்லது உறுப்புகள் ஒன்றிணைந்த பின்பு தையலைப் பிரிக்க இரண்டாவது ஒரு முறை அறுவை

சிகிச்சை செய்ய வேண்டியது இருந்தது இதற்கு முந்தைய காலகட்டங்களில். அதை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது. இந்த அறுவை பூனைக் குடல் நூல் மூலம் தையல் போடும் முறை.

அல்ஸஹ்ராவி அவர்கள்தாம் முதலில் அறுவை சிகிச்சையின் வழி மகப்பேறு முறையை குழந்தையை தாயின் வயிற்றி லிருந்து வெளியே எடுக்கும் முறையைக் கண்டுபிடித்தார். மருத்துவத் துறையில் முதல் 'குறடு' என்ற கிடுக்கியைத் தயாரித்தவரும் இவர்தான்.

2. காபி (Coffee)

இன்றைக்கு மேலை நாடுகளில் மிகவும் விரும்பி அருந்தப்படும் பானங்களுள் ஒன்று காபி.

இந்த காபியை முதன் முதலில் வளர்த்தவர்கள் ஏமன் பிரதேசத்தைச் சார்ந்தவர்கள்தாம்.

தொடக்க நாட்களில் இரவின் பிந்திய நேரம் வரை விழித்திருந்து, வணக்க வழிபாடு களில் ஈடுபட்ட சூஃபியாக்கள், காபி அருந்தும் பழக்கமுடையவர்களாக இருந்தார்கள். தாங்கள் விழித்திருக்க அது, பயன்பட்ட தாகக் கருதினார்கள்.

பின்னர் ஏமனில் கல்வி கற்றுக் கொண் டிருந்த மாணவர்கள் எகிப்தின் தலைநகர் கெய்ரோவுக்கு காபியைக் கொண்டு வந்தார்கள். அங்கே, காபி வியாபாரம் களை கட்டியது. எகிப்திய சாம்ராஜ்யம் முழுவதும் இந்த காபி பழக்கம் பரவியது.

கி.பி.13-ஆம் நூற்றாண்டில், இந்தப் பழக்கம் துருக்கியைச் சென்றடைந்தது. அதிலிருந்து 300 வருடங்களுக்குப் பின், கி.பி. 16-ஆம் நூற்றாண்டில்தாம். இந்தப் பழக்கம் இத்தாலியைச் சென்றடைந்தது. அதன் பின் ஐரோப்பா முழுவதும் பரவியது. இத்தாலிக்கு 'வெனிஸ்' நாட்டைச் சார்ந்த ஒரு வியாபாரி தான் காபியை அறிமுகம் செய்து வைத்தார்.

3. பறக்கும் இயந்திரம்

முதல் முதலில் பறக்கும் இயந்திரம் ஒன்றைக் கண்டு பிடித்ததும், பறந்து காட்டி யதும், அப்பாஸ் ஃபிர்நாஸ் என்பவர்தான்.

கி.பி.19ஆம் நூற்றாண்டின், தொடக் கத்தில் பறவையின் இறக்கை போன்றதொரு (இறக்கைகள் உள்ள) இயந்திரம் ஒன்றை அப்பாஸ் ஃபிர் நாஸ் அவர்கள் வடிவமைத் தார்கள்.

ஸ்பெயின் நாட்டின் தலைநகர் கார்தோபாவில் சில மணித் துளிகள் மேல் நோக்கிப் பறந்தார். பின்னர் கீழே வீழ்ந்தார். தன்னுடைய முதுகுத் தண்டை சற்றே உடைத்துக் கொண்டார். இந்த இயந்திர வடிவமைப்பை வளர்த்துதான், பின்னர் இத்தாலிய கலைஞரும் கண்டுபிடிப் பாளருமான லியானார்டோ டாவின்சி இந்த பறக்கும் முறைமையை வளர்த்தார்கள். அதற்கு நீண்டதொரு காலகட்டத்தை எடுத்துக் கொண்டார்கள்.

> கி.பி. 1000-ஆவது ஆண்டில்
> இப்னு அல் ஹெய்த்தம்
> என்பவர் வெளியிட்ட
> ஆய்வறிக்கையில் எப்படி
> விழிகள் பார்க்கின்றன,
> பார்க்கும் பொருளின்
> பிம்பங்கள் மூளையில்
> பதிகின்றன என்பனவற்றைத்
> தெளிவுபடுத்தினார்.

4. பல்கலைக் கழகம்

கி.பி.859இல் மொராக்கோவின் இள வரசி ஃபாத்திமா அல் ஃபிர்ஹி என்பவர்தாம் 'ஃபெஸ்' எனுமிடத்தில் (மொராக்கோவின் பிரதான நகரம்) பட்டங்கள் வழங்கிடும் பல்கலைக் கழகத்தைத் தொடங்கினார்.

இளவரசி ஃபாத்திமா அல் ஃபிர்ஹி-யின் சகோதரி மர்யம் அதற்குப் பக்கத்தில் பெரிய

பள்ளிவாசல் ஒன்றைக் கட்டினார். இதன் பின் அந்த மொத்த இடமும் அர் ஹறரவின் பள்ளிவாசல் பல்கலைக் கழகம் என வழங்கப்பெற்றது.

1200 ஆண்டுகளுக்கு, முன் நிறுவப்பட்ட இந்தப் பல்கலைக் கழகம் இன்றளவும் இயங்கிக் கொண்டிருக்கின்றது. (இது இந்தப் பல்கலைக் கழகத்தை நிறுவியவர்கள் மறுமையில் பெறும் நற்கூலிகளை உரக்கப் பேசிடும்.)

இஸ்லாம் கல்விக்கு வழங்கிடும் முக்கியத்துவத்தை இந்தப் பல்கலைக் கழகம் பறைசாற்றிடும் உலகெங்கிலுமுள்ள முஸ்லிம் பெண்கள் இது போன்ற பல்கலைக் கழகங்களை நிறுவிட இந்த பல்கலைக் கழகம் போதிய உற்சாகத்தை வழங்கிடும் - இன்ஷா அல்லாஹ்.

5. அல்ஜீப்ரா

பாரசீக கணித மேதை அல்கவாரிஜிம் 9ஆம் நூற்றாண்டில் இவர் எழுதிய ஆய்வு நூல் கிதாபுல் ஜபுர், வல் முஹபலா, Kitab al Jabr wal Mugabala இதனை அறிவார்ந்த சமப் படுத்துதல் என மொழிபெயர்க்கலாம்.

இதே அல் கவாரிஜிமிதான் எண்களை சந்திப்படுத்தும் (raising numbers to a power) என்ற முறையையும் கண்டுபிடித்தார்.

6. ஒளியியல்

நம் கண்களின் பார்வை ஒளியியல் இவற்றில் ஆராய்ச்சிகளைச் செய்து, பல அரிய உண்மைகளை அறிவுலகத்திற்குத் தந்தது முஸ்லிம் உலகந்தான்.

கி.பி. 1000-ஆவது ஆண்டில் இப்னு அல் ஹெய்த்தம் என்பவர் வெளியிட்ட ஆய்வறிக் கையில் எப்படி விழிகள் பார்க்கின்றன, பார்க்கும் பொருளின் பிம்பங்கள் மூளையில் பதிகின்றன என்பனவற்றைத் தெளிவு படுத்தினார்.

இவற்றையெல்லாம் கொண்டு நிழற்பட கருவி (Camera) ஒன்றையும் தயாரித்தார். இந்த நுழைபுலம் பின்னாளில் முழு அளவில் நிழற்படக் கருவியைத் தயாரிக்கப் பயன் படுத்தப்பட்டது.

7. பல் துலக்கும் குச்சி

லண்டனில் ஒரு பெரும் கண்காட்சியை 1001 கண்டுபிடிப்புகள் என்ற பெயரில் நடத்திக் கொண்டிருக்கும் சலீம் அல் ஹஸனி அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் பல் துலக்க 'மிஸ்வாக்' குச்சியைப் பயன்படுத்தி னார்கள். அதைப் பரவலாக்கினார்கள். மிஸ்வாக் என்னும் மரத்தின் வேரை இதில் அதிகமாகப் பயன்படுத்தினார்கள். 'மிஸ் வாக்'கின் வேரைப் போன்றவை இன்றைய பற்பசைகளிலும், பயன்படுத்தப்படுகின்றன.

8. சுழற்சி உண்டாக்கிட உதவும் வளைந்த அச்சு

இன்றைக்கு மனித வாழ்க்கையில் முக்கிய இடத்தைப் பிடித்துக் கொண் டிருப்பது தானியங்கிகளும், அவற்றை அடிப்படையாகக் கொண்ட வீட்டு உபயோகப் பொருள்களுந்தான்.

இந்த தானியங்கிகளின் தந்தை எனப் படுவது (Crank) என்ற சுழற்சி உண்டாக்கிட உதவும் வளைந்த அச்சுதான். இதனை முதன் முறையாக வடிவமைத்தவர் அல் ஜசாரி என்பவர்தான். இதனை கி.பி.12ஆம் நூற் றாண்டில் இந்த உலகுக்கு அறிமுகம் செய்தார்.

□

வைகறை வெளிச்சம்

இதழில் விளம்பரம் செய்து பயனடையுங்கள்.

# தொடரும் முசாபர் நகர் கலவரங்கள்



## ஒட்டுக்காக பாரதீய ஜனதாவின் இனப்படுகொலைகள்

**முசாபர்** நகரில் ஆகஸ்ட் 25-இல் தொடங்கி, செப்டம்பர் 7,8-களில் முழு கலவரமாகியது. 60,000 முஸ்லிம்கள் தங்களது சொந்த இடங்கள், கரும்பு விளையும் நிலங்கள் இவற்றையெல்லாம் துறந்து, அகதிகள் முகாம்களுக்கு வந்தனர்.

முசாபர் நகர் முஸ்லிம்களை மட்டும் 58 அகதிகள் முகாம்களில் வைத்திருந்தனர். பின்னர் மூன்று மாவட்டங்களுக்கு இந்தக் கலவரங்களை எடுத்துச் சென்றார்கள். அந்த மாவட்டங்களில் தங்கள் நிலங்களை இழந்து வந்தவர்களுக்கு முலாயம் சிங் யாதவின் மகன் அகிலேஷ் யாதவ் அகதிகள் முகாம்களை அமைத்துத் தந்திடவில்லை.

மாறாக, அந்த மக்களை அரவணைத்துக் கொள்ளும் பொறுப்பை மதரஸாக்கள் ஏற்றுக் கொண்டன.

இந்நிலையில் சிலர் இந்த மொத்த விவகாரத்தையும் உச்சநீதிமன்றம் கொண்டு சென்றார்கள். உச்சநீதிமன்றம் உத்திரப் பிரதேச அகிலேஷ் யாதவ் அரசிடம் விளக்கம் கேட்டது.

### முதலமைச்சரின் கெடுபிடி

முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் உச்சநீதிமன்றத்தில் தந்த விளக்கத்தில், 51,000 முஸ்லிம்கள் 58 அகதிகள் முகாமில் இருப்பதாகவும் அவர்கள் நன்றாகக் கவனிக்கப் படுவதாகவும் கூறியுள்ளளார்.

இதில் மதரஸாக்களில் தஞ்சம் புகுந்த மக்களை கணக்கில் எடுத்துக் கொள்ள வில்லை அகிலேஷ் யாதவ் அரசு. அவர்களை அதாவது மதரஸாக்களில் தஞ்சம் புகுந்துள்ள மக்களை பராமரிக்கும் பொறுப்பை ஜம்மியத்தே உலமாயி ஹிந்த் மஜ்லிசே முஷாவரத், ஜமாஅத்தே இஸ்லாமி உள்ளிட்ட இஸ்லாமிய அமைப்புகள் கவனித்து வருகின்றன. அரசு செய்யத் தவறியவற்றை முஸ்லிம் அமைப்புகள் சரி செய்கின்றன என்ற எண்ணத்தோடுதான் திரும்பினோம்.

எந்த கவனிப்பு எப்படி இருந்தாலும் திறந்த வெளியில் அங்கும் இங்குமாய் சிதறிக் கிடக்கும் குடும்பங்கள் ஏராளம்.

### குழந்தைகள் மரணம்

இது வட இந்தியாவின் கடுமையான குளிர்காலம். இந்தக் குளிரின் கொடுமை தாளாமல் பல குழந்தைகள் இறந்துள்ளனர். (ஆதாரம்: The Hindu, p.10, Dec. 25, 2013)

இதனை மெத்த வருத்தத்தோடு தனது தலையங்கத்தில் குறிப்பிடும் இந்து நாளிதழ், அகதிகள் முகாம்களைப் பற்றி எவ்வளவு குறைவாக சொல்லுகின்றோமோ அவ்வளவுக்கு நல்லது எனக் குறிப்பி டுள்ளது.

இவையெல்லாம் நம் நெஞ்சை அழுத்தும், நிவாரணங்களை அள்ளித் தந்தோம் என நாம் அரற்றுவது விளம்பர வேஷங்கள் தானா?

முஸ்லிம்கள் பிணமானால், மோடி, அத்வானி, வாஜ்பேய் வகையறாக்கள்தாம் அரசியல் பண்ணுகின்றார்கள் என்றால் நாமும் அதே மக்களின் அவலங்களை நமது விளம்பரங்களுக்குப் பயன்படுத்துவது நியாயமா?

அகதிகள் முகாம்களின் அழுத்தங்கள் தாளாமல், அங்கொன்றும் இங்கொன்று மாக சில குடும்பங்கள் சிதைந்து கிடப்பதை நாமும் கண்ணுற்றோம். அந்தக் குடும்பங்கள் எந்தப் பராமரிப்புமில்லாமலும் கிடந்தன.

ஆனால், நாம் அங்கிருந்து அகன்ற சில நாட்களுக்குள் அவர்களெல்லாம் குடியமர்த்தப்பட்டு விட்டார்கள் என்ற செய்தி அறிந்து மகிழ்ந்தோம்.

ஆனால், தி இந்து நாளிதழின் செய்தி எல்லோரையும் போல் நம்மையும் அதிர்ச்சிக்கு ஆளாக்கியுள்ளது. இந்தச் செய்தியை நிவாரணங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அமைப்புகளின் பார்வைக்குக் கொண்டு சென்றிருக்கின்றோம்

இதில் நெஞ்சைப் பிழியும் செய்தி என்னவெனில், இந்த அகதிகள் முகாம்களில் இருப்பவர்கள் உடனேயே அங்கிருந்து வெளியேறிட வேண்டும் என அகிலேஷ் யாதவின் அரசு கட்டாயப்படுத்துவதுதான். ஏனெனில், தேசிய மனித உரிமை ஆணையம் அங்கே ஓர் ஆய்வுக்காக வருகின்றது என்பதை அரசு காரணம் காட்டுகிறது.

இதில் அரசின் பராமரிப்பின் கீழ் இருக்கும் அகதிகள் முகாம்களில் இருக்கும் மக்களைத்தான் நெருக்கடிகளுக்கு உள்ளாக்கி வெளியேற்றிடக் கட்டாயப்படுத்துகின்றார்கள் என்றில்லை, மாறாக, மதரஸாக்களில் இருக்கின்ற முஸ்லிம்களையும் முஸ்லிம் அமைப்புகளின் பராமரிப்பில் இருக்கின்ற முஸ்லிம்களையும் விரட்டுகின்றது அனைத்து முஸ்லிம்களின் வாக்குகளையும் பெற்று ஆட்சியில் அமர்ந்த அகிலேஷ் யாதவின் அரசு.

### புதுமையான ஒப்பந்தம்

இதற்கு முன்னால் இந்த அகிலேஷ் யாதவின் அரசு முஸ்லிம்களிடம், எங்கள் சொந்த ஊருக்குத் திரும்ப மாட்டோம், எங்கள் சொந்த வீட்டைத் திரும்பக் கேட்க மாட்டோம், எங்கள் நிலபுலன்களை, கரும்புத் தோட்டங்களைத் திரும்பக் கேட்க மாட்டோம்' என உறுதிமொழிகளை எழுத்து மூலம் தந்தால், ஐந்து லட்சம் ரூபாய் தருவோம் எனக் கூறியது. எழுதி வாங்கியது. இந்தப் பின்னணியில் 900 குடும்பங்கள் எழுதித் தந்துவிட்டு காணாமற் போய் விட்டார்கள்.

அவர்கள் எங்கேயும் ஓர் சேரியில் ஒதுங்கியிருப்பார்கள்.

எழுதித் தந்தவர்களின் சொந்த நிலங்களை, வீடுகளை யார் பெற்றுக் கொண்டார்கள்? அகிலேஷ் யாதவின் அரசா, அல்லது அன்று கலவரங்களை நடத்தி இந்த முஸ்லிம்களை அகதிகள் முகாம்களுக்கு அனுப்பினார்களே அந்த மோடி, அத்வானி, வாஜ்பேயி வகையறாக்களா என்பதை ஆய்வு செய்தால் கிடைக்கும் உண்மை இன்னும் கொடூரமானது. அது அந்த இனப்படு கொலைகாரர்கள்தாம் அந்த இடங்களைப் பிடித்துக் கொண்டார்கள். அவர்களுக்கு அந்த நிலங்களைப் பெற்றுத் தந்ததன் மூலம் அவர்களின் வாக்குகள் கிடைக்கும் என அகிலேஷ் யாதவ் பகல் கனவு காண்கிறார்.

அகிலேஷ் யாதவின் இந்தச் செயல் வகுப்புக் கலவரக்காரர்களுக்கு உற்சாகத்தைத் தந்ததோடு, வகுப்புக் கலவரம், அதில் கொலை செய்தல், அதில் கொலையுண்டவர்களின் பொருள்களைக் கொள்ளையடிப்பது என்பவை சட்டப்படி ஆகுமானவையாக ஆக்கப்பட்டுள்ளன.

### முசாபர் நகர் இனப்படுகொலையின் தனித்தன்மை

'குஜராத் 2002'ஆம் ஆண்டு நரேந்திர மோடி முன்னின்று நடத்திய இனப்படுகொலையின் போது முஸ்லிம் பெண்கள் அவமானப்படுத்தப்பட்டு, கற்பழிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள். பின்னர் தாங்கள் பலநூறு ஆண்டுகளாக வாழ்ந்து கொண்டிருந்த இடங்கள், வீடுகள் இவற்றிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். அந்த வீடுகளை மோடியின் ஆட்கள் அபகரித்துக் கொண்டார்கள். அந்த மக்கள் மீண்டும் தங்கள் வீடுகளுக்குள் அனுமதிக்கப் படவில்லை.

அதே போல் முசாபர் நகரிலும் நடந்தது என்னவெனில், நடந்த கொலைகளின் கோரம், பெண்கள் அவமானப்படுத்தப்பட்ட விதம் இவற்றால் அந்த மக்கள் தாங்களாகவே எந்தக் காரணத்தைக் கொண்டும் தங்கள்

இல்லங்களுக்குத் திரும்பிச் செல்ல மாட்டோம் எனக் கூறிவிட்டார்கள்.

அகிலேஷ் யாதவின் அரசும், சங்கப் பரிவாரத்தோடு சேர்ந்து கொண்டதால் எந்த நிலையிலும் நீங்கள் உங்கள் இல்லங்களுக்குத் திரும்புங்கள் என்றோ உங்களுக்குப் பாது காப்பு தருவேன் என்றோ கூறிடவில்லை. அகதிகள் முகாம்களை விட்டு வெளியேறுங்கள் என்று மட்டும் கட்டாயப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

முசாபர் நகரில் வகுப்புக் கலவரங்களை நடத்திய பாசிஸ்டுகளுக்குப் பாராட்டுகள் வழங்கப் பெற்றன.

சங்கீத் சோம், சுரேஷ் ரானா இவர்கள் முசாபர் நகர் மாவட்டத்திலிருந்து சட்ட மன்ற உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள், இருவருமே பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள்.

இவர்கள்தாம் முசாபர் நகர் கலவரத்தைத் தூண்டியவர்கள் என குற்றம் சாட்டப் பெற்றவர்கள்.

முதலில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தையே இவர்கள் மீது பாய்ச்சினார்கள். பின்னர் ஒரு கண்துடைப்பு நாடகத்திற்குப் பின்பு அதிலிருந்து விடுவித்து விட்டார்கள். உடனேயே ஜாமீன் என்ற பிணையையும் வழங்கி விட்டார்கள்.

இந்த மொத்த நிகழ்வும் ஆக்ராவில் நடந்தது. பின்னர் இந்த நிகழ்ச்சியில் ‘இனப் படுகொலை புகழ்’ நரேந்திர மோடியும் கலந்து கொண்டார்.

நிகழ்ச்சியில் பாரதீய ஜனதா கட்சியின் தலைவர்களுள் ஒருவரான கல்ராஜ்மிஷ்ரா கலந்து கொண்டார்.

**உத்திரப்பிரதேசத்தில் தொடரும் கலவரங்கள் அதில் காப்பாற்றப்படும் சங்கப் பரிவாரத்தினர்**

பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்தவர்கள் மீது துப்பாக்கிச் சூடு

உத்திரப் பிரதேசம்.

அங்கே பாக்பாட் நகரம். அதற்குப் பக்கத்தில் வாகிதிபூர் என்ற கிராமம். நவம்பர் 2013-இல் இந்த வாகிதிபூர் என்ற கிராமத்தில் முஸ்லிம்கள் பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்தார்கள்.

ஐந்து பாசிஸ்டுகள் திடீரென வந்தார்கள். தொழுது கொண்டிருந்தவர்களைச் சுட்டார்கள். இதில் தொழுது கொண்டிருந்த சுஹைப் என்பவர் அந்த இடத்திலேயே இறந்தார். இக்பால் என்பவர் பின்னர் மருத்துவமனையில் இறந்தார். இன்னும் ஆறு பேர் படுகாயமடைந்தனர். சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதில் துப்பாக்கியோடு வந்த ஐந்து இந்துத்துவ தீவிரவாதிகளைக் கைது செய்தார்கள். அவர்களின் பெயர் சுஷில், சுபோத், அமித், ஓம்பிரகாஷ் மற்றும் பிரமோத்.

இவர்கள் கைது செய்யப்பட்டவுடன்

**உத்திரப் பிரதேசம் 80 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மாநிலம். அங்கு முஸ்லிம்கள் எல்லாத் தொகுதி களிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றார்கள். எந்தத் தொகுதியை எடுத்தாலும் 20 சத விகிதம் வாக்குகள் முஸ்லிம்களுடையவை.**

அவர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டம் பாய்ச்சப்பட்டது. பின்னர் அரசால் அமைக்கப்பட்ட குழு அவர்களை தேசிய பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விடுவித்தது. உடனேயே பிணை என்ற ஜாமீனும் வழங்கப் பெற்றது. இப்போது அவர்கள் குழுவாக முஸ்லிம் கிராமங்களில் சுற்றி வந்து கொண்டிருக்கின்றார்கள். முஸ்லிம் இளைஞர்கள் குறி வைத்துக் கொலை செய்து வருகின்றார்கள்.

முஸ்லிம்கள் புழுவாய் நெளிந்து கொண்டிருக்கும் அகதிகள் முகாம்களைப் பற்றிய செய்திகள் முஸ்லிம்களின் மீடியாக்களின் கவனத்தை முழுமையாக ஆக்கிரமித்திருப்பதால் இது போன்ற நிகழ்வுகள் கண்டுகொள்ளப்படுவதில்லை.

**உத்திரப் பிரதேசத்தில் தொடரும் முஸ்லிம் இனப்படுகொலை**

*அரசு இந்தக் கொலைகாரர்கள் பயன்படுத்திய துப்பாக்கிகளைக் கூட பறிமுதல் செய்யவில்லை.*

**வகுப்புக் கலவரங்களே வழி**

Riots for Votes - India Today

Riot is our Route - Front Line

*இப்படித்தான் தலைப்பிட்டுத் தந்தார்கள் தங்கள் ஆய்வுகளை, அரசியல் ஆய்வாளர்கள்.*

*உத்திரப் பிரதேசம் 80 நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மாநிலம். அங்கு முஸ்லிம்கள் எல்லாத் தொகுதி களிலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றார்கள். எந்தத் தொகுதியை எடுத்தாலும் 20 சத விகிதம் வாக்குகள் முஸ்லிம்களுடையவை.* (India Today Sep. 23-09-2013)

*அத்தோடு 30 தொகுதிகளில் 35 முதல் 40 சதவிகிதம் வாக்குகள் முஸ்லிம் களுடையவை.* (India Today 23-09-2013) *இதனால் முஸ்லிம் களின் வாக்குகளை எந்த நிலையிலும் பெற்றிட இயலாது என்பதை பாரதீய ஜனதா கட்சி அறியும்.*

*ஒரே ஒரு வழிதான் இதற்கிருக்கின்றது. அது வாக்காளர்களை இந்துக்கள் என்றும் முஸ்லிம்கள் என்றும் பிரிப்பது; பிளப்பது. அதில் இந்துக்களின் வாக்குகளை ஒட்டு மொத்தமாகப் பெறுவது. அதே நேரத்தில் முஸ்லிம்களை வாக்களிக்க விடாமல் தடுப்பது.*

*இதில் அவர்களின் நீண்டகாலத் திட்டமாகிய முஸ்லிம்கள் இல்லாத இந்தியா போன்ற கனவுகளும் நிறைவேறி விடுகின்றன.*

*இந்தக் காரணங்களால் அவர்கள் வகுப்புக் கலவரங்களைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.*

*முசாபர் நகர், மீரட், ஷாம்லி, மொராதாபாத் என கலவரங்கள் தொடர்ந்து கொண்டே செல்கின்றன.*

*இப்போது புலாண்ட், ஷாஹார் ஆகிய இடங்களுக்கும் பரவியுள்ளது.*

*முஹர்ரம் வருடப் பிறப்பின் போது, வழக்கம் போல் பள்ளிவாசல்களை வெள்ளை அடிப்பது, புதுப்பித்தல், பள்ளி வாசல்களைச் சுற்றியுள்ள இடங்களைச சுத்தப்படுத்துவது என பணிகளை முஸ்லிம்கள் மேற்கொண்டுள்ளனர். இது அவர்கள் இந்த வருடந்தான் இதைச் செய்கின்றார்கள் என்றில்லை; வருடந்தோறும் செய்யும் வழக்கமான பணிதான் இது.*

*ஆனால், இந்த வருடம் சங்கப் பரிவாரத் தினர் அவற்றைச் செய்திடக் கூடாது என வம்பிழுக்கின்றனர். தொடர்ந்து சங்கப் பரிவாரத்தினர் நடத்திய கலவரங்களில் 400 குடும்பங்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளனர். உத்திரப் பிரதேச அரசு கனைத்துக் கூட காட்டிடவில்லை.*

*இப்படி சங்கப் பரிவாரம் டெல்லி யையும் அங்கு குவித்து வைக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தையும் நோக்கி நகருகின்றது.*

MGM



# தொடரும் காங்கிரசின் துரோகம்

## இரவு நேர பாரதீய ஜனதா

**மத்திய** அரசின் பணிகளுக்குத் தேவை யானவர்களைத் தேர்ந்தெடுக்கும் ஆணையம் UPSC : Union Public Service Commission மத்திய அரசின் பணிகளுக்கு ஆட்களை நியமிக்கும் அரும் பணிகளைச் செய்து கொண்டிருக் கின்றது.

இந்த ஆணையம் தேர்வுகளை நடத்தித் தான், பணி நியமனங்களைச் செய்கின்றது. அவ்வாறு நடத்தும் தேர்வுகளில் அரபி மொழியிலும் பார்சி மொழியிலும் கூட தேர்வுகள் எழுத அனுமதிக்கப்பட்டிருந்தது.

சுதந்திர இந்தியாவில் 65 ஆண்டுகளாக இந்த இரு மொழிகளிலும் இந்தத் தேர்வு எழுத அனுமதிக்கப்பட்டிருந்தது.

இதனால் அரபி மொழியில் பாடம் பயிலும் மதரஸா மாணவர்களும் இந்த இரு மொழிகளிலும் தேர்வுகளை எழுதி வந்தார்கள்; பயனடைந்தார்கள்.

ஆனால், திடுதிப்பென இந்த இரு மொழிகளும் தேர்வு எழுதிட அனுமதிக்கப் பட்ட மொழிகளிலிருந்து விடுவிக்கப் பட்டுள்ளது.

அரபு மொழி இந்தியாவுக்கு மிகவும் முக்கியம். இந்தியா நல்லுறவு கொண் டிருக்கும் நாடுகளில் 23 நாடுகள் அரபு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட நாடுகள். இவற்றைத் தான் நாமும் நம்மைப் போல் உலக நாடுகளும் எண்ணெய் வளத் தையும் நம்பி இருக்கின்றன.

இந்த அரபி மொழியை மையமாகக் கொண்டு நடத்தப்படும் மதரஸாக்கள்தாமம் நமது மேற்கு வங்க மாநிலத்தின் பட்டி தொட்டிகளுக்கெல்லாம் கல்வியைக் கொண்டு சென்றுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது.

மேற்கு வங்க மதரஸாக்கள் என்ற இஸ்லாமியப் பாடசாலைகள் அப்படியே அங்குள்ள மாநில கல்வித் திட்டத்தையும் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றது. அதனால் கிராமப் புறங்களில் கல்வி கிடைக்கச் செய்யும் பொறுப்பை இந்த மதரஸாக்களிடம் விட்டு விட்டது மாநில அரசு..செலவினங்களை அரசு ஏற்றுக் கொள்கின்றது.

மத்திய அரசின் பணிகளுக்கு, விண் ணப்பிக்கும் இந்த மாணவர்கள் பலர் அரபியிலும் தேர்வுகளை எழுதுகின்றார்கள்.

இத்தனையும் மத்திய அரசுக்குத் தெரியும். இருந்தும் மத்திய பணி நியமன ஆணையம் அரபி மொழியை அனுமதிக்கப் பட்டுள்ள மொழிகளின் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது.

இதன் மூலம் பகல் நேர பாரதீய ஜனதா கட்சியின் நீண்ட நாள் கோரிக்கையை இரவு நேர பாரதீய ஜனதா கட்சியாகிய காங்கிரஸ் நிறைவேற்றியுள்ளது.

**பார்சி மொழி**

(ஏழுநூறு) ஆண்டுகாலம் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருந்தது. இந்தியாவின் தொன்மைக்கால வரலாறு எல்லாம் இந்த மொழியில்தான் இருக்கின்றது.

இந்த மொழி ஒரு காலத்தில் முஸ்லிம் களின் மொழி எனக் கருதப்பட்டது. ஆங்கி லேயர்களை இந்த நாட்டை விட்டு விரட்டிட முஸ்லிம்கள் ‘ஜிஹாத்’ என்ற இறைவழிப் போரை நடத்தினார்கள்.

இதில் ஆங்கிலப் படைகள் - ஆங்கிலேயர்கள், முஸ்லிம்கள் அவர்களுக்கெதிராகச் செய்திருந்த போர் ஏற்பாடுகளைக் கண்காணித்திட முயற்சிகளை மேற்கொண்டார்கள். முடியவில்லை. காரணம் தகவல்கள் அனைத்தும் பார்சி மொழியிலும் அரபி மொழியிலும்தான் இருந்தன. ஆகவே, அவர்கள் அரபி மொழியையும் பாரசீக மொழியையும் கற்றிட வேண்டியதிருந்தது.



பாரசீக மொழி ஆட்சி மொழியாகவும், நீதிமன்ற வழக்கு மொழியாகவுமிருந்தது. நீதிமன்றங்களில் ஆங்கிலேயர்கள் நீதிபதிகளாக அமர்ந்த போது அவர்கள் பார்சி மொழியை மொழிபெயர்த்து ஆங்கிலத்தில் தரும் மொழிபெயர்ப்பாளர்களை அமர்த்திக் கொண்டார்கள். அதே போல் அரபி மொழியிலிருந்து மொழியாக்கம் செய்பவர்களாகவும் அமர்த்திக் கொண்டார்கள்.

இதனால் பார்சி மொழி அரபி மொழி ஆகியவற்றை அறிந்தவர்கள் நிறைய சம்பாதித்தனர்.

இந்திய விடுதலைப் போரின் முதற்கட்ட மொழிகளாகவும் அந்த விடுதலைப் போரில் ஆங்கிலேயர்களை அலற அடித்துக் கொண்டிருந்த முஸ்லிம்களின் மொழிகளாகவும் அதிக வருவாயைத் தந்து கொண்டிருந்த மொழிகளாகவும் இவை இருந்ததால், ஆங்கிலேயர்கள், இந்த மொழிகளை வழக்கிலிருந்து மாற்றிட எல்லா முயற்சிகளையும் செய்திருந்தார்கள்.

வில்லியம் ஹன்டர் என்ற ஆங்கிலேய வைசிராய் மதரஸாக்களை மூடி இந்த மொழிகள் அடுத்தடுத்த தலைமுறையினருக்குச் செல்லாமல் பார்த்துக் கொண்டான்.

இறுதியில் இந்த மொழிகளை வழக்கிலிருந்தும் வெளியேற்றியதாக தான் ஆங்கில நாட்டு மகாராணிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடுகின்றார். அதையும் நக்கலாகவே குறிப்பிடுகின்றார் இப்படி: “ஒரு காலத்தில் முஸ்லிம்களுக்கு மிகையான வருவாயைத் தந்து கொண்டிருந்த மொழிகள் இன்று அவர்களுக்கு ஒரு துண்டு ரொட்டியைக் கூட பெற்றுத் தந்தபோது அவர்கள் இனி வாழ்ந்திட வேண்டும் என்றால் அவர்கள் நம் மொழியான ஆங்கில மொழியைக் கற்றாக வேண்டும்.” (William Henten : Indian Musalman)

அன்று ஆங்கிலேயர்களை மொழியால் மிரட்டிய பார்சி, அரபி மொழிகளை சுதந்திர இந்தியாவின் சிற்பிகள் அங்கீகரித்தார்கள். அரசுப் பணிகளில் சேர்ந்திட எழுதும் போட்டித் தேர்வுகளை எழுதிட அனுமதிக் கப்பட்ட மொழியாக ஆக்கினார்கள்.

முஸ்லிம்களின் முதுகில் குத்தியே பழக்கப்பட்டுப் போன இரவு நேர பாரதீய ஜனதா கட்சியான காங்கிரஸ் அன்று ஆங்கிலேயர்கள் செய்ததில் மீதியைச் செய்திருக்கின்றது.

அதே போல் இஸ்லாமிய இலக்கியங்கள் சிந்தனைக் களஞ்சியங்கள் இவையெல்லாம் குவிந்து கிடக்கும் உருது மொழியையும் வேகமாக ஓரங்கட்டி விட்டு, ஹிந்தியைத் திணித்து வருகின்றார்கள்.

MGM

# திருக்குர்ஆன் பாடம்

## மௌலவி இல்யாஸ் ரியாஜி



பாடம் - 16

وَاِذْ اَخَذْنَا مِيْثَاقَكُمْ لَا تَسْفِكُوْنَ دِمَآءَكُمْ وَلَا تُخْرِجُوْنَ اَنْفُسَكُمْ مِّنْ دِيَارِكُمْ ثُمَّ
اَقْرَرْتُمْ وَاَنْتُمْ تَشْهَدُوْنَ ﴿٨٤﴾ ثُمَّ اَنْتُمْ هٰٓؤُلَآءِ تَقْتُلُوْنَ اَنْفُسَكُمْ وَتُخْرِجُوْنَ فَرِيْقًا مِّنْكُمْ
مِّنْ دِيَارِهِمْ تَظٰهَرُوْنَ عَلَيْهِمْ بِالْاِثْمِ وَالْعُدْوَانِ ؕ وَاِنْ يَّاْتُوْكُمْ اُسٰرٰى تُفٰدُوْهُمْ وَهُوَ
مُحَرَّمٌ عَلَيْكُمْ اِخْرَاجُهُمْ ؕ اَفَتُؤْمِنُوْنَ بِبَعْضِ الْكِتٰبِ وَتَكْفُرُوْنَ بِبَعْضٍ ۚ فَمَا جَزَآءُ مَنْ
يَّفْعَلُ ذٰلِكَ مِنْكُمْ اِلَّا خِزْىٌ فِى الْحَيٰوةِ الدُّنْيَا ۚ وَيَوْمَ الْقِيٰمَةِ يُرَدُّوْنَ اِلٰٓى اَشَدِّ الْعَذَابِ ؕ
وَمَا اللّٰهُ بِغَافِلٍ عَمَّا تَعْمَلُوْنَ ﴿٨٥﴾ اُولٰٓئِكَ الَّذِيْنَ اشْتَرَوُا الْحَيٰوةَ الدُّنْيَا بِالْاٰخِرَةِ فَلَا
يُخَفَّفُ عَنْهُمُ الْعَذَابُ وَلَا هُمْ يُنْصَرُوْنَ ﴿٨٦﴾

*அல்பகரா : 84-86*

*உங்கள் ரத்தங்களைச் சிந்தாதீர்கள். உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை நீங்களே வெளியேற்றாதீர்கள் என்று நாம் உங்களிடம் உறுதிமொழி வாங்கியதை நினைத்துப் பாருங்கள். பின்னர் (அதை) நீங்கள் ஒப்புக் கொண்டீர்கள். நீங்களே (அதற்கு) சாட்சியாகவும் இருந்தீர்கள்.*

*பின்னர் நீங்களே உங்களைக் கொன்றீர்கள். உங்களில் ஒரு பிரிவினரை அவர்களின் இல்லங்களிலிருந்து வெளியேற்றுகிறீர்கள். அவர்கள் மீது அக்கிரமம் நடக்கவும் பகைமை கொள்ளவும் (அவர்களின் எதிரிகளுக்கு) உதவி செய்கின்றீர்கள். அவர்கள் உங்களிடம் (போர்) கைதிகளாக வந்தால் அவர்களுக் காக ஈட்டுத் தொகை கொடு(த்து விடுவி)க்கிறீர்கள். அவர்களை (அவர்களின் இல்லங்களிலிருந்து) வெளியேற்றுவது உங்களுக்கு விலக்கப்பட்டிருந்தது. இவ்வாறு வேதத்தின் ஒரு பகுதியை நம்பி மற்றொரு பகுதியை மறுக்கிறீர்களா? உங்களில் இப்படிச் செய்பவருக்கு இவ்வுலகில் இழிவைத் தவிர வேறெந்தப் பிரதிபலனும் கிடைக்காது. மறுமை நாளில் மிகக் கடுமையான தண்டனையின் பக்கம் திருப்பப்படுவார்கள். நீங்கள் செய்பவற்றை அல்லாஹ்வே கவனிக்காமலில்லை.*

*இவர்கள் மறுமைக்குப் பகரமாக இம்மை வாழ்க்கையை வாங்கிக் கொண்டவர்கள். இவர்களுக்கு வேதனை குறைக்கப்படாது. இவர்கள் உதவி செய்யப்படவும் மாட்டார்கள்.*

**இதற்கு** முந்தைய வசனத்தில் இஸ்ரவேல் சமுதாயத்து மக்களிடம் மார்க்கக் கடமைகள் சமூகக் கடமைகள் சிலவற்றைக் குறிப்பிட்டு இவற்றை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று அல்லாஹ் வாக்குறுதி பெற்றான் என்றும் வெகு சொற்பமான நபர்களே தவிர அனைவரும் அவற்றைப் புறக்கணித்து விட்டனர் என்றும் கூறப்பட்டிருந்தது.

இந்த மூன்று வசனங்களில் அவர்கள் தம்முடைய சமூகத்துக்குக் கூட நியாயம் செய்யவில்லை என்பதையும் அவர்களுக்கான தண்டனையும் கூறப்படுகின்றது.

*அறிஞர் ஷஹீது ஸய்யித் குதுப் (ரஹ்) கூறுகின்றார்: (மதீனாவின் பூர்வீகக் குடிமக்களான) அவ்ஸ், கஸ்ரஜ்ஆகிய இரு குலத்தவர்களையும் இஸ்லாம் வந்தடைவதற்கு சற்று முந்தைய காலத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றை முன்வைத்து யூதர்களிடம் நேருக்கு நேராக உரையாடுகின்றன இந்த வசனங்கள்.*

*(முந்தைய வசனங்கள் தவ்ராத் வேதம் வழங்கப்பட்ட காலத்தையொட்டி நடந்த நிகழ்வுகளை நினைவூட்டின.) இந்த வசனங்கள் (ஹிஜ்ரத்துக்கு) கொஞ்சம் முந்தைய காலத்தில் அண்மையில் நடந்ததை முன்வைத்து உரையாடுகின்றது.*

*மதீனாவில் வாழ்ந்த அவ்ஸ், கஸ்ரஜ் ஆகிய இரு குலத்தினரும் இணை வைக்கக் கூடியவர்கள். அரபுக் குலத்தவர்களில் வேறெந்தக் குலத்தினர் மத்தியிலும் இல்லாத அளவுக்கு இவ்விரு குலத்தினரிடையே பகை இருந்தது.*

*மதீனாவில் மூன்று வகையான யூதக் குழுக்கள் வாழ்ந்து வந்தனர். யூதர்களுக்கும் இணை வைப்பவர்களுக்குமிடையே உடன்படிக்கைகளும் இருந்தன.*

*பனூகைனுகா மற்றும் பனூநளீர் ஆகிய இரு யூதக் குழுக்களும் கஜ்ரஸ் குலத்தவர்களின் நல்லுறவு ஒப்பந்தக்காரர்கள். பனூகுரைழா என்ற யூதக் குழு அவ்ஸ் குலத்தவர்களின் நல்லுறவு ஒப்பந்தக் காரர்கள்.*

*இவர்களுக்கு மத்தியில் போர் மூண்டால் ஒவ்வொரு அணியும் தத்தமது நல்லுறவு ஒப்பந்தக் காரர்களுக்கு சார்பாக போர்க் களத்தில் இறங்கிவிடுவார்கள். இரு அணிகளிலும் யூதர்கள் இருப்பார்கள். ஒவ்வொரு அணியிலுள்ள யூதர்களும் தமது எதிரணியிலுள்ள யூதர்களைக் கொல்வார்கள். யூதர்கள் தங்களுக்கிடையே சண்டையிட்டு ஒருவரையொருவர் மாய்த்துக் கொள்ளக் கூடாது என்று அல்லாஹ் அவர்களிடம் வாக்குறுதி வாங்கியிருந்தான்.*

*போரில் தோற்றுப் போன அணியிலுள்ள யூதர்களின் வாழ்விடங்களுக்குள் புகுந்து அங்குள்ளவர்களை சிறைப் பிடித்தனர். சொத்துக்களைச் சூறையாடினர். அங்கு வாழ்ந்து கொண்டிருந்தோரை அகற்றி அப்புறப்படுத்தினர் வெற்றி பெற்ற யூதர்கள்.*

*இதுவும் கூடாது என்று அல்லாஹ் அவர்களிடம் வாங்கிய வாக்குறுதியில் கூறப்பட்டிருந்தது.*

*பின்னர் போர் அடங்கி சகஜ நிலை திரும்பிய பிறகு இரு தரப்பிலும் கைதிகளாகப் பிடிக்கப்பட்ட யூதர்களை விடுதலை செய்திட ஈட்டுத் தொகையினைப் பரிமாறிக் கொண்டு விடுவித்தனர்.*

*'இஸ்ரவேல் சமுதாயத்தைச் சார்ந்த யாரேனும் ஒருவன் அடிமையாக இருக்கக் கண்டால் அவனை (விலை கொடுத்து) வாங்கி விடுதலை செய்திட வேண்டும்' என்று தவ்ராத் வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது. அதைச் செயல்படுத்த வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு செய்கின்றோம் என்கின்றனர்.*

*'யூதர்கள் ஒருவரையொருவர் கொல்லக் கூடாது. சிறைப்பிடிக்கக் கூடாது' என்று கூறப்பட்டிருக்கும் கட்டளையைப் புறக் கணித்து விட்டு, 'யூத அடிமைகளை வாங்கி விடுதலை செய்வது யூதர்கள் மீது கடமை' என்கிற கட்டளையை மட்டும் செயல் படுத்தும் இந்த முரண்பாட்டைத்தான் இங்கே சுட்டிக் காட்டுகிறது திருக்குர்ஆன்.*

*'இவ்வாறு செய்வது வேதத்தின் ஒரு பகுதியை நம்பி, ஏற்றுச் செயல்படுத்தி, மற்றொரு பகுதியைப் புறக்கணிக்கிறீர்களா?' என்றொரு உறுதியான எதிர்க் கேள்வியையும் முன்வைக்கிறது.*

*'அல்லாஹ் உங்களைக் கண்டு கொள்ளாதவனுமல்லன்; விட்டு விடக் கூடியவனுமல்லன்' என்றொரு நுண்ணிய எச்சரிக்கையோடு வாக்குறுதியை மீறியதற்கு தண்டனையாக இவ்வுலகில் இழிவும் மறுமையில் கடும் தண்டனையும் உண்டு என்றும் எச்சரிக்கிறது திருக்குர்ஆன். (நூல்: ஃபீழிலாலில் குர்ஆன்)*

வசனம் 84-ல் உங்கள் ரத்தங்களைச் சிந்தாதீர்கள். உங்களின் வாழ்விடங்களில்

இருந்து உங்களை நீங்கள் வெளியேற்றா தீர்கள் என்று அல்லாஹ் யூதர்களிடம் வாக்குறுதி பெற்றான் என்று கூறப்பட்டுள்ளது.

ஒருவன் தன்னுடைய இனத்தவனைக் கொல்வது தன்னையே கொல்வதாகும். தன் இனத்தவனை வாழ்விடத்தை விட்டு வெளியேற்றுவது தன்னையே வெளியேற்றுவதாகும் என்ற பொருளில் அவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அன்பையும் நேசத்தையும் இரக்கத்தையும் தமக்கிடையே பரிமாறிக் கொள்வதில் முஃமின்கள் அனைவரும் ஒரே உடலைப் போன்றவர்கள். உடலின் ஒரு உறுப்பில் வலி ஏற்பட்டால் தூக்கமின்மையாலும் காய்ச்சல் வருவதாலும் உடல் முழுவதும் வேதனையடைகிறது." (நூல்: புஹாரி, முஸ்லிம், பைஹகீ)

வசனம் 86-ன் விளக்கம்

ஷஹீத் ஸய்யித் குதுப் (ரஹ்) கூறுகின்றார்:

(முந்தைய இரு வசனங்களிலும் யூதர்களிடம் நேரடியாக உரையாடிய குர்ஆன்) பின்னர் முஸ்லிம்களையும் மொத்த மனித சமுதாயத்தையும் நோக்கித் திரும்பி யூதர்களின் யதார்த்தமான குணத்தையும் செயல்களையும் எடுத்துரைக்கிறது.

'விரல் விட்டு எண்ணக்கூடிய (அளவுக்கு) சில நாட்கள்தான் நரகம் எங்களைத் தீண்டும்' (2:80) என்று கூறிவிடும் யூதர்களின் பொய் வாதத்தைப் பொய்யாக்கி அவர்களின் தண்டனை குறைக்கப்படாது. அவர்கள் உதவி செய்யப்படவும் மாட்டார்கள்' என்று கூறுகிறது இவ்வசனம்.

மறுமையை விலையாகக் கொடுத்து இவ்வுலக வாழ்வை வாங்கிக் கொண்டனர். இன்று யூதர்களை இங்கே குர்ஆன் விமர்சிக்கிறது. இந்த வசனத்தில் இதைச் சொல்வதற்குக் காரணம் இதுதான்.

யூதர்கள் அல்லாஹ்விடமும் உடன்படிக்கை செய்திருந்தனர். (மதீனாவிலுள்ள அவ்ஸ், கஸ்ரஜ்என்ற) இணை வைப்பவர்களிடமும் உடன்படிக்கை செய்திருந்தனர். தங்களுடைய வேதத்துக்கும் மார்க்கத்துக்கும் மாறாக நடந்தால்தான் இணை வைப்பவர்களிடம் செய்திருந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியும் என்ற நிலை ஏற்பட்டால் அல்லாஹ்விடம் செய்திருந்த ஒப்பந்தத்துக்கு மாறு செய்துவிட்டு இணை வைப்பவர்களுடன் செய்திருந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் உறுதியாக இருந்தார்கள்.

(இதன் மூலம் அல்லாஹ்வின் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதால் கிடைக்கும் மறுமையின் நற்கூலியைத் துறந்துவிட்டு இணை வைப்பவர்களுடன் செய்திருந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதால் கிடைக்கும் உலகத்தின் பலாபலன்களைப் பெற்றுக் கொண்டனர்.)

தம் முடைய மார்க்கத்தின்படி வாழ்வதால் கிடைக்கும் நலனைத் தவிர வேறு எந்த நலனும் முஸ்லிம் களுக்கு (தேவை) இல்லை.
இறைவனோடு செய்து கொண்ட உடன் படிக்கையை நிறைவேற்றுவதால் கிடைக்கும் பாதுகாப்பைத் தவிர வேறு எந்தப் பாதுகாப்பும் முஸ்லிம் களுக்கு (தேவை) இல்லை.

மேலும் (மதீனாவாழ்) யூதர்கள் இரு அணிகளாக இருந்தனர். இரு அணிகளிலும் இருந்தனர். (அவ்ஸ் ஒரு அணி; கஸ்ரஜ் மற்றொரு அணி. இரு அணிகளிலும் யூதர்களின் அணிகள் இருந்தன.) இது யூதர்கள் வழிவழியாகக் கடைப்பிடித்து வரும் தந்திரம், திட்டம், வலிமை வாய்ந்த எல்லாப் படைகளுடனும் போய் ஒட்டிக் கொள்வார்கள். சுயநலம் கருதி தற்காப்பு மன நிலையில் இவ்வாறு செய்கின்றனர்.

(போர் என்பது ஒரு கோல், கம்பு) அந்தக் கம்பின் இரு நுனிகளில் ஏதேனுமொன்றை இறுகப் பற்றிக் கொள்வதற்குப் பதிலாக நடுப் பகுதியைப் பிடித்துக் கொள்வார்கள். இது அவர்களின் தந்திரம். போரின் முடிவில் எந்த அணி தோற்றாலும் எந்த அணி வென்றாலும் போர்ச் செல்வங்களில் ஒரு பகுதி யூதர்களில் சிலருக்குக் கிடைத்து விடுமல்லவா? யார் வென்றாலும் யார் தோற்றாலும் யூதர்களின் நலனுக்கு பெரிய பாதிப்பு ஏற்பட்டு விடப்

போவதில்லையல்லவா? எனவேதான் இப்படியொரு தந்திரத்தை வாழையடி வாழையாகப் பின்பற்றி வருகின்றனர்.

ஆனால், இது இறைவனின் நாட்டத்தின் மீது நம்பிக்கையற்றவனின் செயல். இறைவனின் உடன்படிக்கைகளை நிறைவேற்றாதவனின் திட்டம். இவர்கள் அறிவையும் அது தரும் முடிவையும் மட்டுமே சார்ந்து நிற்பவர்கள் பூமியில் கிடைக்கும் பலா பலன்களையே நம்புபவர்கள் படைப்புகளால் கிடைத்திடும் உதவிகளை நம்புபவர்கள் படைத்தவனின் உதவிகளை நம்பாதவர்கள்.

ஈமான் என்ற இறைநம்பிக்கை, இறைவனுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களுக்கு எதிராக எது வந்தாலும் அதை ஏறிட்டுப் பார்க்கக் கூடாது என்றும் இறை ஒப்பந்தங்களுக்கு எதிரான ஒப்பந்தங்களுக்குள் நுழைந்துவிடக் கூடாது என்றும் நம்பிக்கையாளர்களை முஃமின்களை தடுத்துக் கொண்டேயிருக்கிறது. தம்முடைய மார்க்கத்தின் கடமைகளுக்கு எதிரான எந்த உடன்படிக்கையையும் முஸ்லிம்கள் ஏற்கக் கூடாது என்கிறது. 'சமுதாய நலன், சமுதாயப் பாதுகாப்பு' என எந்தப் பெயரைச் சூட்டிக் கொண்டும் இறைவனின் ஒப்பந்தத்தைப் புறக்கணிக்கக் கூடாது என்கிறது.

தம்முடைய மார்க்கத்தின்படி வாழ்வதால் கிடைக்கும் நலனைத் தவிர வேறு எந்த நலனும் முஸ்லிம்களுக்கு (தேவை) இல்லை. இறைவனோடு செய்து கொண்ட உடன்படிக்கையை நிறைவேற்றுவதால கிடைக்கும் பாதுகாப்பைத் தவிர வேறு எந்தப் பாதுகாப்பும் முஸ்லிம்களுக்கு (தேவை) இல்லை.(நூல்: ஃபீ ழிலாலில் குர்ஆன்)

**யவ்மு புஆஸ்**

அவ்ஸ், கஸ்ரஜ்ஆகிய இரு குழுக்களுக்குமிடையே பல தடவை யுத்தங்கள் நடைபெற்றுள்ளன. கடைசியாக நடந்த யுத்தம் 'புஆஸ்' என்ற இடத்தில் நடந்த பிரபலமான யுத்தமாகும். ஹிஜ்ரத்துக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற இந்த யுத்தம் 'யவ்மு புஆஸ்' (புஆஸ் யுத்தம் நடந்த நாள்) என்ற பெயரில் வரலாற்று நூல்களில் பேசப்படுவதுண்டு.

யுத்தத்துக்கான ஆயுத சேகரிப்பில் நாற்பது நாட்களாக இரு தரப்பும் ஈடுபட்டனர். பிறகு மதீனாவுக்கு வெளியே 'புஆஸ்' என்ற இடத்தில் மோதிக் கொண்டனர். கடுமையாகச் சண்டையிட்டனர். இரு தரப்பும் நிலைகுலையாமல் போரிட்டது.

ஆரம்பத்தில் அவ்ஸ் அணி தோல்வியடைந்தது. பின்னர் போரின் சுழற்சி கஸ்ரஜ்அணிக்கு எதிராகத் திரும்பியது. அவ்ஸ் வென்றது. கஸ்ரஜ்தோற்றது. வெற்றி பெற்ற அணி தோல்வியடைந்தவர்களின் வாழ்விடங்களுக்குப் புகுந்து தீயிட்டுக் கொளுத்தினர்.

இந்தப் போரைப் பற்றி கவிதைகள் பல பாடிப் பதிவு செய்துள்ளனர். (நூல்: தாரிக் இப்னுல் அசீர்)

இந்த இரு அணிகளிலும் யூதர்களின் இரு வேறு குழுக்கள் இருந்தன. மதீனாவின் பூர்வீகக் குடிமக்களான அவ்ஸ், கஸ்ரஜ் இடையே போர் மூளுவதற்குக் காரணமே யூதர்கள்தான் என்றும் வரலாறு கூறுகின்றது.

போரில் தங்களுக்கு ஏற்பட்ட (உயிரிழப்பு, பொருட்சேதம், கைது) பாதிப்புகளை யூதர்கள் எதிரணி யூதர்களுடன் பரஸ்பரமம் ஈட்டுத் தொகை பரிமாறி சரி செய்து கொண்டனர். இதைத்தான் வசனம் 85 கூறுகிறது.

அவ்ஸ், கஸ்ரஜ்ஆகிய இரு அணிகளும் இழப்புக்களோடும் சிரமங்களோடும் வாழ்ந்து கொண்டிருந்தனர். நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்த பிறகு அவ்ஸ், கஸ்ரஜ் குலத்தினர் இஸ்லாத்தைத் தழுவினர். இஸ்லாம் ஏற்படுத்தித் தந்த சகோதரத்துவத்தின் நிழலில் இளைப்பாறினர்.

இது பற்றி அல்லாஹ் இப்படிக் கூறினான்: நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை உறுதியாகப் பிடித்துக் கொள்ளுங்கள். பிரிந்து விடாதீர்கள். உங்களுக்கு அல்லாஹ் புரிந்துள்ள அருளை நினைத்துப் பாருங்கள். நீங்கள் பகைவர்களாய் இருந்தீர்கள். உங்கள் இதயங்களை (அல்லாஹ்) அன்பினால் பிணைத்தான். அவன் அருளால் நீங்கள் சகோதரர்களானீர்கள். நீங்கள் நரகப் படுகுழியின் விளிம்பில் இருந்தீர்கள். அவனே உங்களை அதிலிருந்து காப்பாற்றினான். நீங்கள் நேர்வழி பெறுவதற்காக அல்லாஹ் இவ்வாறு தன் வசனங்களை உங்களுக்குத் தெளிவாக்குகின்றான்.(3:103)

**.......தொடரும் இன்ஷா அல்லாஹ்**



# அன்பை விஞ்சி சமூக நீதியே முஹம்மத் (ஸல்) அவர்களின் முக்கிய தூது

யுவான்னி ரிட்லி

**சில** மதத்தைச் சார்ந்தவர்கள் தங்க ளுடைய மதத்தில் முக்கியமான இடத்தைப் பிடிப்பது அன்புதான் எனச் சொல்கின் றார்கள்.

ஆனால், முஹம்மத் (ஸல்) அவர்கள் வழி நமக்கு வந்த இஸ்லாம் அன்பை விட சமூகநீதிக்கே முக்கியத்துவம் தந்தது.

அது கற்பித்த சமூக நீதியும், சமத் துவமும், சகோதரத்துவமும் தனி மனிதர் களின் நம்பிக்கை, அவர்களின் தோலின் நிறம், அவர்கள் பிறந்த மண் அல்லது தேசியம் ஆகிய அனைத்து எல்லைகளையும் கடந்தது.

இஸ்லாம் நடைமுறைப்படுத்திக் காட்டிக் கொண்டிருக்கும் சமூகநீதிதான் இன்று பலரை இஸ்லாத்தின் பக்கம் கொண்டு வந்து கொண்டிருக்கின்றது. அதனால் இஸ்லாம் இன்று ஐரோப்பா விலேயே மிகவும் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் மார்க்கம் என்றாகி வருகின்றது.

யார் வேண்டுமானாலும் தங்களுடைய அண்டை வீட்டாரிடம் அன்பு காட்டலாம். அதே அன்பை தங்களுடைய எதிரிகளிடம் காட்டுவது என்பது எத்தனை கடினமானது.

இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை அடியொற்றி மேலை நாட்டி லுள்ள பலர் தங்களுக்கு சமூகநீதியை வழங் கிடும் ஒரு மார்க்கத்தைப் பின்பற்றிக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் இந்த வாழ்க்கைநெறி இந்த உலகில் இருக்கும் கொள்கைகளையெல்லாம் விடச் சிறந்தது. இதை இப்போது அவர்கள் நன்றாகப் புரிந்து கொண்டார்கள்.

நமது எதிரிகள், முஸ்லிம்கள் பழமை யான கரடுமுரடான ஒரு மதத்தைப் பின்பற்று கின்றார்கள். அந்த மதம் 1400 ஆண்டுகளுக்கு முன்னால் கல்வியறிவற்ற ஓர் அரபியால் கொண்டுவரப்பட்டது என இகழுகின் றார்கள்.

ஆனால், நமது எதிரிகள் கண்ணாடியில் தங்கள் முகத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டும். மனித இனத்தின் பண்பாட் டிற்கும், வளர்ச்சிக்கும் அவர்கள் என்ன செய்திருக்கின்றார்கள் என்பதை சீர்தூக்கிப் பார்த்திட வேண்டும்.

மகாத்மா காந்தி ஒரு முறை சொன்னார் என்பதை நினைவுக்குக் கொண்டு வருவது மிகவும் சிறந்தது. காந்தியிடம் இப்படி ஒரு கேள்வி: மேலை நாட்டு கலாச்சாரங்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

அதற்குப் பதிலாக அவர் ஓர் வரட்டுச் சிரிப்பையே தந்தார்.

ஆனால், அவர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் பற்றி சொன்னவை நமது கண்களைத் திறக்கின்ற அளவில் இருந்தது. இதை அவர் தான் நடத்திக் கொண்டிருந்த 'யங் இந்தியா' பத்திரிகையில் 1924ஆம் அண்டு தெரிவித்திருந்தார்.

நான் முன் எப்போதையும் விட அதிக மாக ஓர் விசயத்தில் தெளிவடைந்திருக் கின்றேன். அது, அன்றைய வாழ்க்கைப் போக்கில் இஸ்லாத்திற்கு ஓர் இடத்தை வென்று தந்தது வாள் அல்ல. இறைத்தூதரின் எளிமை, உண்மையான மனிதத் தன்மைகள், எல்லா நிலைகளிலேயும் ஒப்பந்தங்களையும் வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவது, நண்பர்களிடமும் தன்னைப் பின்பற்றுபவர் களிடமும் உண்மையான ஈடுபாட்டோடும்

அக்கறையுடனும் நடந்து கொள்வது, அஞ்சாமை, தூய்மை உள்ளத்துடன் எல்லா நிலையிலும் இறைவன் மீது கொண்ட அழுத்தமான நம்பிக்கை, அத்தோடு தனது இலட்சியத்தில் காட்டிய ஆர்வம், அக்கறை, ஈடுபாடு இவைதான், வாளல்ல.

இந்த உலகில் இருப்பதையெல்லாம் அவர்கள் முன்னால் கொண்டுவந்தது. இவற்றால்தான் எல்லா எதிர்ப்புகளையும் அவர்கள் எதிர்கொண்டார்கள். வென்றார்கள். அந்தப் பெரும் ஆத்மாவின் வாழ்க்கை வரலாற்றில் இரண்டாவது பாகத்தைப் படித்து முடித்த பின்பு - என்னை மன்னிக்க வேண்டும் - அந்தப் பெரு வாழ்க்கை பற்றி நான் அறிந்திட எதுவுமில்லை என்பதைத் தெரிந்து கொண்டேன்.

இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் நமக்கோர் வாழ்க்கை நெறியைக் கொண்டு வந்தார்கள். நான் மிகவும் அழுத்தமாக வாதிப்பேன். அதற்கு இணையானதோர் வாழ்க்கை நெறி நம் முன்னால் எப்போதும் வந்ததில்லை. நிச்சயமாக இல்லை.

காந்தி அவர்கள், மேலை நாடுகளின் கலாச்சாரத்தை மனதில் வைத்துக் கொண்டு தான் பெருமானார் (ஸல்) அவர்களின் பெரு வாழ்வைப் போற்றி எழுதினார்கள் என்பதே உண்மை என நான் கருதுகின்றேன்.

சற்றும் நிலைக்காத இந்த உலகில், அமெரிக்க அதிபர் புஷ்ஷின் நிர்வாகம் பல புதிய கடினமான சொல்வழக்குகளை நமக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. அந்தச் சொற்கள் ஆட்கடத்தல், விமான கடத்தல், ஆட்கடத்தி சித்ரவதை செய்தல், விசாரணை இன்றி காவலில் வைப்பது.

மனித உரிமைகள் அதல பாதாளத்தில் வீழ்ந்து விட்டது. நீதியின் அடிப்படைகள் எல்லோருக்கும் இல்லை என்பதை கிறிஸ்தவ உலகத்தின் பிரதிநிதிகளான புஷ் தீவிர வாதிகள் உரக்க முழங்கிவருகின்றார்கள். கொலைகார புஷ் கும்பலின் பெண்ணுரிமைக் கொள்கை மிகவும் கேவலமானது. இதில் மிகப் பெரிய கொடுமை என்ன வெனில், புஷ் கும்பல் ஆப்கானிஸ்தானைத் தாக்கிடும் போது, அங்குள்ள பெண் களையெல்லாம் விடுவிக்கப் போகின்றேன் எனக் கூப்பாடு போட்டதுதான். அங்கே அவர்கள் பெண் களைப் படுத்திய கொடுமைகள் சொல்லி மாளாது.

இந்த புஷ்ஷும் அவரது கும்பலும் நடத்திய கொலைக்களங்களில் நான் கால்நடையாகவே நடந்து சென்றிருக் கின்றேன். இவர்கள் பிணமலைகளை எழுப்பிய ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் பல நாள் தங்கியிருந்து பார்த்திருக்கின்றேன். அங்கே பெண்களின் வாழ்க்கைகளை சின்னா பின்னப்படுத்தி சிதைத்துப் போட்டு விட்டார்கள்.

**இறைவனின் தூதர் அவர்கள் தாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் செய்த முதல் பணி குழந்தைகளை உயிரோடு மண்ணில் புதைத்திடும் மாபாதாகத்தை மண்ணில் நிரந்தரமாகப் புதைத்ததுதான். அடுத்து அவர்கள் செய்த அரும்பணி, கட்டாயத் திருமணங்களைத் தடுத்து, திருமண உறவுமுறைகளை நெறிப்படுத்தியதுதான்.**

கடந்த முறை நான் ஆப்கானிஸ்தானில் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைக்குச் சென்றேன். அந்த சிறைச்சாலையில் இளம் பெண்கள் நிரம்பி வழிந்தார்கள். அவர்கள் 12-இலிருந்து 16 வயதுக்கு உட்பட்டவர்கள். அவர்கள் அப்படியொன்றும் பெரிய குற்றங்களைச் செய்துவிடவில்லை. அவர்கள் தங்களை விட வயதில் மூன்று மடங்கு மூத்தவர்களை மணமுடித்துக் கொள்ள மாட்டேன் எனக் கூறியதே குற்றம். அமெரிக்க புஷ் கும்பலின் எடுபிடிகளின் ஆட்சியில் இளம் பெண்கள் படும் அல்லல் களை இஃது அம்பலப்படுத்தும். இவர்களின் குண்டு வீச்சுகளில் மடியும் மழலைகள் மட்டிலடங்க மாட்டா!

ஆனால், இறைவனின் தூதர் அவர்கள் தாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் செய்த முதல் பணி குழந்தைகளை உயிரோடு மண்ணில் புதைத்திடும் மாபாதாகத்தை மண்ணில் நிரந்தரமாகப் புதைத்ததுதான். அடுத்து அவர்கள் செய்த அரும்பணி,

கட்டாயத் திருமணங்களைத் தடுத்து, திருமண உறவுமுறைகளை நெறிப்படுத்தியது தான்.

அடுத்து, ஆன்மிகத்திலும் கல்வியிலும் அவர்களும் முன்னின்றிட இயலும் எனக் காட்டியதுதான்.

திருக்குர்ஆன் வழங்கிக் கொண்டிருந்த வழிகாட்டுதல்கள் இந்தப் பெண்ணுரிமை களையெல்லாம் நிரந்தர நிதர்சனங்களாக ஆக்கிக் கொண்டிருந்தன.

அன்றைய நாள்களில் பெண்கள் பெற்ற இந்த உரிமைகளையெல்லாம் அனை வருக்கும் அதிர்ச்சியைத் தந்தது. அன்றைய பழக்க வழக்கங்களுக்கு அவர்களின் வழி முறைகளுக்கு அவை முற்றிலும் வேறு பட்டதாகவும், மாறுபட்டதாகவும் இருந்ததே காரணம்.

இதற்காக, இது போன்ற உரிமைகளுக் காக இன்றைக்கும் உலகின் பல பாகங் களிலும் பெண்கள் போராடிக் கொண்டிருக் கின்றார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்கள் பெண் களுக்குச் சொன்ன அறிவார்ந்த அற்புதமான சொற்கள் ஹிஜ்ரத்திற்குப் பின் 10ஆம் ஆண்டில் அதாவது, (632 கி.பி) அராபத் மலை மடுவில் - யுரானா பள்ளத்தாக்கில்தான் வந்தன.

இதுதான் வரலாற்றில் இறுதி ஹஜ்ஜின் பேருரை என அழைக்கப்படுகின்றது. அந்தப் பேருரையையும் எனக்குக் கிடைத்த பொக்கிஷமாக நான் கூறுவதால் நான் அந்த உரையை என்னுடைய வீட்டில் தொங்கப் போட்டிருக்கின்றேன். என் வீட்டில் வருபவர்களின் கண்களில் அது பட்டிட வேண்டும் என்பதனால். அதைப் படித்திட வாய்ப்புக் கிடைக்காதவர்களுக்கு அதில் ஒரு பகுதியை இங்கே தருகின்றேன்:

“மக்களே! எப்படி நீங்கள் இந்த மாதத் தையும், இந்த நாளையும், இந்த நகரத்தையும் புனிதமானதாகக் கருதுகின்றீர்களோ, அதே போல் ஒவ்வொரு முஸ்லிமின் உயிரையும் உடைமைகளையும் அப்படியே புனிதமான தாகக் கருதுங்கள்.

உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமா னிதங்களை, அதற்குரியவர்களிடம் ஒப்ப டைத்து விடுங்கள். யாரையும் புண்படுத் தாதீர்கள். அதனால் உங்களையும் யாரும் புண்படுத்திட மாட்டார்கள்.

நீங்கள் நிச்சயமாக உங்கள் இறை வனைச் சந்திப்பீர்கள். அவன் நிச்சயமாக செயல்களைக் கணக்கு பார்ப்பான்.

அல்லாஹ் வட்டியை உங்களுக்குத் தடை செய்திருக்கின்றான். ஆகவே, வட்டியை அடிப்படையாகக் கொண்ட அனைத்தையும் விட்டு விடுங்கள். உங்கள் முதலீடு உங்களுக்குச் சொந்தமானது. அதை வைத்துக் கொள்ளுங்கள். (வட்டியை விட்டு விடுங்கள்) நீங்கள் யாரையும் அடிமைப் படுத்தாதீர்கள். உங்களையும் அடிமைப் படுத்திட விடாதீர்கள்.

உங்கள் பெண்கள் மீது உங்களுக்குச் சில உரிமைகள் இருக்கின்றது என்பது உண்மை தான். ஆனால், அவர்களுக்கும் உங்கள் மீது உரிமை இருக்கின்றது. அல்லாஹ்வின் (இறைவனின்) அமானிதத்துடனும் அனுமதி யுடனும் நீங்கள் அவர்களை மனைவியராக்கி இருக்கின்றீர்கள்.

அவர்கள் உங்கள் உரிமைகளை நிறை வேற்றினால் நீங்கள் கனிவோடு அவர்களுக்கு உணவும் உடையும் அளிக்க வேண்டும் என்பது அவர்களின் உரிமை. உங்கள் பெண்களைக் கண்ணியமாக நடத்துங்கள். அவர்களிடம் நன்றாக நடந்து கொள்ளுங்கள். ஏனெனில், அவர்கள் உங்கள் மனைவியர். உங்களுக்கு அக்கறையுடன் உதவி செய் பவர்கள்.

நீங்கள் அங்கீகரிக்காதவர்களோடு அவர்கள் நட்பு வைத்துக் கொள்ளக் கூடாது என்பது உங்கள் உரிமை. அதே போல் அவர்கள் கற்புடையவர்களாகவே இருக்க வேண்டும் என்பதும் உங்கள் உரிமை.

ஓ மனிதர்களே! நீங்கள் நான் சொல் வதைக் கவனமாகக் கேளுங்கள். அல்லாஹ்வை வணங்குங்கள். ஐங்காலத் தொழுகையை நிறைவேற்றுங்கள். ரமழான் மாதத்தில் நோன்பிருங்கள். உங்கள் செல்வங்களி லிருந்து ஏழை வரியைச் செலுத்தி விடுங்கள்.

உங்களால் முடிந்தால் புனித ஹஜ் ஜையும் நிறைவேற்றுங்கள்.

எல்லா மனிதர்களும், ஆதம், ஹவ்வா ஆகிய ஆதி தந்தையரிலிருந்து வந்தவர்களே! இறையச்சம், நற்செயல்கள் இவற்றால் அல்லாமல் அரபு (அரபு மொழி பேசுபவன்) அரபு அல்லாதவனை விட உயர்ந்தவன் அல்ல. அரபு அல்லாதவன் அரபியை விட உயர்ந்தவன் அல்ல.

அதே போல் வெள்ளை நிறத்தவன் கறுப்பு நிறத்தவனை விட உயர்ந்தவனல்ல. கறுப்பன் வெள்ளையனை விட உயர்ந்த வனல்ல.

ஒரு முஸ்லிம் இன்னொரு முஸ்லிமின் சகோதரன் ஆவான். முஸ்லிம்கள் அனைவரும் ஒரே சகோதரத்துவத்தைச் சார்ந்த வர்கள். ஒரு முஸ்லிமிற்குச் சொந்தமானது இன்னொரு முஸ்லிமுக்கு நிச்சயம் சொந்தமாகா - அவன் சுதந்திரமாக விரும்பித் தந்தாலொழிய.

எனவே, நீங்கள் உங்களுக்கு அநீதி இழைத்துக் கொள்ளாதீர்கள்.

நினைவுகூருங்கள். நீங்கள் அல்லாஹ்வை நிச்சயமாகச் சந்திப்பீர்கள். உங்களுடைய செயல்களுக்கு நீங்கள் அல்லாஹ்விடம் பதில் சொல்லியாக வேண்டும். அதனால் எனக்குப் பின்னால் நேர்வழியிலிருந்து தவறி விடாதீர்கள்."

பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த உரையின் ஒரு பகுதியாக இறைமறையின் இறுதி வெளிப்பாடு வந்தது. அதில் இறைவன் இப்படிக் கூறினான்: தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தைப் பரிபூணமாக்கி விட்டேன். மேலும், நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன். இன்னும் உங்களுக்காக இஸ்லாம் மார்க்கத்தையே தேர்ந்தெடுத்துள்ளேன். (5:3)

முஸ்லிம்கள் தாம் பெருமானார் (ஸல்) அவர்களைப் போற்றுகின்றார்கள் என்றில்லை, பல்வேறு கிறிஸ்தவ பாதிரி



அவரைப் போல் ஒருவர் இந்த
நவீன உலகின்
உண்மையான சர்வாதிகாரி
ஆவாரேயானால் அவர்
இன்று மனிதர்கள் எதிர்
நோக்கும் பிரச்னைகளை,
மனித இனத்திற்கு
என்றென்றும் நிம்மதியையும்
அமைதி யையும்
மகிழ்ச்சியையும் தந்திடும்
வகையில் தீர்த்து வைப்பார்.

மார்களுமம் அவர்களைப் புகழ்ந்திருக் கின்றார்கள்.

ரெவரண்ட் பேஸ்வர்த் ஸ்மித் அவர்கள் 1879-இல் இப்படிக் கூறினார்கள்:

அவர் முஹம்மத் அவர்கள் அரசுக்கும் தலைவர்; ஆலயத்திற்கும் தலைவர். அவர்கள் சீசரும் போப்புமாக இருந்தார்கள். அவர்கள் போப்; ஆனால் போப்பின் படாடோபங்கள் இல்லை. அவர்கள் சீசர்; ஆனால் சீசரின் ஆடம்பரங்கள் இல்லை.

எப்போதும் ஒரு படை என்றொன்று இல்லை. ஒரு மெய்க் காப்பாளனுமில்லை. ஒரு காவல்துறையுமில்லை; நிலையான வருவாயுமில்லை. இத்தனையுமின்றி இந்த உலகில் ஓர் இறையாட்சியை ஒருவர் நடத்தினார் என்றால் அவர் முஹம்மதுதான். அவர்களுக்கு எல்லா அதிகாரமும் இருந்தது. ஆனால், அவற்றைச் செயல்படுத்தும் ஊன்றுகோல்கள் இல்லை. அதிகார தோரணைகளைப் பற்றி அவர்கள் அதிகமாகக் கவலைப்படவில்லை. அவர்கள் தனி வாழ்க்கையில் எப்படியெல்லாம் எளிமையாக இருந்தார்களோ அப்படியே பொது வாழ்விலும் இருந்தார்கள்.

என்னிடம் பலர் கேட்கிறார்கள் - ஏன் மக்கள் இஸ்லாத்தை இப்படி வெறுக் கிறார்கள்?

நான் அவர்களுக்குச் சொல்லும் பதில் 'அச்சம்.' இன்றைய உலகின் மிகப் பெரிய

சக்திகளுக்கு பட்டாளமே இல்லாத இந்த மனிதன் பெற்றிருந்த அதிசய அதிகாரத்தையும் அது ஜனரஞ்சகப்பட்டு நின்றதையும் புரிந்து கொள்ளவே இயலவில்லை. அரசியலில் எந்த அபிலாஷையும் இல்லாத மனிதன் பெற்றிருந்த ஆட்சி அதிகாரத்தையும் அதை அவர் எப்படிப் பெற்றார் என்பதையும் இந்த அதிகார மேதைகளால் புரிந்து கொள்ள இயலவில்லை.

ஜார்ஜ்புஷ் (அமெரிக்காவின் முன்னாள் அதிபர்) டோனி பிளேர் (முன்னாள் பிரிட்டன் பிரதமர்) ஆகியோர் பெருமானார் (ஸல்) அவர்களையும் இஸ்லாத்தையும் ஏன் மக்கள் அணியணியாக ஏற்றுக் கொள்கின்றார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியாது. அப்படியொரு வாய்ப்பையும் அவர்கள் பெறவில்லை.

பெருமானார் (ஸல்) அவர்களின் வழிமுறையையே இவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. இதனை ஜார்ஜ் பெர்னாட்ஷா அவர்கள் அன்றைக்கே புரிந்து கொண்டு 1936-இல் இப்படி எழுதினார்கள்:

“இந்த ஐரோப்பாவை இல்லையேல் இங்கிலாந்தை ஆளும் வாய்ப்பு அடுத்த நூறு அண்டுகளுக்குள் கிடைக்கும் என்றால் அது இஸ்லாத்திற்காகத்தானிருக்கும்.”

நான் முஹம்மதின் மார்க்கத்தை எப்போதும் அதிக மதிப்பீட்டுடனேயே என் மனதில் வைத்துக் கொண்டிருக்கிறேன். அதன் அதிசயிக்கத்தக்க ஆளுமைதான் என்னை அப்பிக் கொண்டது. மாறி வரும் உலகின் மாற்றங்களை எதிர்கொண்டு முன்னே மனித சமுதாயத்தை எடுத்துச் செல்லும் ஆற்றல் முஹம்மத் (ஸல்) அவர்களின் மார்க்கத்திற்கு மட்டுமே உண்டு. இவரது மார்க்கமே எல்லா மக்களுக்கும், எல்லாக் காலங்களுக்கும் ஏற்புடையது. எல்லா மக்களையும் தன் பால் ஈர்ப்பது, நான் அவரை முஹம்மத் (ஸல்) அவர்களைப் படித்திருக்கின்றேன். என்னுடைய கருத்தில் அவர் கிறிஸ்துவுக்கு எதிரானவரல்லர். ஓர் அதிசய மனிதர். மனித மனத்தின் மீட்பர் என்று அவரை அழைக்கலாம்.

அவரைப் போல் ஒருவர் இந்த நவீன உலகின் உண்மையான சர்வாதிகாரி ஆவாரேயானால் அவர் இன்று மனிதர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை, மனித இனத்திற்கு என்றென்றும் நிம்மதியையும் அமைதியையும் மகிழ்ச்சியையும் தந்திடும் வகையில் தீர்த்து வைப்பார்.

1925-இல் நோபல் பரிசைப் பெற்ற ஒருவரே இப்படிச் சொன்னால் அதில் யார்தான் கருத்துவேறுபட முடியும்.

இன்று பெருமானார் (ஸல்) அவர்கள் இருந்திருந்தால் இந்தப் புகழ் மொழிகளைச் செவி மடுத்தவுடன் அவர்கள் நான் ஒரு சாதாரண மனிதனே எனச் சொல்லியிருப்பார்கள். எல்லோரும் அல்லாஹ்வுக்கு அடிபணிவோம் எனப் பிரகடனப்படுத்தியிருப்பார்கள்.

**தமிழில் : மு.குலாம் முஹம்மது**


தாலிபானின் பிடியில்...

**யுவான்னி ரிட்லி**

தமிழில் : மு.குலாம் முஹம்மத்



இரண்டாம் பதிப்பு
பிப்ரவரி 2013
பக்கங்கள் : 202
விலை : ரூ. 90/-

இப்போது கிடைக்கிறது....

வெளியீடு
**வேர்கள் வெளியீட்டகம்**
52/1, மண்ணடி தெரு, 4வது தளம், மண்ணடி,
சென்னை-1. Tel: 044-45566909

# இமாம் ஹஸனுல் பன்னாவின் கடிதம்



**1935** ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கு நாடொன்றுக்கு கல்வி தேடி தனது மனைவியுடன் சென்ற ஓர் இஸ்லாமிய மாணவனுக்கு இமாம் ஹஸனல் பன்னா (ரஹ்) அவர்கள் பயனுள்ள உபதேசங்களைக் கொண்ட ஒரு கடிதமொன்றை பின்வருமாறு எழுதினார்கள்:

*(இந்தக் கடிதம் இன்றைக்கும் நம் போன்றவர்களுக்குப் பொருந்துமே என்ற நிதர்சன உண்மையின் கீழ் இக்கடிதத்தைப் படித்துப் பயன் பெறுவோம்!)*

*நல்ல எண்ணத்துடனும் உயர்ந்த நோக்கத்துடனும் பிரயாணத்தை மேற்கொள்கின்ற உங்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வ பரகாதுஹூ!*

*கண்ணியத்திற்குரிய மாணவனே! இன்னும் சற்று நேரத்தில் நீங்கள் உங்களுக்கு அறிமுகமில்லாத ஒரு சமூகத்திற்கு மத்தியிலும் உங்களுக்குப் பழக்கமில்லாத மனிதர்களுக்கு மத்தியிலும் இருப்பீர்கள். அவர்கள் உங்களிடத்தில் ஒரு முஸ்லிமுக்குரிய உதாரணத்தைப் பார்ப்பார்கள். எனவே நீங்கள் மிகச் சிறந்ததொரு உதாரணமாக திகழ்வதற்கு முயற்சி செய்யுங்கள்.*

*உங்களிடத்தில் பெறுமதிமிக்க அடைக்கலப் பொருளொன்று இருக்கிறது. அது தான்உங்களது மனைவி. அவளை நல்ல முறையில் கவனித்துக் கொள்ளுங்கள். அவளுக்குப் பாதுகாப்பான தோழனாக இருங்கள். அப்போது அவள் உங்களுக்கு மன அமைதியையும் சந்தோஷத்தையும் பெற்றுத் தருவாள்.*

*நான் உங்கள் மீது கொண்ட அன்பின் காரணமாகவும் உங்களுக்கு சந்தோஷமானதொரு வாழ்க்கை அமைய வேண்டுமென எதிர்பார்க்கும் ஒரு தூய்மையான நண்பன் என்ற வகையிலும் இன்னும் சில உபதேசங்களை எழுதுகிறேன். அவற்றையும் வாசியுங்கள். உங்களது எல்லா விவகாரங்களையும் செயற்பாடுகளையும் அல்லாஹ் கண்காணித்துக் கொண்டிருக்கிறான் என்ற நல்லுணர்வோடு செயற்படுங்கள். அல்லாஹ் உங்களது எல்லா செயற்பாடுகளையும் அறிந்தவனாகவும் கண்களுக்குப் புலப்படாத உள்ளங்கள் மறைத்து வைத்துக் கொண்டிருக்கின்ற அனைத்தையும் தெரிந்தவனாகவுமிருக்கிறான். எனவே அவன் உங்களை எந்தவொரு நிலையிலும் பொருந்திக் கொள்ளக் கூடிய வகையில் காண்பதற்கு முயற்சி செய்யுங்கள். அல்லாஹ் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வால் நிரம்பிய உள்ளத்தை ஷைத்தான் நெருங்கவும் மாட்டான். எனவே இவ்விடயத்தில் பொடுபோக்காக இருக்க வேண்டாம்.*

*உங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள கடமைகளை நேரத்துக்கு நிறைவேற்றி விடுங்கள். அவற்றை பிறகு செய்யலாம் என்றோ அல்லது காரணங்களை முன் வைத்தோ அதிக வேலைகளினாலோ பிற்போடாதீர்கள். விட்டு விடாதீர்கள். ஏனென்றால் அது இச்சையின் உணர்வுகள். அல்லாஹ் கூறுகிறான்:*

*மனோ இச்சையைப் பின்பற்ற வேண்டாம். அவ்வாறாயின் அது உம்மை அல்லாஹ்வின் பாதையை விட்டும் வழிதவறச் செய்து விடும் (ஸாத்: 26)*

*அல்லாஹ்வை நெருங்கிச் செல்வதற்குரிய மிகச் சிறந்த சாதனமாக அவன் விதியாக்கிய கடமைகளே காணப்படுகின்றன. அதில் குறைவு செய்திட வேண்டாம். நீங்கள் மேற்கத்திய நாட்டில் இருந்து கொண்டு கஷ்டத்துடன் ஒரு நன்மையைச் செய்வது பன்மடங்கு கூலியைப் பெற்றுத் தரும். நான்*

இதனை விட அதிகமாக கடமையான விசயங்களை பற்றி கூற விரும்பவில்லை. ஏனென்றால் அது தான் மூலதனமாகும். மூலதனத்தினை வீணடித்தவனின் கைசேத மான நிலை நாளை எப்படி இருக்கும் என்பதனை நீங்கள் நன்கு நன்கறிவீர்கள். உங்களுக்கு முடியுமான அளவு நேரத்தை சுன்னத்தான காரியங்களை நிறைவேற்று வதில் கழியுங்கள். பர்ழான தொழுகை களுக்குரிய சுன்னத்தான தொழுகைகளையும் நிறைவேற்றுங்கள். இஸ்திஃபார் செய்வதை அதிகப்படுத்தி மகத்தான உங்களது இறை வனையும் துதி செய்யுங்கள். ஒருவன் பிரயா ணத்தில் இருக்கும் போது கேட்கும் துஆ பதிலளிக்கப்படக் கூடியது என்பதை தெரிந்து கொள்ளுங்கள். அல்லாஹ்வை ஞாபகப் படுத்துவதனை நீட்டிக் கொள் ளுங்கள். ஏனென்றால் நபி (ஸல்) அவர்கள் உமது நாவு அல்லாஹ்வின் ஞாபகத்தால் நனைந்து கொண்டே இருக்கட்டும் என அலி (ரலி) அவர்களுக்கு உபதேசம் செய்தார்கள்.

அல் குர்ஆனை விளங்கி ஆராய்ச்சி சிந்தனையுடன் அதிகமாக ஓதி வாருங்கள். அதுதான் உள்ளங்களுக்கான நோய் நிவாரணியாகும். உங்களுடைய ஒவ்வொரு நாளையும் அல்குர்ஆனைக் கொண்டே முடியுங்கள். ஏனென்றால் அது சிறந்த ஆரம்பமாகவும் நல்ல முடிவாகவும் உள்ளது.

நீங்கள் அங்கே பலவீனமான உள்ளங் களை மிகைத்து கண்களை மயக்கி சிந்தனையை மழுங்கடித்து உள்ளத்தை திசை திருப்பக் கூடிய உலகத்தின் கவர்ச்சிகளையும் மாயைகளையும் காண்பீர்கள். இவை களெல்லாம் உங்களையும் மயக்கி மறுமையை மறக்கடிக்காமல் இருக்கட்டும். அல்லாஹ் கூறுகிறான்: (நபியே!) அவர்களிலிருந்தும் சில பிரிவினருக்கு உலக வாழ்க்கையின் அலங்காரமாக எதைக் கொண்டு நாம் சுக மனுபவிக்கச் செய்திருக்கிறோமோ அதன் பக்கம் உம்முடைய இரு கண்களையும் நீர் திண்ணமாக செலுத்த வேண்டாம்.(ஏனெனில் மறுமையில் வழங்கப் பெறும்) உம் ரப்புடைய உணவு (இவ்வுலக வாழவில் அவர்கள் வழங்கப் பெறுவதை) விட மிகச் சிறந்ததும் நிலையானதுமாகும்.(தாஹா :131)

எனது மதிப்பிற்குரியவரே! அங்கு இருக்கிறவர்கள் அல்லாஹ் உங்களுக்கு ஹராமாக்கியுள்ளதை ஹலாலாகக் கருது வார்கள். அந்த ஹராம்களை செய்வதில் சற்றேனும் தயக்கம் காட்ட மாட்டார்கள். எனவே நீங்கள் இச்சைகளுக்கு உடன்பட்டுச் செல்ல வேண்டாம். அவர்கள் செய்யும் பாவங்களில் பங்கு கொள்ளவும் வேண்டாம். நிச்சயமாக அவை உங்களை அல்லாஹ்வின் பிடியிலிருந்து பாதுகாக்க மாட்டாது. மறுமையில் உங்களுக்கு ஆதாரமாகவும் இருக்க மாட்டாது.

அடுத்து நீங்கள் அங்கு இருக்கும் இளமைப் பெண்களுடன் தோழமை கொள்ள வேண்டாம். உங்களுக்கும் அவர் களுக்குமிடையில் தனிப்பட்ட நட்பையோ அல்லது உறுதியான உறவையோ ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம். இது ஏனையவர்களுக்கு ஒரு குற்றமாக காணப் பட்டால் உங்கள் மீது இரண்டு குற்றங் களாகும். ஏனென்றால் அதற்கான விளக் கத்தை அறிந்து வைத்துள்ளீர்கள்.

மதுபானத்தை நெருங்கவும் வேண்டாம். அவ்வாறு நெருங்குவதற்கு சூழலை காரணம் காட்டவும் வேண்டாம். ஏனெனில் அல்லாஹ் அனைத்து சூழல் காரணி களையும் அறிந்தே அதனை ஹராமாக் கினான். இவ்வாறே ஹராமான எந்த உணவையும் சுவைக்க வேண்டாம். ஹரா மினால் வளரும் உடம்பு நரகத்துக்கே மிகவும் பொருத்தமாகும். அல்லாஹ் ஹராமாக்கிய ஒன்றில் கெடுதியைத் தவிர வேறு ஒன்று மில்லை.

இன்னும் தூய்மையானவற்றை அவர் களுக்கு அவர் (நபியவர்கள்) ஹலாலாக்கி கெட்டவற்றை அவர்களின் மீது ஹராமாக்கி வைப்பார்.(அஃராப் :157)

இவ்வாறு இன்னும் பல விடயங்கள் இருக்கின்றன. தொடர்ந்து உங்களுடன் உரையாடிக் கொண்டிருக்க வேண்டுமென விரும்புகிறேன். என்றாலும் அதிகமான பேச்சு சிலவற்றை மறக்கடித்து விடும் எனப் பயப்படுகின்றேன். எனவே உங்களுக்கு அல்லாஹ் நல்லதை நாட வேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன்.

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்ம துல்லாஹி வ பரகாதுஹு!

□

## நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக

# ஆவணங்களை திருத்திய காவல்துறை அதிகாரி

**ஞாயிற்றுக்கிழமை** *08 டிசம்பர் 2013 23:17* நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக செயல்படும் காவல்துறை அதிகாரி! நாகர்கோவில்: நீதிமன்ற உத்தரவுக்கு எதிராக செயல்பட்ட காவல்துறை துணை ஆய்வாளர்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரி நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நாகர்கோவில் கோட்டாறு பகுதியை சேர்ந்தவர் சபீக்கான். இவர் மீது கோட்டாறு காவல்துறையினர் கொலை மிரட்டல் உள்ளிட்ட சில பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர். அந்த வழக்கு பொய் வழக்கு என்றும் அதனை ரத்து செய்ய வேண்டு மெனவும்கோரி சபீக்கான் மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் வழக்கு தொடர்ந்தார்.

சபீக்கான் மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், சபீக்கான்மீது கோட்டாறு காவல்துறையினர் பதிவு செய்த வழக்கில் இறுதி அறிக்கை (குற்றப்பத்திரிகை) தாக்கல் செய்ய தடை விதித்து 29.4.2013 அன்று உத்தரவு பிறப்பித்தது. ஆனால் இந்த உத்தரவை மீறி கோட்டாறு காவல்துறையினர் அந்த வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தனர். இதனை எதிர்த்து "கோட்டாறு காவல்துறை ஆய்வாளர் சங்கர் கண்ணனை நீதிமன்ற அவமதிப்பின் கீழ் தண்டிக்க வேண்டும்" என்றுகோரி சபீக்கான் மற்றொரு மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதி சி.டி.செல்வம் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் மகேசுவரன் ஆஜராகி வாதாடினார். விசாரணையின் போது அரசு தரப்பு வழக்கறிஞர், நீதிமன்ற உத்தரவு கோட்டாறு காவல்துறையினருக்கு 13-5-2013 அன்றுதான் கிடைத்தது. ஆனால் கோட்டாறு காவல்துறையினர் அதற்கு முன்னதாகவே 10-5-2013 அன்றே இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விட்டனர். எனவே, நீதிமன்ற உத்தரவைக் காவல்துறை ஆய்வாளர் மீறவில்லை என்று வாதிட்டார்.

தொடர்ந்து, வழக்கு தொடர்பான ஆவணங்களைத் தாக்கல் செய்ய நீதிபதி உத்தரவிட்டார். அதன்படி கோட்டாறு காவல்துறையினர் ஆவணங்களை நீதி மன்றத்தில் தாக்கல் செய்தனர். நீதிபதி ஆவணங்களை பரிசீலித்துப் பார்த்த போது, 13.5.2013 அன்று நீதிமன்ற உத்தரவு கோட்டாறு காவல்துறையினருக்குக் கிடைத்ததும், இந்த உத்தரவு கிடைத்த பின்பு 30.7.2013 அன்றுதான் இறுதி அறிக்கை தாக்கல் செய்து இருப்பதும் தெரியவந்தது.

ஆனால், நீதிமன்ற உத்தரவு காவல் துறையினருக்குக் கிடைத்த தேதியான 13-5-2013க்கு முன்னதாக 10-5-2013 அன்றே இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது போன்று ஆவணங்களைத் திருத்தி இருப்பது தெரியவந்தது. இதைத்தொடர்ந்து, "கோட்டாறு காவல்துறை ஆய்வாளர் நீதிமன்ற உத்தரவை மீறியுள்ளார்" என்று நீதிபதி தெரிவித்தார்.

அப்போது அரசு வழக்கறிஞர் குறுக்கிட்டு, "கோட்டாறு காவல்துறை ஆய்வாளர் சங்கர் கண்ணன் கடந்த ஜூன் மாதம்தான் கோட்டாறு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பொறுப்பேற்றார். இதனால், அவருக்கு அவ்வழக்கில் நீதிமன்ற உத்தரவு பற்றி தெரியாது. இந்த வழக்கை ஏற்கனவே விசாரித்து வந்த கோட்டாறு காவல்துறை துணை ஆய்வாளர் சுஜித் ஆனந்த் (இவர் தற்போது கருங்கல் காவல் நிலையத்தில் வேலை பார்த்து வருகிறார்) வேறு இடத்துக்கு மாறுதலாகிச் சென்று விட்டார்" என்றார்.

இதைத் தொடர்ந்து நீதிபதி பிறப்பித்த இடைக்கால உத்தரவில்,

"நீதிமன்ற உத்தரவை மீறி இறுதி அறிக்கை தாக்கல் செய்த காவல்துறை அதிகாரி யார் என்பது குறித்து விசாரிக்க கன்னியாகுமரி மாவட்ட காவல்துறை கண் காணிப்பாருக்கு, டிஜிபி உத்தரவிட வேண்டும். அதன் அடிப்படையில் தவறு செய்த அதிகாரி யார்? அந்த அதிகாரி மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை காவல்துறை கண்காணிப்பாளர் மதுரை உயர் நீதிமன்ற கிளை பதிவாளரிடம் அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும். மேலும், ஏற்கனவே, கோட்டாறு காவல் துறையினர் தாக்கல் செய்த சபீக்கான் மீதான கொலை முயற்சி வழக்கின் இறுதி அறிக் கைக்குத் தடை விதிக்கப்படுகிறது. இந்த வழக்கு தொடர்பாக மீண்டும் விசாரணை நடத்தி அந்த அறிக்கையை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்" என்று உத்தரவிட்டுள்ளார்.

**யார் இந்த சுஜித் ஆனந்த்?**

காவல்துறை துணை ஆய்வாளர் சுஜித் ஆனந்த் முஸ்லிம் விரோத போக்குடன் செயல்படும் ஒரு காவி அதிகாரி என்றக் குற்றச்சாட்டு ஏற்கெனவே குமரி மாவட்ட முஸ்லிம்களிடையே உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் முஸ்லிம்களுக்கு எதிரான எந்த ஒரு பிரச்சினையானாலும் இவர் அந்த இடத்தில் ஆஜராகிவிடுவார். அது மேலதி காரி உத்தரவின் பேரிலா அல்லது வேறு ஏதாவது உள்நோக்கத்திலா என்பது இது வரை புரியாத புதிராக உள்ளது.

ஏனெனில், சமீபத்தில் திருவிதாங் கோட்டில் நடந்த பள்ளி மாணவர்களிடை யேயான தகராறில் சிறுவர்களைக் கைது செய்து நாங்குனேரி சீர்திருத்தப் பள்ளியில் அடைத்தனர். இந்த வழக்கு தொடர்பாக வழக்கில் சம்பந்தமே இல்லாத நபர்களின் வீட்டுக்குச் சென்று மிரட்டுவது, அண்ண னுக்குப் பதிலாக தம்பியையும், தம்பிக்கு பதிலாக அண்ணனையும் தூக்கி செல்வது, வீட்டில் தனியாக இருக்கும் பெண்களை மிரட்டுவது, ஆபாசமாக பேசுவது என்பது உள்ளிட்ட பல்வேறு அத்துமீறல்களில் ஈடுபட்டார்.

திருவிதாங்கோடு, தக்கலை காவல் நிலைய எல்லைக்குள் வரும் ஊர். தக்கலை காவல் நிலையத்தில் பணியில் இல்லாத இவர் எப்படி திருவிதாங்கோடு வழக்கில் தலையிட முடியும் என்ற கேள்வி எழுந்தபோது, திருவிதாங்கோடு வழக்கை விசாரிக்கும் சிறப்பு பிரிவில் தாம் நியமிக்கப்பட்டுள்ள தாக சுஜித் ஆனந்த் தெரிவித்துள்ளார். இது குறித்து கன்னியாகுமரி மாவட்ட வருவாய் கோட்ட ஆட்சியரிடம் விசாரித்த போது, "இந்த மாவட்டத்தில் இது வரை எந்த சிறப்பு பிரிவும் செயல்படவில்லை. யாரையும் சிறப்பு பிரிவு அதிகாரியாக நியமிக்கவும் இல்லை" என்று தெரிவித்தார். இதிலிருந்து துணை ஆய்வாளர் சுஜித் ஆனந்த், முஸ்லிம்களின் விசயத்தில் சம்பந்தமில்லாமல் மூக்கை நுழைப்பது உறுதியாகியுள்ளது.

மேற்குறிப்பிட்ட சபீக்கான் மீதான கொலைமுயற்சி வழக்கிலும் நீதிமன்ற உத்தரவை மீறி இறுதி அறிக்கையினை இவர்தாம் தாக்கல் செய்துள்ளார். நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டதும் தாம் அறிக்கை தாக்கல் செய்த தேதியினை ஆவ ணத்தில் திருத்தியுள்ளார். இதற்கிடையில் கோட்டாறு காவல் நிலையத்திலிருந்து இவர் இடம் மாற்றம் செய்யப்பட்டு விட்ட தாலேயே நீதிமன்ற அவமதிப்பு வழக்கு கோட்டாறு காவல் நிலைய ஆய்வாளர் சங்கர் கண்ணன்மீது தொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் ஜூன் மாதம்தான் கோட் டாறுக்கு மாற்றலாகி வந்துள்ளார்.

முஸ்லிம்கள் விசயத்தில் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து சட்டத்துக்குப் புறம்பாக செயல்படுவதும் நீதிமன்ற உத்தரவையே மீறுவதும் அது தொடர்பாக வழக்கு வந்தவுடன் நீதிமன்ற ஆவணத்தையே திருத்துவதும் என பல அத்துமீறல்களைச் செய்யும் இந்தக் காவல்துறை அதிகாரிமீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பல தரப்புகளிலிருந்தும் தற்போது கோரிக்கைகள் எழ ஆரம்பித் துள்ளன.

**தகவல் :** inneram.com

# இக்வான்கள் தனி சேனல் தொடக்கம்




**அபுல் ஹஸன் ஆலிம் ஃபாஸி**

**எகிப்தை** மையமாக கொண்டு உல கெங்கும் இஸ்லாமிய ஆட்சி அமைந்திட உழைப்பவர்கள் இக்வானுல் முஸ்லிமீன் இயக்கத்தவர்கள்.

கடந்த 2012 ம் ஆண்டு நடந்த எகிப்து அதிபர் தேர்தலில் மக்களின் அமோக ஆதரவைப் பெற்று இக்வான்கள் இயக் கத்தின் டாக்டர் முஹம்மது முர்சி அவர்கள் அதிபரானார்.

மூர்சியின் தொலைநோக்கு திட்டங் களைக் கண்டு கடும் அச்சமடைந்த அமெரிக் காவும், இஸ்ரேலும் எகிப்து இராணுவத்தை பயன்படுத்தி இவ்வருடம் ஜுன் 30 தேதி ஆட்சிக் கவிழ்ப்பு நடத்தின.

தொடர்ந்து மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட மூர்சி கைது செய்யப்பட்டார். இக்வானுல் முஸ்லிமீன் இயக்க தலைவர்கள் பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அமைதியான முறையில் போராட்டம் நடத்திய 1000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் இவ்வருடம் ரமலானில் ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நீதிக்கான அனைத்து வழிகளும் அடைக்கப்பட்டன. இக்வான்களின் பத்திரிகையான தஃவா மாத இதழும் முடக்கப்பட்டது.

அல் அஹ்ராம் உட்பட எகிப்தின் அனைத்து பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் இக்வான்களுக்கு எதிரான அவதூறு பிரச்சாரத்தில் ஈடுபட்டன.

உண்மை என்ன? என்பதை மக்களுக்கு தெரியப்படுத்தவும், மீண்டும் இஸ்லாமிய எழுச்சியை ஏற்படுத்தவும் தொலைக்காட்சி சேனல் ஒன்றை தொடங்க முடிவு செய்த இக்வான்கள் அதற்கான இடமாக லெபனான் தலைநகர் பெய்ரூத் நகரத்தை தேர்வு செய்தனர்.

அதற்கான பணிகள் பெய்ரூத்தில் நடந்து வந்த நிலையில், அமெரிக்காவும், இஸ்ரேலும், எகிப்தும் லெபனானை மிரட்டின. லெபனான் பயந்து பின்வாங்கியது. சேனலுக் கான இட அனுமதியை மறுத்தது.

சர்வதேச இஸ்லாமிய அறிஞர்கள் அமைப்பின் தலைவர் டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவியின் மூலம் இது துருக்கி அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

துருக்கி அரசு இக்வான்களின் சேனலுக்கு இஸ்தான்பூல் நகரில் இடம் தந்தது.

கடந்த 20-12.2013 அன்று இக்வான் களின் தொலைக்காட்சி சேனல் 'சேனல் 4' (கனாத் ராபிஆ) தொடக்க நிகழ்ச்சி இஸ்தான்பூல் நகரில் நடந்தது.

சேனலை தொடங்கி வைத்து டாக்டர் யூசுப் அல்கர்ளாவி பேசியதாவது:

இஸ்லாத்தை பரப்பவும், உலகெங்கும் பரவி வாழும் இஸ்லாமியர்களை ஒன்றிணைக்கவும் இச்சேனல் பாடுபடும். அத்துடன் அநீதிக்கும், அநியாயக்கார ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் இச்சேனல் குரல் கொடுக்கும் என்றார்.

முஹம்மது முர்சி ஆட்சி ராணுவத்தால் கவிழ்க்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து துருக்கி தனது தூதரை எகிப்தில் இருந்து வாபஸ் பெற்றது நினைவுகூறத்தக்கது.

**தகவல் : ரஃயுல் யவ்ம் அரபி பத்திரிகை (பாலஸ்தீனம்) 21-12-2013**

# ஊடகங்களில் 'கஷ்மீரின் பாதி விதவைகள்'

MGM

'**என்ன** வெற்றி கிடைத் திருக்கின்றதே!' என்றார் அன்புச் சகோதரர் M.G.K. நிஜாம் (INL) அவர்கள் முன்னாள் எம்.எல்.ஏ திடீரென தொலைபேசியில் இப்படியொரு வெற்றியைப் பற்றிய பேச்சை எதிர்பார்க்க வில்லை.

சற்றே விளக்கமாகச் சொன்னார்கள்:

"கஷ்மீரில் 2010 செப்டம்பரில் நடந்த போலி என்கவுன்டரில் கொலை செய்யப் பட்ட இளைஞர்களுக்கு நியாயம் கிடைத் திருக்கின்றது. இராணுவ அதிகாரிகள் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்" என்றார்.

செய்தியை தினமணி நாளிதழ் (26-12-2013) வெளியிட்டிருந்தது. நான் தினமணியுடன் பேசினேன். அதில் நாம் வெளியிட்டிருக்கும் 'கஷ்மீரின் பாதி விதவைகள்' நூலைப் பற்றியும் குறிப்பிட் டேன் என்றார். செய்தியை நாம் பார்வைக்குக் கொண்டு வந்ததற்கு அவருக்கு நன்றி சொன்னோம்.

அதே செய்தியை 'தி இந்து' நாளிதழும் வெளியிட்டிருந்தாலும் 20-12-2013 அத்தோடு 28-12-2013இலும் செய்தியை வெளியிட் டிருந்தது. 'கஷ்மீரின் பாதி விதவைகள்' என்றொரு தொடரை நாம் வைகறையில் இடம்பெறச் செய்திருந்தோம்.

அதனை பின்னர் நூலாகவும் வெளி யிட்டோம்.

தொடர்ந்து அந்த நூலை தமிழக மெங்கும் அறிமுகப்படுத்தும், முயற்சியையும், அந்த மக்களின் அவலங்களை, மக்கள் மன்றத்தில் வைத்திடும் வகையில் சில பல நிகழ்ச்சிகளையும் நடத்தினோம். அதன் முதல் நிகழ்ச்சியை திருச்சியில் நடத்தினோம்.

திருச்சி நிகழ்ச்சி பற்றி தனிக் கட்டுரை ஒன்றைத் தந்திருக்கின்றோம்.

அதன் பின் சென்னை நேதாஜி நகரில் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தோம்.

**நமது தொடர் முயற்சிகள்**

சுமார் மூன்றாண்டுகளாக நாம் மேற் கொண்ட முயற்சியால் அநீதிகள் ஒழிக்கப் பட வேண்டும் எனப் போராடி வருகின் றோம்.

1. கற்பழிப்புகளையும், கொலைகளையும் செய்யும் இராணுவத்தினர் தண்டிக்கப்பட வேண்டும். அவர்களை வெறுமனே பணி யிலிருந்து அகற்றினால் மட்டும் போதாது. அவர்கள் செய்த தவறுகளுக்காகத் தண் டிக்கப்பட வேண்டும்.

2. ஆயுதந்தாங்கிய படைகளின் சிறப்பு அதிகாரச் சட்டம் கஷ்மீரிலிருந்து பின் வாங்கப்பட வேண்டும். (Armed Forcel Special Powers Act Must be withdrawn from Kashmir.)

3. தங்கள் மகன்களை, கணவர்களை மீட்டுத் தந்திட வேண்டும். அவர்களுக்கு இழப்பீடுகளைத் தருவேன். ஆனால், கைது செய்து அழைத்துச் சென்ற ஆண் வாரிசு களைத் தந்திட மாட்டோம் என்பதே அப்பட்டமான/ மனிதர்களால் ஏற்றுக் கொள்ளவியலாத அநீதி.

ஆனால், அந்தப் பெண்கள் விபரீதமாக சிந்திக்கவில்லை. ஆண் வாரிசுகளை இழந்து, இருந்த பொருள்களையும் இழந்து, அனைத் தையும் இழந்து நிற்கும் அந்தப் பெண்கள் முறையான நடவடிக்கைகளையே மேற் கொண்டார்கள்.

நமது இந்திய அரசாங்கத்தையும் இந்திய நீதிமன்றங்களையுமே அணுகினார்கள். அவர்கள் எடுத்த அனைத்து நடவடிக்கை யிலும், அவர்களை ஏமாற்றினோம். அதிகார மமதையையும் ஆணவத்தையுமே காட்டி னோம். அந்த நிலையிலும் அவர்கள் வேறு வழிகளை நாடவில்லை. மனநிலை பாதிக்கப் பட்டார்கள்.

மனநிலை பாதிக்கப்பட்ட அளவில் சில பெண்கள் அழுது கொண்டே இருக்கின் றார்கள். சில பெண்கள் சதா சர்வ காலமும் சிரித்துக் கொண்டே இருக்கின்றார்கள்.

அவர்களைப் பார்ப்பவர் அழுது கொண்டே நிற்கின்றார்கள்.

அவர்கள் கண்களில் கண்ணீர் இல்லை. அவர்களின் வாழ்க்கையை அவர்களைப் பாதுகாத்திட வேண்டிய அரசும், அரசு இயந்திரமும் பாதுகாப்புப்படை என்ற பெயரில் பவனி வரும் படுகொலை பாதகர்களும் பறித்துக் கொண்டார்கள்.

மரணம் அவர்களை நிரந்தர உலகை நோக்கி இந்த உலகை விட்டு நிரந்தரமாக அழைத்துச் செல்லும் நாளை எதிர்பார்த்துக் காத்துக் கிடக்கின்றார்கள். இந்த நிலை ஓர் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

கஷ்மீரின் பாதி விதவைகளுக்காக, நாம் தொடர்ந்து பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இந்த முயற்சிகளுக்குப் பயன் தந்ததைப் போலும், பதில் தந்ததைப் போலும் ஓர் செய்தி, தி இந்து தமிழ் நாளிதழில், அது பாதி விதவைகள் (அதாவது பாதி கைம் பெண்கள் இந்து தமிழ் நாளிதழின் சொல் லாட்சியில்) மறுமணம் செய்து கொள்ளலாம் என கஷ்மீரிலுள்ள ஆலிம்கள், மார்க்கத் தீர்ப்பை வழங்கி விட்டார்கள். 'தி இந்து' 27-12-2013.

மறுமணம் செய்து கொள்ள அந்த மக்கள் எப்போதும் அனுமதி கேட்கவில்லை. மாறாக, தங்கள் ஆண் குழந்தைகளை, மகன்களை கணவனைத் தான் திருப்பிக் கேட்டார்கள்.

'கஷ்மீரின் பாதி விதவைகள்' என்ற நூலைத் தொகுத்துத் தந்திட நாம் அடிப்படையாகக் கொண்ட நூல் சகோதரி அஷ்ஷான ராஷித் அவர்களின் கள ஆய்வாக அமைந்த Widows & Half Widows என்ற நூல்தான்.

அந்த நூலில் அதாவது அந்தக் கள ஆய்வில் ஓர் அத்தியாயம் (அத்தியாயம் 15) அதன் தலைப்பே பெண்கள் போராடவே விரும்புகின்றார்கள். அதாவது, கணவனை, மகன்களை, பறிகொடுத்த பெண்கள், தங்கள் கணவர்களையும், தங்கள் மகன்களையும் மீட்பதற்காகப் போராடவே விரும்புகின்றார்கள். அதனால் அவர்கள் மறுமணம் செய்து கொள்ள விரும்பிடவில்லை.

அவர்கள் ஒருவேளை மறுமணம் செய்து கொண்டால் கூட, அந்த ஆண் மகனை எத்தனை நாள் விட்டு வைப்பார்கள். நமது பாதுகாப்புப் படையினர் என்ற இராணுவத்தினர் என்ற வினா இருந்து கொண்டே இருக்கின்றது.

அத்தோடு கணவனையும், குடும்பத்திலுள்ள ஆண்களையும் பற்றிக் கவலைப் படாமல் ஓர் திருமணத்தை நாடிடும் அளவில் கஷ்மீர் பெண்கள் இல்லை.

இத்தனையுமிருந்தாலும், நமது பத்திரிகைகள் தினமணியும், தி ஹிந்து தமிழிலும், கஷ்மீர் பெண்கள் விவகாரத்தை விவாதத்திற்குள்ளாக்கி இருப்பதும், மக்கள் மன்றத்தில் கொண்டு வந்ததற்கும் நன்றி சொல்வோம்.

அவர்களின் போராட்டத்திலும் அவர்களின் சோகத்திலும் நாம் பங்கெடுப்போம். அவர்கள் அந்நியப்பட்டுப் போகாமல் பார்த்துக் கொள்வோம்.

மக்கள் மன்றத்தில் நாம் கொண்டு செல்லும் உண்மைகள், யதார்த்தங்கள் இவை அரசின் போக்கை மாற்றாவிட்டால் எல்லாம் கெட்டப் போகும். அல்லாஹ் காப்பாற்றுவானாக!

☐



அல்குர்ஆனின் அறிவியல் அத்தாட்சிகள்

# உற்பத்தி ஸ்தலம்



இலக்கியச் சுடர்
ரஹ்மத் ராஜகுமாரன்
Cell No: 9443446903

... சென்ற இதழ் தொடர்ச்சி

**தேனீ,** பூவிலுள்ள நிக்டார் (Nectar) என்னும் மதுவை உறிஞ்சி தன் உடலில் கொஞ்ச நேரம் வைத்திருந்து அதனுடன் சில என்ஸைம்களைச் சேர்த்துப் பதப்படுத்து கிறது. அதன் பின்னர் அதை அடைகளில் சுரந்து வைக்கிறது. இதோடு முடிந்து விடவில்லை. வேலைக்காரத் தேனீக்கள் அதை மறுபடியும் குடித்து, புரோட்டீன் சமாச்சாரங்களைச் சேர்த்து, அதிலிருக்கும் கொஞ்ச நஞ்ச நீரையும் ஆவியாக்கி வெளி யேற்றி விட்டு அடைகளில் பத்திரப் படுத்துகிறது. அதுதான் நயமான தேன். இப்படி ஒரு தொழிற்சாலையை மனிதனால் கனவில்கூட உருவாக்க முடியாது.

தேனில் வைட்டமின் B, J, K உள்ளிட் டவை உள்ளன. சிறப்பாக வைட்டமின் B-2 அதிக அளவு உள்ளது. இது கோழி இறைச்சியில் இருக்கும் வைட்டமினுக்கு நிகரானது. இது ஆப்பிள் மற்றும் திராட்சைச் சாறுகளிலுள்ள வைட்டமின் சக்தியை விட 16 மடங்கு அதிகமாகும்.

களைப்பு நீங்க தேன் ஓர் அளப்பரிய பானமாகும். ஒரு கிலோ தேனில் 312 கிலோ இறைச்சி, 12 கிலோ காய்கறிகளில் கிடைக்கும் சக்தி உள்ளது. தேனில் உள்ள குளுகோஸ் சத்தே நோய் நிவாரணி ஆகிறது. இது உயிரணுக்களுக்கும், உடலுறுப்புகளுக்கும் சிறந்த உணவாகும்.

மூச்சுத்திணறல், குடல் நோய், இதய நோய், அலர்ஜி, பரு, காயங்கள் போன்ற வற்றிற்கு தேன் ஒரு சிரஞ்சீவி ஆகும்.

அடுத்து,

காய்ந்தால் ‘கன்’ ‘கன்’ என்று சப்தம் கொடுக்கக் கூடிய பிசுபிசுப்பான (நாற்ற மடிக்கும்) களிமண்ணால் நிச்சயமாக நாமே உங்கள் மூலப் பிதாவாகிய முதல் மனிதனைப் படைத்தோம். (குர்ஆன் 15:26)

பிசுபிசுப்பான நாற்றமடிக்கும் மண்ணி லிருந்து மனிதனை உருவாக்கியதாக இறைவன் குறிப்பிடுகின்றான். மண் ஏன் நாற்றமடைந்தது?

நபி ஆதம் (அலை) அவர்களைப் படைக்க மலக்குள் மௌத் இஸ்ராயீல் (அலை) அவர்களைக் கொண்டு பூமியில் 7 இடங்களில் மண் எடுக்கப்பட்டது. (ஆதாரம்: மஸ்னவீ)

1. கஅபாவில் எடுக்கப்பட்ட மண்ணி லிருந்து தலைப் பகுதியையும்,

2. பைத்துல் முகத்தஸிலிருந்து விரிந்த மார்பையும், முதுகையும்,

3. கீழை நாட்டு மண்ணை எடுத்து வலது கையையும்,

4. மேலை நாட்டு மண்ணை எடுத்து இடது கையையும்,

5. யமன் நாட்டு மண்ணை எடுத்து இரண்டு தொடைகளையும்,

6. எகிப்து நைல் நதி மண்ணை எடுத்து இரண்டு கால்களையும்,

7. ஹிஜாஸ் மண்ணை எடுத்து இரண்டு கால் பாதங்களையும் படைத்ததாகவும்,

அம்மண்களின் கலவையோடு ‘தஸ்னீம்’ என்கிற சுவனத்து நதி நீராலும் கசப்பான

நீராலும் களிமண் பேதகமடைந்து பிசுபிசுப்பான களியாகும் வரை குழைக்கப் பட்டது.

ஹதீது குத்ஸியில், 'நான் என் கையால் ஆதமுடைய மண்ணை 40 காலைகள் குழைத்தேன்' என்று இறைவன் கூறகின்றான். உருவமற்ற இறைவனுக்கு எவ்வாறு கைகள் உண்டு என்று எண்ண வேண்டாம். இறைவன் ஆதம் (அலை) அவர்களைப் படைப்பதில் அதிக ஆர்வமும் அக்கறையும் எடுத்துக் கொண்டான் என்பதைக் குறிக்கவே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

தன்னுடைய பிரதிநிதியாக மண்ணிலே வாழவிருக்கும் மனிதனுக்கு வேண்டிய அறிவு, ஆற்றல் அனைத்தையும் நல்கிக் கொண்டே குழைத்த இறைவன் மனித உற்பத்தி செய்யும் 'இச்சை'யையும் சேர்த்து குழைத்த அந்த உருவத்தை மக்காவுக்கும் தாயிபுக்கும் இடையில் நாற்பது ஆண்டுகள் கிடந்தது. இச்சையுடன் குழைத்த களி மண்ணாக 40 ஆண்டுகள் கிடந்து, பின் நாற்றமடித்த களிமண்ணாக 40 ஆண்டுகள் கிடந்தது. அதன் பின் உயிர் (ரூஹ்) ஊதப் பட்டது என்று லஹ்ஹாக் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்.

இதன் காரணமாக கருவிலுள்ள குழந்தைக்கு 120 நாட்களில் உயிர் ஊட்டப் படுகிறது. இனச் சேர்க்கை நடந்து மாத விலக்கிலிருந்து 40 நாட்கள் கழித்துதான் கருவில் சிசு உறுதி செய்யப் படுகிறது. மனிதன் இறந்து 40 நாட்கள் வரை கத்தம் ஓதி ஈஸால் தவாபு செய்வது இதனால் தானோ...?

ஆதி மனிதர் ஆதம் (அலை) அவர்களைப் படைத்தது போக மிஞ்சி யிருந்த சிறிதளவு மண்ணைக் கொண்டு ஒரு வித மரத்தைப் படைத்தான். அதுவே பேரீத்த மரம் ஆகும். பேரீத்தம் மர பாளையிலிருந்து வடியும்ம நீர், மனிதனின் இந்திரிய வாடையைப் போன்ற நாற்றம் பெற்றிருக்கும்.

'இச்சை'யைச் சேர்த்துக் குழைத்த மனிதனின் நாற்றமடிக்கும் களிமண் இந்திரிய நாற்றத்தைத்தான் பெற்றிருக்க வேண்டும் என்பதாகக் கூறப்படுகிறது.

மனித இச்சைதான் நாற்றமா..? ஆழ்ந்து சிந்திக்க வைக்கிறது. அடுத்து, பெண் இனம்

ஆதிகால பெண்ணின்
உற்பத்தி ஸ்தலம்
கோணலான விலா எலும்பு.
எலும்பு கால்சியத்தால்
உருவானது. பெண்
ஒவ்வொரு மாதமும் ரத்தப்
போக்கால்
கால்சியத்தைத்தான்
இழக்கிறாள்.

படைக்க இறைவன் ஆணின் விலா எலும்பான கோணலான எலும்பைத் தேர்ந்தெடுத்து ஆதி முதல் பெண்ணான ஹவ்வா (அலை) அவர்களை உற்பத்தி செய்கிறான்.

'பெண்கள் கோணல் எலும்பால் படைக்கப்பட்டவர்கள்; எனவே, அவர்களை அப்படியே வைத்து நுகருங்கள்! நிமிர்த்த முயன்றால் முறிந்து விடும்' என்று அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஆதிகால பெண்ணின் உற்பத்தி ஸ்தலம் கோணலான விலா எலும்பு. எலும்பு கால்சியத்தால் உருவானது. பெண் ஒவ்வொரு மாதமும் ரத்தப் போக்கால் கால்சியத்தைத் தான் இழக்கிறாள்.

அடுத்து,

மனிதன் தான் எதனால் படைக்கப் பட்டிருக்கின்றான் என்பதை சிறிது கவனிக் கவும். குதித்து வெளிப்படும் ஒரு துளி தண்ணீரைக் கொண்டே படைக்கப் பட்டான்.



அது முதுகந்தண்டுக்கும், நெஞ்சுக்கும் மத்தியிலிருந்து வெளிப்படுகின்றது.(குர்ஆன் 86:5-7)

மனிதன் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதன் விபரம் இம்மூன்று வசனங்களில் கூறப்படுகிறது. சுக்கிலம் (ஆணின் விந்து), சுரோனிதம் (பெண்ணின் இந்திரியம்) ஆகிய இரண்டின் கலப்பினால்தான் கரு உண்டாகிறது.

ஆணின் விந்து அவனது முதுகெலும்பில்தான் உற்பத்தியாகிறது. இது வெள்ளை நிறமாக இருக்கும். ஒரு முறை வெளிப்படும் விந்து இரண்டு ஸ்பூன் அளவுக்கு வெளிவருகிறது. விந்துவில் 'ஸ்பெர்ம்கள்' என்று சொல்லப்படும் நுட்பமான உயிரணுக்களின் எண்ணிக்கை முப்பது கோடி. இந்த முப்பது கோடி உயிரணுக்களில் ஆயிரத்திற்கும் குறைவானதுதான் பெண்ணின் சினை முட்டையை வந்தடைகின்றன. இவற்றில் ஒன்றே ஒன்றுதான் வெற்றி பெறுகிறது. இப்படி வெற்றி பெற்றவர்தான் நீங்களும் நானும்.

பெண்ணின் இந்திரியம் அவளது நெஞ்சு எலும்புகளுக்கு இடையில் சுரோனிதமாக மாறுகிறது. இது சுத்தமான வெண்ணிறமாக இல்லாமல் சற்று சிவப்பு கலந்த கலங்கிய நிறமாக இருக்கும்.

ஆண், பெண் உடலுறவு கொள்ளும்போது காம உணர்ச்சி அதிகமாக ஏற்பட்டு அதனால் உண்டாகும் சூட்டினால் நெஞ்செலும்புகளுக்கு இடையிலுள்ள சுரோனிதம் தனது இருப்பிடத்தை விட்டு வெளியேறுகிறது. இது போல் ஆணின் முதுகந்தண்டினுள் உள்ள சுக்கிலமும் வெளியாகிறது.

ஆணின் விந்து (சுக்கிலம்) ஆண் குறியை விட்டு வெளியேறுகையில் குதித்து, முன் துவாரங்களின் வழியாக வெளியில் வந்தாலும் விந்து ஒரு குழாயிலும், சிறுநீர் வேறு ஒரு குழாயிலும் வெளி வருகிறது.

'அத்தராயிபு' என்பதற்கு நெஞ்செலும்புகளும், காரை எலும்புகளும் ஆகும். தவிர, சுரோனிதம் அதாவது பெண்ணின் இந்திரியம் பெண்ணின் இரு மார்புகளுக்கு மத்தியில் உருவாகிறது என்று அலீ (ரலி) மற்றும் இப்னு அப்பாஸ் (ரலி) இருவரும் குறிப்பிடுகிறார்கள்.

இவ்வாறெல்லாம் படைப்பின் உற்பத்தி மூலத்தை நிதானமாகக் கூறும் இறைவன் அதே நேரத்தில் அந்தப் படைப்பின் உன்னதத்தை பெருமைப்படப் பேசுகின்றான்.

கால்நடையின் இரத்தத்திற்கும், சாணத்திற்கும் இடையே கலப்பற்ற பால்.

தேனீயின் வயிற்றிலிருந்து தேன் - நோய் நிவாரணி.

பிசுபிசுப்பான களிமண்ணால் ஆதி மனிதர், வானவர்கள், சுஜூது செய்யும் கலீஃபா.

கோணல் எலும்பில் பெண், அவளின் காலடியில் சுவனம்....

அற்ப விந்துத் துளியில் 1,24,000 நபிமார்கள்....

'இவ்வாறு படைத்தவனான அல்லாஹ், பெரும் பாக்கியம் உடையவன். படைப்பாளர்களில் எல்லாம் மிக அழகான படைப்பாளன் அவன்.' (குர்ஆன் 23:14)

எல்லாப் படைப்புகளைப் பற்றியும் அற்புதமான அதன் உற்பத்தி ஸ்தலங்களைப் பற்றியெல்லாம் குறிப்பிடும் படைப்பாளனான அல்லாஹ் தன்னைப் பற்றி குர்ஆனில்,

நபியே! நீர் கூறுவீராக! அல்லாஹ் அவன் ஒருவனே. அல்லாஹ் எவரிடத்தும் எந்த தேவையும் அற்றவன். அவன் எவரையும் பெறவுமில்லை. எவராலும் பெறப்படவுமில்லை. அன்றியும், அவனுக்கு நிகராக எவரும் இல்லை.(குர்ஆன் 112:1-4)

படைப்புகளையும் அதன் உற்பத்தி ஸ்தலங்களையும் விஞ்ஞான ரீதியில் ஆய்ந்தோய்ந்த நம் அறிவு அதே விஞ்ஞான ரீதியில் படைப்பாளனைப் பற்றிச் சிந்திக்கும் போது, அறிவின் எல்லையைக் கடந்த ஆன்மிக விஸ்தாரத்தை அறிமுகம் செய்கின்றான்.

"அவன் பெறவுமில்லை; பெறப்படவுமில்லை."

☐

# எகிப்து ராணுவ அரசு தனிமைப்படுகிறது

**மன்சூரா** குண்டுவெடிப்பை காரணம் காட்டி இக்வானுல் முஸ்லிமீன் இயக்கத்தை தடை செய்த எகிப்து ராணுவ அரசு 572 இக்வான் தலைவர்களை கைது செய்து, அவர்களின் சொத்துக்களை முடக்கவும், இக்வான்கள் நடத்தும் 87 பள்ளிக்கூடங்களை கைப்பற்றவும் ஆணை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் இக்வான்கள் இயக்கத்தை தடை செய்துள்ளதற்கு சர்வதேச அளவில் கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன.

அல்ஜீரியா, மொராக்கோ, லிபியா, யமன், ஈரான் என மத்திய கிழக்கில் பெரும்பாலான நாடுகள் இக்வானுல் முஸ்லிமீன் இயக்கத்தின் மீதான தடைக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. துருக்கி பிரதமர் ரஜப் தய்யிப் எர்துகான் இதனை திட்டமிட்ட சதி என்று வர்ணித்தார்.

இந்நிலையில் இது குறித்து கருத்து தெரிவித்த அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜான் கெர்ரி, பெரும்பான்மை மக்களின் ஆதரவினால் ஜனநாயக முறைப்படி ஆளும் கட்சியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சியையும், அதுசார்ந்த இயக்கத்தையும் பயங்கரவாத இயக்கமாக எகிப்து ராணுவ அரசு அறிவித்தது மிகுந்த வருத்தமளிக்கிறது என்றார்.

பிரபல இங்கிலாந்து பத்திரிக்கையான இன்டிபன்டட் நாளிதழ், இக்வான்கள் இயக்கத்தை தடை செய்து, எகிப்து சர்வாதிகார காலத்திற்கு திரும்பியுள்ளது என்று கருத்து தெரிவித்தது.

**இக்வான்களுக்கு உதவுவோம்: கத்தார்**

கத்தாரில் குடியுரிமை பெற்று வசித்து வரும் சர்வதேச இஸ்லாமிய பேரறிஞர் டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவியை (வயது 87) கைது செய்ய இன்டர்போல் உதவியை நாடியுள்ளதாக எகிப்து அறிவித்தது குறித்து கத்தார் மன்னர் தமீம் இப்னு ஹம்து அவர்களிடம் நிருபர்கள் கேட்டனர்.

அதற்கு அவர், இக்வான்களுக்கு உதவுவது கடமை. நன்றியை எதிர்பார்க்காமல் அதனை செய்வோம் என்றார் . தொடர்ந்து பேசிய அவர், முர்சி ஆட்சி நீடித்திருந்தால் சிரியா விவகாரம் முடிவுக்கு வந்திருக்கும். முர்சியும், ரஜப் தய்யிப் எர்துகானும் அதற்கு நன்கு உழைத்தனர். அமெரிக்காவுக்கு நிர்பந்தம் தந்தனர்.

முர்சியின் வீழ்ச்சியால் சிரியா விவகாரத்தில் அமெரிக்கா தயக்கம் காட்டி வருகிறது. சவூதி, அமெரிக்காவின் பின்னால் நிற்கிறதே தவிர பிரச்சினையை தீர்க்க முன்வரவில்லை. தொடர்ந்து எகிப்து ராணுவ அரசை கண்டித்த அவர், இக்வான்களுக்கும், பாலஸ்தீன மக்களுக்கும் எல்லா வகையான உதவிகளையும் கத்தார் செய்யும் என்றார்.

சர்வதேச பத்திரிக்கையாளர் சம்மேளனம் கண்டனம்

பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் மீது ராணுவ அரசு அடக்குமுறைகளை ஏவிவிடுவதை அம்பலப்படுத்திய அல் ஜஸீரா நிருபர்களை எகிப்து அரசு ஞாயிற்றுக்கிழமை (29.12.2013) கைது செய்தது.

இதற்கு சர்வதேச பத்திரிக்கையாளர்கள் பாதுகாப்பு அமைப்பு ( )கடும் கண்டனம் தெரிவித்தது. 2011 ஹுஸ்னி முபாரக் ஆட்சிக்கு பிறகு இவ்வருடம் (2013) பத்திரிகையாளர்களை அதிகம் கைது செய்த நாடுகளில் எகிப்து முதலிடம் வகிக்கிறது என்று அவ்வமைப்பு செய்தி வெளியிட்டுள்ளது.

☐

# அமெரிக்கா கொலை செய்த முஸ்லிம் விஞ்ஞானிகள்

**விஞ்ஞான** உலகில் அமெரிக்காவும், ஐரோப்பாவும் கடந்த 10 ஆண்டுகளில் சாதித்தவை எதுவுமில்லை. இஸ்லாமிய உலகமே அறிவியல் விஞ்ஞான ஆராய்ச்சிகளில் முன்னே நிற்கின்றது.

ஈரான், துருக்கி, மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து வெளிப்போந்த ஆய்வு முடிவுகள் ஆராய்ச்சிக் கட்டுரைகள் (Research papers) மேலை நாடுகளிலிருந்து வெளிவந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளை விட பன்மடங்கு அதிகம். பார்க்க : வைகறை வெளிச்சம்.

அணுசக்தி ஆராய்ச்சியில் ஈரான் அனைத்து நாடுகளையும் விஞ்சி முன்னே நிற்கின்றது.

ஆராய்ச்சிகளால் ஈரானை வென்றிட இயலாத அமெரிக்கா பன்மடங்கு கீழே இறங்கி அறிவியல் துறையிலும் தன் கொலைவெறியைக் காட்டிற்று. இந்த வகையில் அமெரிக்காவும் இஸ்ரேலின் உளவுத்துறையாகிய மொசாதும் கொலை செய்த முஸ்லிம் விஞ்ஞானிகள் ஏராளம், ஏராளம்.

ஆபியா சித்தீகா என்ற முஸ்லிம் பெண் விஞ்ஞானியை இவர்கள் சித்ரவதை செய்த செய்தியை வைகறை வெளிச்சத்தில் விரிவாக வெளியிட்டிருந்தோம். (பார்க்க : வைகறை வெளிச்சம்)

ஈராக்கை ஆக்கிரமித்த போது, அங்குள்ள பெண் விஞ்ஞானிகளில் 1500 பேரை அபூகுரைப் என்ற சித்ரவதைக் கூடத்தில் வைத்து அமெரிக்கா கொலை செய்தது. அபூகுரைப் என்பது ஈராக்கிலுள்ள ஓரிடம்.

அதே போல் பாகிஸ்தானைச் சார்ந்த அணு விஞ்ஞானி அப்துல் காதிர்கான் அவர்களை வீட்டுச் சிறையிலும் கொட்டடிகளிலும் மாற்றி மாற்றி வைத்து சித்ரவதை செய்து மெல்ல மெல்ல கொன்று வருகின்றது. இதற்கு அவர் மீது மாபெரும் பழியொன்றை சுமத்தியது. அவர், அணுசக்தி பற்றிய அறிவை இஸ்லாமிய தீவிரவாதிகளுக்குக் கற்றுக் கொடுத்து விட்டார் என்பதே அந்தப் பழி.

அதே போல ஈரானைச் சார்ந்த பல விஞ்ஞானிகளையும் கொலை செய்துள்ளது அமெரிக்கா.

**அமெரிக்கா செய்த கொலைகள்**

அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் ஓர் பனிப்போர் நடந்து வருகின்றது என்பது அரசியல் நோக்கர்களின் கருத்து.

இந்தப் பனிப்போர் ஈரானில் 1989களில் ஏற்பட்ட இஸ்லாமியப் புரட்சிக்குப் பின் தொடங்கியது.

இந்தப் பனிப்போரை அமெரிக்கா முன்னின்று நடத்தினாலும் இஸ்ரேல் - இஸ்ரேலின் உளவுத்துறையாகிய மொசாத் ஐரோப்பிய நாடுகள் இவை முக்கிய பங்கு வகிக்கின்றன.

2007ஆம் ஆண்டு முதல் ஈரானில் அணு விஞ்ஞானிகளை அமெரிக்கா இஸ்ரேலின் மொசாதை ஏவி கொலை செய்தது.

பெரும்பாலும் காரில் பொருத்தக் கூடிய குண்டுகளை காரில் பொருந்தி கொலைகளைச் செய்தார்கள். (இதே வகையில் டெல்லியில் இஸ்ரேலின் தூதரகத்திற்கு முன் ஒரு காரில் பொருத்தி வெறும் காரை எரிய விட்டு பழியை முஸ்லிம்கள் மேல் போட்டார்கள்.) பின்னர் இந்த உண்மை கண்டுபிடிக்கப் பட்டு நிரூபிக்கப்பட்டது. இதனை 'Magnetics Bombs' காந்த குண்டுகள் என்கின்றார்கள்.

அண்மையில் 2013இல் முஸ்தபா அஹமதி என்பவரைக் கொலை செய் தார்கள்.

இவர் சைபர் யுத்தம் எனச் சொல்லக் கூடிய கம்ப்யூட்டர் வழி நடத்திடும் போரில் வல்லவராம். இவரை இவருடைய வீட்டுக்குப் பக்கத்தில் வைத்து சுட்டுக் கொன்றார்கள்.

1. முஸ்தபா அஹ்மத் ரோஷானி - இவர் அணுசக்தி விஞ்ஞானி. இவரை ஜனவரி 2012இல் கொலை செய்தார்கள்.

2. ஹஸன் ஷத்தாரி இவரை இந்த வருடம் பெப்ருவரி 2013இல் லெபனானில் வைத்துக் கொலை செய்தார்கள். இவரும் ஓர் அணுசக்தி விஞ்ஞானி.

3. மாஜித் ஷஹ்ரியாரி. இவரும் ஓர் அணுசக்தி விஞ்ஞானி.

4. மசூத் அலி முயம்மதி இவரை ஜனவரி 12, 2010இல் கொலை செய்தார்கள். இவரும் அணு விஞ்ஞானி.

இவர்களைக் கொலை செய்வதற்கு மொசாத் தீவிரவாத அமைப்பை ஈரானிலேயே உருவாக்கி இருக்கின்றது. அதன் பெயர் எம்.இ.கே முஜாத்-இ கல்க் (Moja-aed m-e-kalq) என்பது இதன் முழு பெயர்.

இஸ்லாத்திற்கு எதிராகத் தொடுத்து வரும் போரில் அமெரிக்காவின் உளவு நிறுவனமான CIA மத்திய புலனாய்வு முகவாண்மை, உலகம் முழுவதும் தீவிரவாத அமைப்புகளை உருவாக்கி வருகின்றது. அப்படி ஈரானில் உருவாக்கப் பட்டதே இந்த MEK. இவர்களுக்குப் பணமும் பயிற்சியும் மொசாத் இடமிருந்து கிடைக்கின்றது. கொலைக்களத்தில் 'மொசாத்' தான் முன்னே நிற்கின்றது என்றாலும் இந்த அமைப்பு அமெரிக்காவின் ஏற்பாடுதான் என்கின்றனர் உலகப் புகழ் பெற்ற பத்தி ரிகையாளர் ஹெர்ஸ்மூர். தான் சொல்வது உண்மை என்பதற்கு ஆதாரமாக அமெரிக்காவின் அறிவிப்பு ஒன்றை காட்டுகின்றார். அந்த அறிவிப்பில் அமெரிக்காவின் உளவுத்துறை இந்த அமைப்பை (MEK-ஐ) தனக்காக சர்வதேச தளத்தில் வேலை செய்யும் தீவிரவாத அமைப்பு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (MG 16-31 oct. 2013)

**ஹெர்ஸ்மூர் யார்?**

இந்த ஹர்ஸ் மூர் என்ற பத்திரிகையாளர் 'குவான்டனாமோ' சித்ரவதைக் கூடங்களை உலக மக்களின் பார்வைக்குக் கொண்டு வந்தார். இவர்தான் இப்படியொரு சித்ரவதைக் கூடம் இருப்பதை முதன் முதலில் கண்டு பிடித்தார். அதை வெள்ளை மாளிகையில் தனக்கிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி கண்டு பிடித்தார்.

இந்த சிறைக்கூடத்தைப் பற்றி பல கட்டுரைகளை எழுதினார். எந்தப் பத்திரிகையும் வெளியிடவில்லை. தொடர்ந்து 46 கட்டுரைகளை எழுதினார். அதன் பின்னர் தான் கட்டுரை பத்திரிகைகளில் வழி வெளிவந்தன.

அதன் பின்னர் குவான்டனாமோ சிறைக் கூடங்கள் இன்றுவரை உலகெங்கும் பேசப்பட்டு வருகின்றன. அவை மூடப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்து வருகின்றது.

இன்று அந்த குவான்டனாமோ அமெரிக்காவின் கோர முகத்தை உலகெங்கும் பறை சாற்றி வருகின்றது.

இப்படி அமெரிக்கா உருவாக்கும் தீவிரவாத அமைப்புகள் வழி கொலை செய்த விஞ்ஞானிகள் அல்லாமல் அமெரிக்கா பல விஞ்ஞானிகளைக் கடத்தியும் சென்றிருக்கின்றது. அவர்களைக் கொண்டு இஸ்லாமிய உலகின் விஞ்ஞான வளர்ச்சியைத் திருடிட முயன்று வருகின்றது என்கிறார். பேட்ரிக் காகன் என்ற மற்றொரு பத்திரிகையாளர்.

MGM (*ஆதாரம் :* MG 16-31 oct 2013)

குறிப்பு : காந்த சக்தி குண்டுகளை, Magnetic Bombs-ஐ ஒரு பைக்கில் சென்றபடியே காரில் ஒட்ட வைத்து விடலாம். அந்த குண்டை காரை நோக்கி வீசினால் காரில் ஒட்டிக் கொள்ளும். பின்னர் செல்போன் சிக்னல் வழி வெடிக்கச் செய்கின்றார்கள்.

☐

## நூலரங்கம்



# எது முதலில்?

**நமது** வாழ்வில் எதிர்ப்படும் பிரச்னைகள், பணிகள், செய்ய வேண்டியவை இப்படி எண்ணற்றவற்றை எதிர்கொள்கின்றோம்.

நிச்சயமாக எதை முதலில் செய்ய வேண்டும், எதைப் பின்னால் செய்ய வேண்டும்? என்ற பிரச்னையை நாம் எதிர்கொள்ளவே செய்கின்றோம்.

'Priority, First thing First' என்பவை ஐரோப்பிய உலகில், முன்னேறிவிட்ட நாடுகளில் பெரிய அளவில் விவாதிக்கப் படுகின்றன. முடிவுகள் எடுக்கப்படுகின்றன. களத்தில் செயல்படுத்தப்படுகின்றன.

நிச்சயமாக, இஸ்லாம் என்ற இலட்சியத்தைத் தாங்கி நிற்கின்ற முஸ்லிம் சமுதாயம் எதற்கு முதலிடம், முன்னிடம் தந்திட வேண்டும் என்பதைப் பற்றிய தெளிவான அறிவைப் பெற்றாக வேண்டும். முடிவுகளை எடுத்தாக வேண்டும்.

இந்தப் பெரும் பணியை டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி அவர்கள் மிகவும் எளிமைப் படுத்தி தருகின்றார்கள்.

ஒவ்வொரு அத்தியாயத்திலும் ஒரு தலைப்பை எடுத்துக் கொண்டு எதற்கு நீங்கள் முதலிடம் தந்திட வேண்டும் என்பனவற்றை நீட்டி முழக்காமலும் விளக்கங்களை சுருக்காமலும் பாடம் சொல்லித் தருகின்றார்கள்.

நாம் எதற்கு முதலிடம் தந்திட வேண்டும் என்பதற்கான ஆதாரங்களை அல்லாஹ்வின் வாக்கைக் கொண்டும், அறுதி நபியின் அழகிய முன்மாதிரியைக் கொண்டும் நிறுவுகின்றார். முடிவில் இறைவனும், அவன் தூதரும் ஒவ்வொரு விவகாரத்திலும் எதற்கு முன்னுரிமை தந்தார்கள் என்பதைச் சொல்லி விடுகின்றார். எதற்கு முதலிடம் என்பதைத் தேடிடும் முயற்சியில் நாம் ஒரு நூலைப் படித்துக் கொண்டிருக்கின்றோம் என்ற நினைப்பே வருவதில்லை. அந்தளவுக்கு எளிமையும், நளினமும் விறுவிறுப்பும் நிறைந்த விவாதம். அதனை இனிய, எளிய தமிழில் தந்திருக்கின்றார்கள் பேராசிரியர் இல்யாஸ் ரியாஜி அவர்கள்.

இந்த நூல் வைகறை வெளிச்சம் மாத இதழில் தொடராக வந்தது.

தொடர் முடிந்த பின் வெளியிடலாம் என்ற எங்கள் திட்டத்தைத் தவிடு பொடியாக்கினார்கள் வாசகர்கள். வைகறையில் வந்த வரைக்கும் நூலாக தாருங்கள். சில பிரதிகளை வாங்கி எங்கள் திருமண வைபவங் களில் வருவோருக்கு பரிசு களாகத் தரவிருக்கின்றோம் எனக் கூறி னார்கள்.




இது எங்கள் முயற்சியை வேகப்படுத்தியது. அதுவே உங்கள் கரங்களில் நூலாகத் திகழ்கின்றது.

இது போன்று மூல நூலின் இதரப் பகுதிகள் தொடராக வந்து கொண்டிருக்கின்றன வைகறை வெளிச்சம் மாத இதழில்.

வாசகர்கள் அதனை தொடர்ந்து படிக்க வேண்டு கின்றோம்.

எங்களது இஸ்லாமிய பணியும், இலக்கியப் பணியும் தொடர்கின்றது - அல்ஹம்துலில்லாஹ்!

உங்கள் கருத்துக்களை அறியத் தாருங்கள். நன்றியுடையோராய் இருப்போம், இன்ஷா அல்லாஹ்!

**மு.குலாம் முஹம்மது**

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்....

தலையங்கம்

# அரசியல் இடைவெளி

**நான்கு** மாநில தேர்தல்கள், பளிச்சென சொன்ன செய்தி, காங்கிரசுக்கு மாற்று வேண்டும் என்று மட்டுமல்ல, பாரதீய ஜனதா கட்சியும் வேண்டாம் என்பதுதான்.

டெல்லியில் வென்ற ஆம் ஆத்மி கட்சிக்கு ஒரு பெரும் பின்னணி இல்லை. பெரிய வரலாறு கூட இல்லை. இருந்தாலும் பெரிய அளவில் வெற்றியை ஈட்டி இருக்கின்றது. காரணம், இந்த இரண்டு கட்சிகளுக்கும் மாற்று வேண்டும் என்பது மக்களின் தெளிவான முடிவு.

ஆனால், மாற்று வலுவானதாக இல்லை. காரணம், ஆம் ஆத்மி கட்சி இன்னும் ஓரிரு மாநிலங்களில் கூட துளிர்விடவில்லை.

கொள்கை அளவில், ஆம் ஆத்மி கட்சியும் சொல்லிக் கொள்ளும் அளவில் எதையும் இன்றளவும் பிரகடனப்படுத்திடவில்லை. லஞ்ச ஒழிப்பு என்ற பிரச்னையைத்தான் பிரதானமாகப் பேசுகின்றது. இவையெல்லாம் சொல்லும் சேதி, இந்தியாவில் ஆட்சியைப் பொருத்தவரை ஒரு பெரும் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது என்பதுதான்.

சீரியதொரு பொருளாதாரக் கொள்கையாலும், அதன் யதார்த்தமான செயல்பாட்டினாலும்தான் மக்களை வதைக்கும் விலைவாசி, பண வீக்கம் இவற்றை வெல்ல முடியும். பாசிசமோ, மதச்சார்பின்மையோ மக்களைக் காப்பாற்றிடாது. எப்படித்தான் மறைத்து, மூடி, தடயங்கள் இல்லாமல் லஞ்சம் வாங்கினாலும், படைத்தவனின் பார்வையிலிருந்து தப்பித்திட இயலாது என்ற உள்ளுணர்வு, அச்சம் மட்டுமே இன்று இந்தியாவில் அங்கிங் கெனாதபடி எங்கும் வியாபித்து நிற்கும் லஞ்சத்தை ஒழிக்க இயலும்.

“ஓர் ஆட்டுக்குட்டி எனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதியில் இறந்து கிடந்தால் அதற்கும் நான் இறைவனிடம் பதில் சொல்லியாக வேண்டும்” என்று பிரகடனப்படுத்திய ஆட்சியாளரை இஸ்லாத்தின் வரலாற்றில் தான் மனித இனம் சந்தித்திருக்கின்றது.

ஆனால், இன்று லட்சக்கணக்கான விவசாயிகள் வாங்கிய வட்டிக் கடனைத் திருப்பித் தந்திட இயலாமல் மரணத்தைச் சந்தித்துக் கொண் டிருக்கின்றார்கள். பொறுப்பேற்பார் யாருமில்லை. 150 மாவட்டங்களில்

பட்டினிச் சாவுகள் இன்னும் அந்த மக்களுக்கு உணவு சென்று சேர்ந்திட வில்லை.

நாடு சுதந்திரமடைந்து 66 ஆண்டுகளாகியும் எல்லாக் குடிமக்களுக்கும் அடிப்படை வாழ்வாதாரம் கிடைக்கவில்லை. இப்போதுதான் குளறுபடி யான உணவு பெறும் உரிமைச் சட்டம் என்ற நிலைக்கு வந்திருக்கின்றது. அது காகிதப் பூ மணக்காது

இஸ்லாமிய ஆட்சியின் மிகச் சாதாரணமான அடிப்படையே குடிமக்கள் அனைவருக்கும் நிலம், நிறம், மதம் அனைத்தையும் கடந்து, உணவு, உடை, உறையுள் மூன்றையும் அமைத்துத் தருவதுதான்.

கல்வி முதற்கொண்டு அனைத்தையும் இலவசமாக மக்கள் சேவை எனச் செய்து தந்த ஆட்சி இஸ்லாமிய ஆட்சி.

இந்த உலகிலும், இந்தியாவிலும் அரசுகளின் பொருளாதாரக் கொள்கைகளை வழிநடத்தி வந்த, வட்டி முறை பலகோடி மக்களைக் கொன்றுவிட்டு தானும் மடிந்து வருகின்றது.

இஸ்லாமியப் பொருளாதார முறையினால் மட்டுமே உலகை மீட்க முடியும் என்ற பிரகடனம் உலகெங்கும் கேட்கின்றது.

இந்த இஸ்லாமிய ஆட்சி முறையும் அதன் பலாபலன்களையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களை இந்த ஆட்சியை ஏற்றிடச் செய்யலாம். அதற்காக உழைத்திட செய்திடலாம். அதன் மூலம் இந்திய அரசியலில் ஏற்பட்டுள்ள இடைவெளியை நிரப்பலாம்.

மேலே நாம் கோடிட்டுக் காட்டிய வழிமுறைகள் இறைவனால் வழங்கப்பெற்றது என்பதனால் அவனையும், அவன் வகுத்து வழங்கிய வாழ்க்கை நெறியையும் பிரச்சாரம் செய்வது, விளக்கிச் சொல்வது ஏற்றிடச் செய்வது இவற்றிலிருந்து நமது முயற்சிகளைத் தொடங்குவோம்.

சிறந்த திட்டங்கள் உழைப்பு இவற்றின் வழி நாம், இதனை செய்து சாதிப்போம்.

இது இறைவனின் நாட்டம். நாம் செய்திட வேண்டும் என இறைவன் நமக்குக் கட்டளை இட்டது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

இறைவன் கூறுகின்றான்: நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக்கின்றான். ஆகவே, (நபியே) நாம் உமக்கு வஹீ மூலம் அறிவிப்பதும் இப்ராஹீமுக்கும் மூஸாவுக்கும் ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால், நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலைநிறுத்துங்கள். நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள். (அல்குர்ஆன் 42:13)

# 4 மாநில தேர்தல் முடிவுகளும் 2014 தேர்தலும்

**மோடி** அலை அனைத்தையும் அள்ளிக் கொண்டு செல்கின்றது. இப்படி ஒரு மோசடி பிரச்சாரம் நாடெங்கும் செய்யப்படுகின்றது.

மோடி அதிகமாகப் பிரச்சாரம் செய்தது டெல்லியில்தான். அங்கே அவர் நடத்திய அல்லது அவருக்காக ஆப்கோ இன்டர்நேஷனல் என்ற நிறுவனம் கோடி களைக் கொட்டி ஏற்பாடு செய்த கூட்டங் களில் கூடினார்கள் மக்கள். அதைக் காட்டி எங்கும் மோடி என்றார்கள்.

ஆனால் தேர்தல் முடிவுகள் மோடியின் முகத்தில் கரியை வாரிப் பூசியது.

ஆமாம், நேற்று தொடங்கிய ஆம் ஆத்மி கட்சி 125 வருடம் அயராமல் உழைப்பதாகப் பீற்றப்படும் சங்கப் பரிவாரத்தையும் அதன் போலி பீற்றலையும் தூக்கி வீசிவிட்டது.

நாடாளுமன்றத்தையும் வெல்லப் போகின்றேன் என மார்தட்டும் முன்னாள் டீ வியாபாரி 70 சட்டமன்ற இடங்களில் 35 இடங்களைக் கூட வென்றிட இயலவில்லை. இவர் வானத்தில் ஏறுவாராம்; வைகுண் டத்தைக் காட்டுவோம். நம்புங்கள் என் கின்றது அவரை விளம்பரப்படுத்தும் ஆப்கோ இன்டர்நேஷனல்.

டெல்லியில் முதலமைச்சர் பதவிக்கு மோடிதான் நிற்கின்றார் என்றொரு பிரம்மை ஏற்படுத்தப்பட்டது.

மட்டுமல்ல, தின இதழ்களில் மோடி யின் படமே முதல் பக்க விளம்பரமாகத் தரப்பட்டது. மோடியாகக் காட்டப்படும் பாரதீய ஜனதா கட்சி ஜெயித்தால் டெல்லிக்கு முதலமைச்சராகக் காட்டப்பட வேண்டிய ஹர்ஷ்வர்தன் ஒரு மூலைக்குத் தள்ளப்பட்டார்.

மோடி எந்த அளவுக்கு முன்னிலைப் படுத்தப்பட்டார் என்றால், பாரதீய ஜனதா கட்சியின் தேசிய தலைவர்களாகிய சுஷ்மா சுவராஜ், அருண் ஜேத்லி இவர்களெல்லாம் கூட ஓரங்கட்டப்பட்டார்கள், தேர்தல் பிரச்சாரத்தின் போது.

ஆகவே, டெல்லியில் பாரதீய ஜனதா கட்சியின் தோல்வி மோடியின் தனிப்பட்ட தோல்வி.

15 ஆண்டுகள் டெல்லியைத் தொடர்ந்து ஆட்சி செய்து கொண்டிருந்த ஷீலா தீட்சித் மத்தியில் ஆட்சி செய்யும் காங்கிரஸ் ஆட்சியின் தவறுகளையும் தலையில் சுமக்க வேண்டியதாயிற்று.

அந்த வெறுப்பு ஓட்டைப் பெற்று கூட ஜெயிக்க முடியவில்லை மோடி கும்பலால்.

இராஜஸ்தானில் காங்கிரஸ் வெறுப்பே பாரதீய ஜனதா கட்சிக்குப் பயன்பட்டது. அங்கேயும் ஒரு ஆம் ஆத்மி கட்சி இல்லை.

மத்திய பிரதேசத்திலும் இதுவே காரணம். ஆக, மோடி அலை என்றொன்று இல்லை.

**நம்மை ஏமாற்றிட வேண்டாம்**

“இப்படி நம்மை நாமே ஏமாற்றிட வேண்டாம்.”

ஆமாம், மோடி என்றொரு மாயை கட்டியெழுப்பும் ஆப்கோ இன்டர்நேஷனல், அவ்வளவு எளிதாக மோடியை விட்டு விடாது. காரணம், அது இதற்காக வாங்கியிருக்கும் சம்பளம் லட்சக்கணக்கான கோடிகள். அதனால் அது புதிய உத்திகளை மிகையாகக் கையாளும்.

அந்தப் புதிய பிரச்சார உத்திகளுக்கு காங்கிரஸ் கட்சியின் தவறுகள் தாராளமாக உதவும்.

மட்டுமல்லாமல், உத்திர பிரதேசத்தில், மோடியின் அடியாள் அமித்ஷா மேற்கொண்ட உத்தி. வகுப்புக் கலவரம் என்பதே. அது அங்கே சிறப்பாக வேலை செய்திருக்கின்றது.

இதே உத்தியை நாட்டின் இதர பகுதிகளுக்குப் பரவச் செய்திட எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு மேல் இந்த ஜனநாயகம் ஒரு கண் கட்டு வித்தை. இதில் எந்த முரடனும் ஆட்சியில் அமர முடியும்.

எந்த பாச்சாவும் பலிக்கவில்லை என்றால் மோடியின் உருக்கு ஆபத்து என்றொரு பயங்கரப் பிரச்சாரத்தைச் செய்திட, ஏதேனும் பயங்கர நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படலாம்.

இதற்கான சாத்தியங்கள் அதிகம். ஏனெனில், மோடி தன்னைப் பிரதமராக்கிட வாடகைக்கு அமர்த்தியிருக்கும் நிறுவனம் ஆப்கோ இன்டர்நேஷனல், ஐந்து யூதர்களை இயக்குநர்களாகக் கொண்டது. இவர்கள் தீவிரவாதத்தின் மூலம் நாடு பிடிப்பதில் கைதேர்ந்தவர்கள்.

இந்த ஐந்து யூதர்களின் மூளையில் மோடிக்காக உதிக்கும் தீவிரவாத செயல்களை நமது நாட்டில் செயல்படுத்திட சங்கப் பரிவாரம் காத்துக் கிடக்கின்றது என்பது மட்டுமல்ல இதனைச் செய்து சாதித்திருக்கின்றார்கள். இதற்கு நாட்டில் இவர்கள் பல்வேறு இடங்களிலும் வெடிக்கச் செய்த குண்டுவெடிப்புகள் சாட்சி.

மும்பை தாக்குதல் கர்கரே கொலை இவர்களின் செயல்திறத்தின் ஒப்பற்ற சாட்சி. ஆகவே, நாட்டு மக்கள் அதீத புத்திசாலித்தனத்துடன் நடந்தாலன்றி எதிர்வரவிருக்கும் நாசங்களைத் தவிர்த்திட இயலாது.

MGM


இன்ஷா அல்லாஹ்...
விரைவில் வெளிவருகிறது!

ஷஹீத் செய்யித் குத்துப் அவர்களின்

இஸ்லாமிய எழுச்சியின்
மைல் கற்கள்

★ எகிப்தில் இஸ்லாமிய எழுச்சிக்கு வித்திட்ட நூல்!

★ தலைமுறை தாண்டியும் புரட்சிகளை விளைவிக்கும் நூல்!

★ பல லட்சம் போராளிகளை உருவாக்கிய நூல்!

மு.குலாம் முஹம்மது அவர்களின் விறுவிறுப்பான மொழிநடையில்

வேர்கள் வெளியீட்டகம்
52/1, மண்ணடி தெரு, 4வது தளம், மண்ணடி,
சென்னை-1. Tel: 044-45566909



இறைவனின் அழகிய வழிகாட்டுதல்
அனைவருக்கும்!

மனிதன் இந்த உலகில்
எப்படி வாழ வேண்டும்?

இந்த வினாவிற்கு முழுமையான விடையே திருக்குர்ஆன். இதனை அறிந்திட வேண்டியது நமது கடமை.

அறிந்திட விரும்புவோர் இலவசமாக திருக்குர்ஆன் தமிழ்மொழிபெயர்ப்பைப் பெற்றிட கீழ்க்காணும் முகவரிக்கு எழுதுங்கள்.

தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்
52/1, மண்ணடி தெரு,
கோனிகா கலர் லேப் பில்டிங்
4வது மாடி, அறை எண் 7,
மண்ணடி, சென்னை-1.

இந்த இலவச விநியோகம்
முஸ்லிம்களுக்கு அல்ல.

கவர் ஸ்டோரி

# எகிப்தில் தொடரும் தடைகள்



**இஸ்லாத்தை** இந்த உலகில் நிலைபெற செய்திட வேண்டும். இந்த உலகை ஆளும் கொள்கையாக இஸ்லாத்தை ஆக்கிட வேண்டும்.

அதன் மூலம் உலக மக்கள், அனைவரும் நீதியையும் அதன் நிம்மதியையும் பெற்றிட வேண்டும் என்பது இஸ்லாமிய இயக்கங்களின் இலட்சியம்.

இதுவே நபிமார்களின் வழியும் வாழ்வும் எனக் கூறுகின்றது மேலே உள்ள வாசகம்.

அறுதி நபி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் எண்ணற்ற இடர்களை எதிர் கொண்டு அவற்றையெல்லாம் வென்று நிலைநாட்டிய மார்க்கம் இஸ்லாம். 1400 ஆண்டுகாலம் உலகாண்ட ஆளுமையையும் அனுபவத்தையும் கொண்டது. எம்பெருமானார் (ஸல்) அவர்கள் வாழ்வின் அனைத்து துறைகளுக்கும் வழிகாட்டிய ஒளிவிளக்கு. அதில் அரசியலும் நீதிமிக்க ஆட்சியும் குன்றில் மேலிட்ட விளக்குகள்.

இல்லையேல் இந்த உலகம் நீதிநெறி மிக்க ஆட்சி என்றால் என்ன என்பதை அறியாமலே போய் இருக்கும்.

அவர்கள் அகிலத்து மக்கள் அனைவரையும் நகரத்திலிருந்து மீட்டு சொர்க்கத்துக்குச் சொந்தக்காரர்களாக ஆக்கிட வந்தவர்கள்.

அத்தோடு மட்டுமல்ல, இந்த உலகிலும் நீதியை - நிம்மதியை ஏற்படுத்திடவும் செய்தார்கள்.

குழந்தை கருவுறுவதிலிருந்து அது வளர்ந்து, ஆளாகி, கபர்ஸ்தான் செல்லும் வரை வாழ்வின் ஒவ்வொரு அசைவையும் எப்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கு வழிகாட்டினார்கள்.

அங்காடியில் அளவும் நிறையும் எப்படி இருக்க வேண்டும் என்பதைச் சொல்லித் தந்து அதைக் கண்காணிக்கும் அதிகாரியாகவும் அமர்ந்தார்கள்.

வட்டியை ஒழித்தார்கள்; அதன் மூலம் பலநூறு தலைமுறையை சுரண்டலிலிருந்தும், விரக்தி, தற்கொலை ஆகியவற்றிலிருந்தும் காப்பாற்றினார்கள்.

ஏனைய கொள்கைகள் எல்லாம் வட்டி இன்றேல் வாழ்க்கை இல்லை எனப் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்தபோது, வட்டி இல்லாமல் ஒரு பொருளாதார முறையை எப்படி நிலைநிறுத்திட இயலும் என்பதைச் செயல்முறை செய்து காட்டித் தந்தவர்கள் எம்பெருமானார் (ஸல்) அவர்கள்.

இஸ்லாமிய பொருளாதார முறை (Islamic Economic Order) இன்று உலகில் படிப்படியாக வென்று வருகின்றது.

இவற்றையெல்லாம் செய்து காட்டுவதற்கே ஏகத்துவத்தை (தவ்ஹீதை) நிலைநாட்டுவது என்று பொருள்.

தன் திருத்தூதர் வழி செய்து காட்டி விட்டு இறைவன் நமக்கு இப்படிக் கட்டளை இட்டான்:

“இதே முறையில் நாம் உங்களை ஒரு நடுநிலையான சமுதாயமாக ஆக்கினோம். நீங்கள் மற்ற மனிதர்களுக்கு சாட்சியாளர்களாக இருப்பதற்காகவும் ரசூல் உங்கள் மீது சாட்சியாக இருப்பதற்காகவும்.” (அல் குர்ஆன் 2:143)

அதாவது, எப்படி பெருமானார் (ஸல்) அவர்கள், இஸ்லாத்தை பிரச்சாரம் செய்வதிலும் அதனை நிலைநாட்டிக் காட்டுவதிலும் சாட்சியாகவும் முன்மாதிரியாகவும் திகழ்ந்தார்களோ அதே போன்ற நாடும்

இஸ்லாத்தை பிரச்சாரம் செய்வதில் நிலை நாட்டுவதில் முன்மாதிரியாக இருந்திட வேண்டும்.

இஸ்லாத்தை நிலைநாட்டுவது இங்கே இலட்சியம்.

**முஸ்லிம் சகோதரத்துவம்**

இந்த இலட்சியத்தை நிலைநாட்டிடவே இமாம் ஹஸன் அல் பன்னா (ஷஹீத்) அவர்கள் 1928ல் இஹ்வானுல் முஸ்லிமூன் என்ற இயக்கத்தைக் கட்டியெழுப்பினார்கள். இதனை முஸ்லிம் சகோதரத்துவ இயக்கம். (Muslim Brotherhood) என்று அழைக் கின்றார்கள். இது எகிப்தில் இஸ்லாமிய நகரில் தொடங்கப் பெற்று உலகெங்கும் விரிந்து வியாபித்து செயல்பட்டு வருகின்றது.

இவர்களுக்கு அகிலமெல்லாம் கிளைகள் இருக்கின்றன எனச் சொல்லிட இயலாது. ஆனால், இந்த இலட்சியம் உலக மக்களின் நாடி நரம்பெல்லாம் ஊடுருவி பெருக்கெடுத்து ஓடுகின்றது. இறைவழி காட்டுதலில் யதார்த்தங்கள் இப்படித்தான் உலகை வெற்றி கொள்ளும். அல்ஹம்து லில்லாஹ்!

1928 முதல் 2013 முடிய 85 ஆண்டுகள் இந்த இயக்கம் இயங்கியுள்ளது. இதில் 57 ஆண்டுகளாக தடை செய்யப்பட்ட இயக்க மாகவே இருந்திருக்கின்றது. அதன் உறுப்பி னர்கள் லட்சக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

ஒவ்வொரு முறை தடை செய்யப்படும் முன்பும் தீவிரவாதிகள் என்ற பட்டத்தைத் தவறாமல் சூட்டி விடுவார்கள். அதையே இப்போதும் செய்திருக்கின்றார்கள். நம்ம ஊர் 'சிமி' கதைதான்.

**தடைகளின் வரலாறு**

1. **முதல்தடை:** 1920 முதலே யூதர்கள், பாலஸ்தீனில் தங்கள் தீவிரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டார்கள்.

பாலஸ்தீனில் இஸ்ஸத்தின் அல் கஸ்ஸாம் அவர்கள் 1936-களில் யூதர்களின் திவிர வாதத்தை எதிர்த்துப் போர் புரிந்தார்கள். அப்போது இஸ்ஸத்தின் அல் கஸம் அவர் களின் அணியில் நின்ற முஜாஹிதீன்களுக்கு உதவி செய்தார்கள் இஹ்வான்கள் - என்றொரு குற்றச்சாட்டு.

பாலஸ்தீனில் தீவிரவாதத்தையும் பயங்கர படுகொலைகளையும் செய்து கொண்டிருந்த யூதர்களுக்கு முழு அளவில் உதவி செய்தார்கள் ஆங்கிலேயர்கள். அவர்களை இஹ்வானுல் முஸ்லிமூன் இயக் கத்தவர்கள் - யூதர்களை எதிர்த்து நிற்கும் இஸ்ஸத்தின் அல் கஸ்ஸாம் அவர்களுக்கு இஹ்வான்கள் உதவி செய்வதைப் பொறுத்துக் கொள்ள முடியாதவர்களாக இருந்தார்கள். அவர்கள் தந்த அழுத்தங்களின் காரணமாக, அப்போதைய எகிப்திய அரசு இஹ்வான் களைக் கைது செய்தது. அவர்களை இயங்கிட விடாமல் தடுத்தது. இயக்கத் தடையைச் சந்தித்தது.

**2. ஹாஜி அமீன் அல் ஹுஸைன்:**

பாலஸ்தீனில் தீவிரவாதச் செயல்களின் வழி முஸ்லிம்களைக் கொலை செய்துவிட்டு அவர்களின் வீடுகளை ஆக்கிரமித்துக் கொண்டார்கள் யூதர்கள். இதற்கெதிராக ஹாஜி அமீன் அல் ஹுஸைன் அவர்கள் அப்போதைய பாலஸ்தீன முஃப்தி அவர்கள் பல முயற்சிகளை மேற்கொண்டார்கள். அந்த முயற்சிகளுக்கும் அல் இஹ்வான் அல் முஸ்லிமூன் இயக்கத்தவர்கள் உதவி செய் தார்கள். இதை முன்னிறுத்தி பாலஸ்தீனில் நடக்கும் தீவிரவாதத்திற்கு உதவி செய்ததாக இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தைத் தடை செய்தார்கள்.

**3. இரண்டாம் உலகப் போர்**

இரண்டாம் உலகப் போரின் போது ஜெர்மனி ஆங்கிலேய நாடுகளை எதிர்ப் பதில் உறுதியாக இருந்தது. அதே நேரத்தில் யூதர்களின் கீழறுப்பு வேலைகளையும் அது எதிர்த்தது.

அதே நேரத்தில் பிரிட்டன் எகிப்தை (அதாவது முஸ்லிம் சகோதரத்துவ இயக் கத்தின் பிறப்பிடத்தை) தன் கைப்பிடிக்குள் வைத்துக் கொண்டு தன் இஷ்டத்திற்கு ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. பிரிட் டனின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள மொத்த எகிப்தும் கிளர்ந்து எழுந்தது. பிரிட்டனுக்கு எதிரான இந்தப் போரில் இஹ்வானுல் முஸ்லிமூன் இயக் கத்தைச் சார்ந்தவர்களும் கலந்து கொண் டார்கள். அப்போது பிரிட்டனுக்கு எதிரான நாடுகளுள் ஒன்றாக ஜெர்மானிய நாடு இருந் ததால், மொத்த எகிப்திய மக்களும் ஜெர்மனி யின் பக்கம் நின்றார்கள். இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தவர்கள் இதில் ஜெர்மானியை ஆதரித்தார்கள் என்றாலும் அதன் எல்லாக் கொள்கைகளையும் ஆதரிக்கவில்லை.

*இது பிரிட்டனின் கோபத்தை இன்னும் அதிகப்படுத்தியது. அதனால் அப்போதைய எகிப்திய எடுபிடிகளைக் கொண்டு ஓர் தடையை பிரகடனப்படுத்தினார்கள். இரண்டாம் உலகப் போரில் பிரிட்டனுக்கு எதிரான அணியில், ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் இருந்தன.*

**4. இஸ்ரேல்**

*1948-இல் இஸ்ரேல் என்ற நாடு உருவாக்கப்பட்டது. இதை இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தவர்கள் எதிர்த்தார்கள். இஸ்ரேலுக்கு எதிரான போரில் களமிறங்கிப் போராடினார்கள். இஸ்ரேல் என்ற நாட்டை முற்றாக இந்த மண்ணிலிருந்து துடைத் தெறிந்திட மூன்றே மணி நேரங்கள் தாம் இருந்தன. அதற்குள் ஆங்கிலேயர்கள் தந்த நெருக்கடிகள் தாளாமல், மீண்டும் இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தைத் தடை செய்தார்கள்.*

*அத்தனை இஹ்வான்களையும் கைது செய்து, சித்ரவதை செய்தார்கள். பலரைக் கொலை செய்தார்கள். (எனது மொழியாக்கத்தில் வெளிவந்துள்ள 'இஸ்லாமியக் கல்வி' என்ற நூலில் இது விரிவாகத் தரப்பட்டுள்ளது.)*

**5. இயக்கத் தலைவர் கொலை**

*1949 முதல் இஸ்ரேல் நாட்டைச் சார்ந்தவர்கள் அதாவது யூதர்கள் இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தைக் கண்டு தான் அதிகமாக அச்சப்படுகின்றார்கள். ஏனெனில், 1948-ல் நடந்த போரில் அவர்கள் தோல்வியை இஹ்வான்களின் கைகளில்தாம் தழுவினார்கள். இதனால் யூதர்கள் பிரிட்டன் என்ற ஆங்கில நாட்டிற்கும்,அப்போது வளர்ந்து வந்து கொண்டிருந்த வல்லரசு அமெரிக்காவுக்கு அதிக அழுத்தங்களைத் தந்தார்கள்.*

*இந்த அழுத்தங்கள் தாளாமல் இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தினைத் தொடங்கியவரும், தொடர்ந்து தீரமுடன் நடத்தியவருமான ஹசன் அல் பன்னாவைக் கொலை செய்து விடுவது என முடிவெடுத்தார்கள். இந்தக் கொலையை பிப்ருவரி 12, 1949-இல் செய்தார்கள்.*

*இமாம் ஹசன் அல் பன்னா அவர்களைக் கொலை செய்தால் நாடு கொந்தளிக்கும் என்பதை நன்றாக அறிந்திருந்தார்கள். அதனால், இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தைத் தடைசெய்தார்கள்.*

**6. 1952 கிளர்ச்சி**

*1952-இல் எகிப்தை ஆட்சி செய்து கொண்டிருந்த மன்னர் பாரூக்குக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள். காரணம், எகிப்தில் தான் ஆட்சியாளராக இருந்து கொண்டே, ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை அனுமதித்துக் கொண்டிருந்தார்.*

*அத்தோடு 1948-இல் யூதர்களோடு நடந்த போரில் தீர்க்கமுடன் போராடிய இஹ்வான்களை முழு அளவில் செயல்பட விடாமல் செய்ததோடு, இஸ்ரேலை முற்றாக அழிப்பதிலிருந்து காப்பாற்றினார்.*

> CIA என்ற அமெரிக்காவின் மத்திய உளவுத்துறை ஜெமால் அப்துல் நாசரை கொலை செய்ய முயற்சிகள் செய்தார்கள். ஆனால், பழியை இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் மீது போட் டார்கள். தடை செய்தார்கள். அதன் முக்கிய தலைவர்களை வரிசைப்படுத்திக் கொலை செய்தார்கள்.

*இதனால், 'Free Officers' சுதந்திரமான அதிகாரிகள் என்ற அமைப்பு மன்னர் பாரூக்கை நாட்டை விட்டே துரத்தினார்கள். இந்த அமைப்பு எகிப்தின் இராணுவ அதிகாரிகளால் உருவாக்கப்பட்ட அமைப்பு. இதில் அப்போதைய இராணுவ தளபதிகளில் ஒருவரான ஜெமால் அப்துல் நாசர் என்பவரும் முஹம்மத் நாகிப் என்பவருந் தான் முன்னின்று நடத்தினார்கள்.*

*ஆனால், இந்தப் பழியை இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் மேல் போட்டார்கள். இஹ்வான்கள் அந்த ஆட்சிக்*

கவிழ்ப்பில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வில்லை. ஆனால் 150 ஆண்டுகால மன்னராட்சி முடிவுக்கு வந்ததை வரவேற்றார்கள்.

இதனை வைத்துக் கொண்டு மொத்தப் பழியையும் இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் மேல் போட்டார்கள். இயக்கத்தைத் தடை செய்தார்கள்.

7. 1953 – மன்னராட்சி ஒழிப்பு

மன்னர் நாட்டை விட்டு வெளியேறியதும் மன்னரின் மகன் ஆட்சியை முஹம்மத் நகீபும் ஜெமால் அப்துல் நாசரும்தான் நடத்தினார்கள். ஆனால், இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் மீதிருந்த தடையை அகற்றினார்கள்.

ஆனால், இஃவான்கள் மன்னராட்சியை முடிவுக்குக் கொண்டு வருவதாகக் கூறியவர்கள் மீண்டும் மன்னராட்சியையே கொண்டு வந்ததை எதிர்த்தார்கள். மன்னராட்சிக்குப் பின் ஒளிந்து கொண்டு இராணுவ அதிகாரிகள் ஆட்சி செய்வதையும் கடிந்தார்கள்.

இதனால் 1953-இல் மன்னராட்சி ஒழிக்கப்பட்டது. ஜெமால் அப்துல் நாசர் ஆட்சியைப் பிடித்தார். இஃவான்களை ஆட்சிப் பொறுப்பில் பங்கேற்க அழைத்தார். ஆனால், இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் அமைச்சரவையில் பங்கெடுத்துக் கொள்ள மறுத்து விட்டனர்.

8. 1954

1954-இல் CIA என்ற அமெரிக்காவின் மத்திய உளவுத்துறை ஜெமால் அப்துல் நாசரை கொலை செய்ய முயற்சிகள் செய்தார்கள். ஆனால், பழியை இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் மீது போட்டனர் அமெரிக்கர்கள். அதை நம்பிய ஜெமால் அப்துல் நாசர், இஃவான்களின் இயக்கத்தைத் தன் ஆட்சியின் மூலம் தடை செய்தார். அதன் முக்கிய தலைவர்களை வரிசைப் படுத்திக் கொலை செய்தார்கள். அப்துல் காதிர் அவ்தா, செய்யித் குதுப் (1966) ஆகியோர் ஷஹீதாக்கப்பட்டார்கள். கைதுகளும் சித்ரவதைகளும் தொடர்ந்தன. முடிவில் எல்லா வரம்புகளையும் மீறி மார்க்க அறிஞர்களையும் இஸ்லாமிய இயக்கத்தவர்களையும் கொலை செய்த ஜெமால் அப்துல் நாசர் கொலை செய்யப்பட்டார்.

இப்போதும் பழி இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் மீது போடப்பட்டது. தொடர்ந்தன சித்ரவதைகள்.

9. 1970 – இஃவான்கள் விடுதலை

ஆனால், 1970-இல் எகிப்தின் ஆட்சியில் அமர்ந்த, அன்வர் சதாத் இஃவான்களை கொஞ்சம் கொஞ்சமாக சிறையிலிருந்து விடுவித்தார். ஏனெனில், கம்யூனிஸ்ட்டுகள் பொதுவுடைமைக் கட்சியைச் சார்ந்தவர்கள் அங்கே கால் பதித்திருந்தார்கள். அவர்களைக் கொள்கை ரீதியாகவும், அறிவு ரீதியாகவும் எதிர்கொள்ள வேண்டியதிருந்தது. அந்த அறிவு பலம் இஃவான்களுக்கே இருந்தது.

10. 1979 – இஸ்ரேலோடு ஒப்பந்தம்

ஆனால், 1979இல் அன்வர் சதாத் யூதர்களோடு அதாவது இஸ்ரேல் நாட்டோடு ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டார். இதனால் ஆத்திரமடைந்தார்கள் மக்கள். இந்தப் பின்னணியில் அன்வர் சதாத் கொலை செய்யப்பட்டார். அன்வர் சதாத்தை கொலை செய்தது காலித் இஸ்தான்பூலி என்பவர் தான். இவர் 'தன்ஸீமி அல் ஜிஹாத்' என அறியப்பட்டவர். ஆனால், பழி இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தின் மேல் போட்டார்கள். கண்ணை மூடிக் கொண்டு இயக்கத்தைத் தடை செய்தார்கள்.

இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் கைது செய்யப்படுவதைப் பார்த்த தன்ஸீமி அல் ஜிஹாத் என்ற இயக்கத்தைச் சார்ந்தவர்கள் அன்வர் சதாத்தை கொலை செய்தது தாங்கள்தாம் என்பதை அறிவித்தார்கள். ஆனால், பழியை இஃவானுல் முஸ்லிமூன் இயக்கத்தைச் சார்ந்தவர்களே சுமக்க வேண்டியதாயிற்று. தடை தொடர்ந்தது.

இது 2010-இல் ஏற்பட்ட மக்கள் எழுச்சி வரை தொடர்ந்தது. இந்த எழுச்சிக்குப் பின்னரே தடை நீக்கப்பட்டது.

11. 2013 – மீண்டும் தடை

2013-இல் மீண்டும் தடையைச் சந்தித்திருக்கின்றது. அந்த தகவல்களை இங்கே தந்திருக்கின்றோம்.

□

# காங்கிரசின் பம்மாத்து

## வகுப்புவாத வன்முறை தடுப்புச் சட்டம்

(Anti Communal Violence Bill) இதன் முழுப் பெயர். Prevention of Communal and Targetted Violence, (Access to Justice and reparations Bill 2011.)

இந்த மசோதாவை டிசம்பர் 5 மாதம் முதல் டிசம்பர் 17 வரை (2013) நடந்த குளிர் கால நாடாளுமன்ற கூட்டத் தொடரில் கொண்டு வருவதாக அறிவிப்புகளை அவிழ்த்து விட்டது, மெலிந்து கொண்டிருக்கும் காங்கிரஸ் அரசு.

இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டால் மீரட்களும், மும்பைகளும், பாகல்பூர்களும், குஜராத்துகளும், அஸாம்களும், முசாபர் நகரங்களும் நடக்க மாட்டா என நம்பிட எவரும் தயாராக இல்லை. மாறாக, எந்தச் சட்டம் வந்தாலும் பாசிசம் தன் படுகொலை களைச் செய்யவே செய்யும். அரசும், அரசு இயந்திரங்களும் பல்லிளித்து நிற்கும். நீதிமன்றங்களே கூட பாசிசத்திற்கு பல்லவி பாடும் என்பதையெல்லாம் கடந்த 65 ஆண்டு களாக நாம் நன்றாக அறிவோம். அந்த அளவுக்கு நாடு பாசிசத்தின் பிடிக்குள் சிக்கிக் கொண் டிருக்கின்றது.

என்றாலும் சங்கப் பரிவாரமும் அதன் துணை அமைப்புகளும் நாளும் செய்து கொண்டிருக்கும் வெறுப்புப் பிரச்சாரத்தைத் தடுத்திடத் தவறும் அதிகாரிகளும், அரசில் பொறுப்பு வகிப்பவர்களும், நடவடிக்கை எடுக்க ஓர் வழி பிறக்கும். அவர்கள் மீது எடுக் கப்படும் நடவடிக்கை எப்படி அமையும்?

இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் எந்த அளவுக்கு சங்கப் பரிவாரம் தன்னுடைய வெறுப்புப் பிரச்சாரத்தைக் குறைக்கும் என்ப தெல்லாம் சட்டம் வந்தபின்தான் தெரியவரும். ஆனால், காங்கிரஸ் அரசு பாரதீய ஜனதா கட்சி யுடன் இந்த விசயத்தில் கைகோர்த்துக் கொண்டு இந்தக் குளிர்கால கூட்டத் தொடரிலும் காலை வாரி விட்டது.

2005-இல் வரையப்பட்ட இந்தச் சட்டம் இன்னும் நாடாளுமன்றத்தை எட்டிக் கூடப் பார்த்ததில்லை. இப்படி ஏறத்தாழ பத்து வருடமாக பம்மாத்து காட்டி முஸ்லிம்களை ஏமாற்றி வருகின்றது. காங்கிரஸ் கட்சி என்ற இரவு நேர பாரதீய ஜனதா கட்சி.

2014 பெப்ருவரியில் ஓர் இடைக்கால பட்ஜெட் கூட்டம் வரும். அதிலும் இந்தச் சட்டம் வரும் என்பதற்கு எந்த உத்திரவாத முமில்லை.

சட்டத்தின் முக்கிய பகுதிகளையெல்லாம் முனை மழுங்கிப் போகச் செய்த பின் இந்தச் சட்டம் வந்து சாதிக்கப் போவதில்லை என விரக்தியோடு பேசுகின்றார்கள் சட்ட வல்லுநர்கள்.

மொத்தத்தில் இரவு நேர பாரதீய ஜனதாவான காங்கிரஸ் கட்சி முஸ்லிம்களின் முதுகில் தொடர்ந்து குத்தி வருகின்றது. ஏமாற நாம்தான் தயாராக இருந்து வருகின் றோமே!

**இந்தச் சட்டம் குறித்து**
**மு.குலாம் முஹம்மது அவர்கள்**
**ஆற்றிய உரையின் குறுந்தகடு,**
**வைகறை வெளிச்சம்**
**அலுவலகத்தில் கிடைக்கும்.**

## சட்டமும் நாமும்

வைகறை வாசகர் வட்டம், தாருல் இஸ்லாம் இவை இணைந்து கடந்த பல ஆண்டுகளாக இந்த வகுப்புவாத வன்முறைத் தடுப்புச் சட்டத்தை விரைந்து அரங்கேற்றிட சொல்லி பிரச்சாரப் பெரும் போரை நடத்தி வந்திருக்கின்றோம்.

லட்சக்கணக்கான பிரச்சாரப் பிரசுரங்களை வெளியிட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வந்திருக்கின்றோம்.

பல பொதுக் கூட்டங்களையும் நடாத்தி இருக்கின்றோம். எந்த இலக்கமும் இந்தச் சட்டத்தை இந்த அளவுக்கு வலியுத்தவில்லை.

சுருங்கச் சொன்னால் மத்திய அரசுக்குப் பல அழுத்தங்களைக் கொடுத்து வந்திருக்கின்றோம். தமிழகத்தில் மட்டுமல்ல, நம்மால் இயன்றவரை அகில இந்திய தளத்திலும் இதனைச் செய்து வந்திருக்கின்றோம்.

இந்த அழுத்தங்களுக்குப் பின்தான் காங்கிரஸ் அரசு குப்பைக் கூடையில் போட்டு வைத்திருந்த இந்தச் சட்டத்தை எடுத்து தூசு தட்டி, திடுதிப்பென குளிர்கால கூட்டத் தொடரில் கொண்டு வருவதாக அறிவித்தது. அதிலும் ஏமாற்றியது.